உ

திருச்சிற்றம்பலம்
மஞ்சா போற்றி! மணாளா போற்றி!
பஞ்சேர் அடியாள் பங்கா போற்றி!

# ஐம்பூத திருப்பதிகளுக்குரிய திருப்பதிகங்கள்



நீர் - திருஆனைக்கா



தீ - திருஅண்ணாமலை





ஆகாயம் - சிதம்பரம்




நிலம் - காஞ்சீபுரம்



வாயு - திருக்காளத்தி

திருவளர் நம்பி : **சொ.கோகுலகிருஷ்ணன், B.E.,**
திருவளர் நங்கை : **மா.சுமிதா, B.E.,**
ஆகியோரது திருப்பெருகு திருமணத்தன்று செய்யப்பட்ட **எழில் ஞான பூசை**
**கலியாணத் திருநாள் : 9.7.2003, புதன் கிழமை**

# நால்வர் பொற்றாள் எம் உயிர்த்துணையே




பாரிடை, ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி !
நீரிடை, நான்காய் நிகழ்ந்தாய் போற்றி !
தீயிடை, மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி !
வளியிடை, இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி !
வெளியிடை, ஒன்றாய் விளைந்தாய் போற்றி !

– போற்றித் திரு அகவல்

## தித்திக்கும் திருவாசகம்

புவனா பிரிண்டர்ஸ், கள்ளத்தெரு, திருச்சி – 8 போன்: 2701578.

திருச்சிற்றம்பலம்

# வணங்கி மகிழ்கிறோம்

ஏறுடை ஈசன் இப்புவனியை உய்ய, கூறுடை மங்கையும் தானும் ... வேறு வேறு உருவில் அருள்புரிகின்றான். அருவுருவக் ...டன் அமர்ந்து எம்பெருமான் அருளாட்சி புரியும் ஆலயங்களை ...ரட்டம், சப்தவிடங்கள், சப்த ஸ்தானம், பஞ்ச சபைகள், சப்த தீர்த்தங்கள், பஞ்ச பூதங்கள் என்று பல்வாறாக வகுத்து வழிபாடு செய்வதை சைவர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். அவ்வழிபாட்டுக்கு துணையாய் இருக்கும் வண்ணம் இத் திருத்தலங்களுக்கு உரிய திருமுறைப் பாடல்களின் தொகுப்புகள் அவ்வப்போது அன்பர்களால் வெளியிடப்படுகின்றன.

திருமுறை இன்னிசை நிகழ்ச்சிகளில் "தோடு", "கூற்று", "பித்தா" ஆகியபதிகங்களைப் பாடியபின் பஞ்ச பூதத் தலங்களுக்குரிய திருமுறைப் பாடல்களை விண்ணப்பம் செய்வது ஓதுவா மூர்த்திகளின் மரபு ஆகும்.

இத்தகைய பாராயணத்திற்கும், பஞ்சபூத திருத்தலங்களின் வழிபாட்டிற்கும் பயன்படும் வண்ணம் ஒரு தொகுப்பு வெளியிடுவது எங்கள் நீண்ட நாள் உள்ளக் கிடக்கை. திருவருள் துணைசெய்ய, நாங்கள் பிறந்து மொழி பயின்ற ஊராகிய **திருச்சிக்கல்,** அன்னையாய் அத்தனாய் தொடர்ந்து எங்களை ஆளாய்க் கொண்ட **திருஎறும்பியூர்,** உத்தமனை தொடர்ந்து உள்கும் உணர்வு நல்கும் **திருவொற்றியூர்,** இத்திருமணத்தின் மூலம் நாங்கள் அணைத்துக் கொள்ளும் **திருமாற்பேறு,** தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம் நல்கும் **திருஆரூர்** ஆகிய திருத்தலங்களுக்காக ஒவ்வொரு பதிகத்தையும், ஐம்பூத திருத் தலங்களுக்குரிய பதிகங்களை உள்ளடக்கிய இந்த தொகுப்பை "**யாமும திறம் ஈசர் மலர்க்கழல் வாழ்த்தல்**" என்னும் கோட்பாடுடைய மெய்யடியார்கள் ஆகிய உங்களின் திருவடிகட்கு, **எங்கள் புதல்வியாரின் கலியாண திருநாளான** இன்று பணிவுடன் அளிக்கின்றோம்.

இந்த எண்ணத்தை எங்களுக்கு ஏற்படுத்திய இறைவன் திருவடிகளுக்கு நன்றி தெரிவித்து, தொகுப்புக்குரிய கருத்துக்களை

அவ்வப்போது பேரருள் கூர்ந்து பெரியபுராண தொடர் சொற்பொழிவு வாயிலாக வழங்கிய சிவராகவன் ஐயா அவர்கள் திருவடியினையும், அவர் அடிச்சுவட்டில் பிறழாது, திருநீற்று ஒளியினில் விளங்கும் மேன்மையுடன் செல்லும் **இறையோன் அடியார் சீர்போற்றும் எம்பிரான் சேக்கிழார் அடிபே**ணும் **உறையூர் அடியார் திருக்கூட்டத்தினரின்** திருவடி நெஞ்சார்ந்த நன்றியுடன் வணங்குகிறோம்.

பதிப்பாசிரியர் பொறுப்பேற்று, முனைவர் சிவத்திரு கு. சுந்தரமூர்த்தி, வெளியிட்ட, வரலாற்றுமுறை திருஞானசம்பந்தர் சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள் தேவார நூல்களும், கைலாசபுரம், சிவத்திரு த. பழனிவேல் ஐயா அவர்கள் கொடுத்து உதவிய தல வரலாற்று நூல்களும் இத்தொகுப்பிற்கு மிகவும் துணையாய் இருந்தன என்பதையும் நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

சைவமெய்த்திருவின் சார்வே பொருளெனச்சாறும் உங்கள் பொன்னார்த் திருவடிகளை முக்கரணங்களாலும் வணங்கி,

**செல்வன் சொ. கோகுல கிருஷ்ணன்,**

**செல்வி மா. சுமிதா**

ஆகிய மணமக்களுக்கு திருமுறை உணர்வு தோய்ந்த உங்களது அன்பையும் மேலான ஆசியையும் வழங்கும்படி இறைஞ்சுகிறோம்.

*நிலம் நீர் நெருப்புயிர் நீள் விசும்பு நிலாப்பகலோன்*
*புலனாய மைந்தனோ(டு) எண் வகையாய்ப் புணர்ந்து நின்றான்*
*உலகேழ் எனத்திசை பத்(து) எனத்தான் ஒருவனுமே*
*பலவாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ.*

*திருச்சிற்றம்பலம்*

தங்களன்புள்ள

**சா. மாதவன்**

**திருமதி மா. அமுதா**

என் : 6, ராம் காலனி, மேற்கு மாம்பலம்.

சென்னை - 33.

9.7.2003

 5-1

# அருளாளர்கள் துதி

*திருச்சிற்றம்பலம்*

## ஆளுடைய பிள்ளையார் திருஞான சம்பந்த மூர்த்தி திருவடிகள் போற்றி

பரசமய கோளரியைப் பாலறா வாயனைப்பூம்
பழனம் சூழ்ந்த
சிரபுரத்துத் திருஞான சம்பந்தப் பெருமானைத்
தேய மெல்லாம்
குரவையிடத் தமிழ்வேதம் விரித்தருளும் கவுணியர்தம்
குலதீ பத்தை
விரவியெமை ஆளுடைய வென்றிமழ இளங் களிற்றை
விரும்பி வாழ்வாம்

## ஆண்ட அரசு திருநாவுக்கரசு பெருமான் திருவடிகள் போற்றி

இடையறாப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும்
உழவா ரத்திண்
படையறாத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே
பதித்த நெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன்
ஞானப் பாடல்
தொடையறாச் செவ்வாயும் சிவவேடப் பொலிவழகும்
துதித்து வாழ்வாம் !

## ஆளுடைய நம்பி சுந்தரமூர்த்தி நாயனார் திருவடிகள் போற்றி

ஒரு மணத்தைச் சிதைவு செய்து வல்வழக்கிட்டு ஆட்கொண்ட
உவனைக் கொண்ட
இருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட வல்லாளன்
எல்லாமுய்யப்

பெருமணச்சீர்த் திருத்தொண்டத் தொகைவிரித்த பேரருளின்
பெருமாள் என்றும்
திருமணக்கோலப் பெருமாள் மறைப் பெருமாள் எமது குல
தெய்வம் ஆமால் !

## ஆளுடைய அடிகள் மாணிக்க வாசக சுவாமிகள் திருவடிகள் போற்றி

பெருந்துறையிற் சிவபெருமான் அருளுதலும் பெருங்கருணைப்
பெற்றி நோக்கிக்
கரைந்து கரைந்து இரு கண்ணீர் மழைவாரத் துரியநிலை
கடந்து போந்து
திருந்து பெருஞ் சிவபோகக் கொழுந்தேறல் வாய்மடுத்துத்
தேக்கிச் செம்மாந் (து)
இருந்தருளும் பெருங்கீர்த்தி வாதவூர் அடிகள் அடி
இணைகள் போற்றி !

## தெய்வச் சேக்கிழார் பெருமான் திருவடிகள் போற்றி

தூக்கு சீர்த் திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கி னாற்சொல வல்லபிரான் எங்கள்
பாக்கியப் பயனாப் பதிகுன் றைவாழ்
சேக்கி ழானடி சென்னி இருத்துவாம் !

## ஞாலம் உய்ய வந்த நாயன்மார்கள் திருவடிகள் போற்றி

தத்து மூதெயில் மூன்றும் தழலெழ
முத்து மூரல் முகிழ்த்த நிராமய
சித்து மூர்த்திதன் தாளினை சேர்அறு
பத்து மூவர் பதமலர் போற்றுவோம் !

*திருச்சிற்றம்பலம்*

5-1

## ஐம்பூத திருத்தலங்களைப் பற்றிய சிறு குறிப்பு

## திருக்கச்சி ஏகம்பம்

பஞ்ச பூத தலங்களுள் இது சக்தித் தன்மை வாய்ந்த நிலத்துக்குரிய தலமாகும். அனைத்துலகும் ஈன்ற அன்னையாம் உமா தேவியார் இறைவன்பால் கேட்டருளிய ஆகம முறைப்படி உலகம் உய்ய இறைவனைப் பூசிக்கும் பொருட்டு திருக்கயிலையினின்றும் வந்தருளி, கம்பா ஆற்றின்கரையில் முளைத்தெழுந்த மூல லிங்கத்தினைக் கண்டு பூசித்த தலமாகும். பூசையின்போது கம்பா நதி பெருக்கெடுத்து வர, அன்பின் மிகுதியால் நடுங்கி அம்மையார் இறைவனைத் தழுவிக் கொண்டமையால் ஏகம்பம் என்று பெயர் பெற்றது. (கம்பம் = நடுக்கம்) அம்மையார் தன் வலக்கையுடன் இறைவனை நெருக்கி இறுகும்படி தழுவ, இறைவன் நெகிழ்ந்து தம் திருமேனியைக் குழைந்து காட்டி வளைத்தழும்பும் முலைச்சுவடும் பெற்று தவம் தழுவக்குழைந்த நாதராக காட்சியளிக்கிறார். தலத்தின் விருட்சம் மாமரம் என்பதால் ஏகாம்பரம் என்றும் இத்தலத்திறைவன் கூறப்படுவார். தீய என்பன கனவிலும் நினையா சிந்தை தூய மாந்தர்வாழ் தொண்டை நாட்டில் உள்ள இந்நகரம் கல்வியை கரையிலாத காஞ்சிமாநகர் என்று தேவாரத்தில் பேசப்படும். பெரியபுராணத்தில் திருக்குறிப்புத் தொண்டர் வரலாற்றில் இந்நகரத்தின் விம்மிதங்கள் மிகவும் விரிவாகப் பேசப்படும். ஏழு திருமுறைகளில் இடம்பெற்ற சிறப்புடையது இத்தலம். நாயன்மார்களில் திருக்குறிப்புத் தொண்டர், ஐயடிகள் காடவர் கோன் மற்றும் சாக்கிய நாயனார் இத்தலத்தில் அருள் பெற்றவர்கள். ஒற்றியூரில் இரு கண்களையும் இழந்த சுந்தரர் இத்தலத்து இறைவன் அருளால் இழந்த கண்களில் ஒன்றை மீளப் பெறுகிறார். சிவனிடம் அம்மையார் வேண்டிப் பெற்ற வரங்கள் நாம் நினைவில் கொள்ள வேண்டியவை : சிவ பூசை என்றும் மாறாது நிலைத்திருத்தல், காஞ்சித் திருப்பதியில் எல்லா அறங்களையும் செய்யும்படி அருளுதல், திருவடிப் பிழைத்தல் ஒன்றொழிய வேறு செய்வினை எதுவாயினும் பொறுத்து அருளுதல். காஞ்சி மாநகரம், பாடல் பெற்ற ஐந்து திருத்தலங்கள் விளங்கும் புண்ணியப் பதியாகும்.

## திரு ஆனைக்கா

பஞ்சபூத தலங்களில் இது நீருக்குரிய தலமாகும். காவிரி ஆற்று நீரையே சிவலிங்கத் திருமேனியாக்கி அம்பிகை இத்தலத்தில் பூசித்தார் என்பது வரலாறு. இன்றும், இலிங்க மூலத்தில் நின்று நீர் பெருகி வருவதைக் காணலாம். காவிரியின் வடபால் திகழும் இச் சிவத்தலம் யானைப் பூசித்து பேறு பெற்றதால் திரு ஆனைக்கா என்றும் வெண்நாவல் மரத்தின்கீழ் பெருமான் வீற்றிருப்பதால் ஜம்புகேசுவரம் என்றும் கூறப்படும். இறைவன் பெயர் ஆனைக்கா அண்ணல், ஜம்புகேசுவரர், (ஜம்புலிங்கம், அப்புலிங்கம் என்று கூறுவர்) இறைவியின் பெயர் அகிலாண்டநாயகி. இறைவனை செழுநீர்த்திரள் என்று அப்பர் பெருமான் கூறுவார். இம்மூர்த்தி அப்புலிங்கம் என்றும் அழைக்கப்படும். ஞான வழிவான சம்பு முனிவர் இங்கு வெண்நாவல் மரமாக விளங்குகின்றார்.

எண்தோள் ஈசற்கு எழில்மாடம் எழுபது செய்து அரசாண்ட கோச்செங்க சோழன் முற்பிறவியில் சிலந்தியாய் இருந்து இத்தலத்து இறைவனை வழிபட்ட வரலாறை மூவர் முதலிகளும் பாடியுள்ளனர். மூவரும் பாடியுள்ள இத்தலத்திற்கு உள்ள திருப்பதிகங்கள் ஏழு. திருவாசகம், ஐயடிகள் காடவர் கோன் இயற்றிய க்ஷேத்திரத் திருவெண்பா ஆகியவைகளும் இறைவனின் பெருமையை கூறுகிறது. இத்தலத்தில் உச்சிக்கால பூசையில் அம்பாளே சுவாமியை பூசிப்பதாக ஐதீகம். அம்பாள் சந்நிதிக்குரிய அர்ச்சகர் அம்பாள் வேடத்தோடு வாத்தியங்கள் சூழ சுவாமி திருமுன்பு வந்து சுவாமியை பூசித்து பின்னர் கோவழிபாடு செய்து அம்பாள் பூசனைக்கு செல்வார். இங்கு நடைபெறும் விழாக்களில் பஞ்சப்பிரகாரம் மிகவும் சிறப்புடையது. இக்கோவிலின் ஐந்தாம் சுற்றிலுள்ள திருமதில் சிவபெருமானே மேற்பார்வையிட்டு, திருநீற்றைக் கூலியாகக் கொடுத்து கட்டுவித்த காரணத்தால் இதை திருநீற்றான் திருமதில் என்று கூறுவர். இம்மதிலை சேர்த்து வலம் வருவோர் பல்வகை பேறுகளையும் பெறுவர். வலஞ்செய்வார் அவர் வல்வினைத் தீர்க்கும் மருந்து என்று இத்தலத்து தேவாரம் பேசும்.

## திருஅண்ணாமலை

பஞ்சு பூதத் தலங்களுள் நடு நாயகமான அக்கினித் தலமாகவும் நடுநாட்டுச் சிவத்தலங்கள் இருபத்தியிரண்டனுள் சிறப்புடைய ஒன்றாகவும், ஞானதபோதனருக்கு உறைவிடமாகவும் இத்தலம் அமைந்துள்ளது. நினைத்த மாத்திரத்தில் முத்தி அளிக்கக்கூடிய தலமாக இது போற்றப்படுகிறது. படைத்தற் கடவுளாகிய பிரமனும் காத்தற் கடவுளாகிய பெருமாளும் அகங்காரம் கொண்டு தாம் தாமே பெரியர் என்று பிணக்குற்றதாலே, முழு முதற் பெருமானாகிய சிவபெருமான் அவர்கள் முன் தோன்றி நமது அடியையும் முடியையும் கண்டு வந்தவர் பெரியராவர் எனத் திருவாய் மலர்ந்தருள, பன்றியாய்ப் பாரிடந்தும், அன்னமாய் மேலுயர்ந்தும் காண முயற்சித்து தோல்வியுற்றனர். சோர்வு மிகுந்த பங்கையத்தானும் பாம்பணையானும் தங்கள் அகங்கார இருள் அகன்று தன்னிகரில்லாத் தனிப்பெருஞ் சோதியைப் பரவித் துதிக்க, அவர்களின் வேண்டுகோளுக்கிறங்கிய பெருமான் சிவலிங்கத் திருஉரு கொண்டு அருளினர். இலிங்கோற்பவத்தின் தோற்றமாகிய இது நிகழ்ந்த இடம் திருஅண்ணாமலையாகும். இதை ஒட்டியே ஆண்டு தோறும் அகில உலகமும் போற்றும் வண்ணம், கார்த்திகை தீபவிழா நடைபெறுகிறது. இக்கார்த்திகை தீபத்தின் சிறப்பை திருஞான சம்பந்தர் தமது திருக்கபாலீச்சுர திருப்பதிகத்தின் மூலமும் அறியலாம். திருப்பதிகங்கள் பாடி திருஞானசம்பந்த பெருமான் இங்கு தங்கு விருப்பில் வீற்றிருந்தார் என்பதும், திருநாவுக்கரசர் சுவாமிகள் இத்தலத்தைத் தொழுது திளைத்து தங்கு பிறப்பே வீட்டினுக்கு மேலாம் பெருமை சாதித்தார் என்பதும் பெரியபுராணம் நமக்குக் காட்டும் உண்மையாகும். மாணிக்கவாசக சுவாமிகள் திருஎம்பாவை, திருஅம்மானை, ஆகிய பாமாலைகள் அருளியதும் இத்தலத்தில்தான் என்று கூறப்படுகிறது. இத்தலத்தை நினைத்து வழிபட மேல் வினைகள் மட்டுமன்றி, உள் வினைகளும், வருவினைகளும் நீங்கப்பெறுவது திண்ணம் என்று தேவாரம் பேசும்.

## திருக்காளத்தி

பஞ்சபூத தலங்களில் வாயுத் தலமாக போற்றப்பெறும் இது திருமால், இந்திரன், பிரமன் ஆகியோர்கள் வழிப்பட்ட தலமாகும். சீ என்ற பெயர் கொண்ட சிலந்திக்காகவும், காளன் என்ற பெயர் கொண்ட நாகத்திற்காகவும், அத்தி என்னும் யானைக்காகவும் அவர்கள் வழிபாட்டுக்கு ஏற்ப உருவம் கொண்டதால் இவ்விறைவன் திருக்காளத்தி அப்பர் என்னும் திருநாமம் கொண்டு விளங்குகிறார். இத்தலத்தில் பாயும் பொன்முகலி ஆறு மிகப்பெறும் புண்ணிய தீர்த்தமாக கருதப்படும். இத்தலத்தில் தான் கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்ப நாயனார் திருத்தொண்டு செய்து, நாயன்மார்களிலேயே மிகக் குறைந்த காலத்தில் (ஆறே நாட்களில்), சிவபெருமான் திருவருளுக்குப் பாத்திரமானார். இத்தலத்தில் இறைவனை கண்ணப்பநாயனாருடன் சேர்ந்து வழிபடுவதே மூவர் முதலிகளும் நமக்குக் காட்டும் நெறியாகும். மாணிக்க வாசக சுவாமிகளும், திருவாசகத்தில் கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை என்ற தொடர் மூலம் இந்நாயனாரின் எல்லையில்லா அன்பின் தன்மையை எடுத்துரைக்கிறார். ஞானப்பூங்கோதா என்னும் திருநாமத்துடன் விளங்கும் அம்மையுடன் சேர்த்து காளத்தி அப்பரை வழிபட அனைத்து நலன்களும் கிட்டும். இத்தலத்தைச் சிறப்பித்து கயிலை பாதி, காளத்தி பாதி என்னும் நூலை நக்கீரர் இயற்றியுள்ளார். இத்தலம் தென் கயிலை என்றும் போற்றப்படும். கண்ணப்ப நாயனார் பேரன்பைச் சிறப்பித்து இறைவன் திருவாய் மலர்ந்தருளியது :

**"அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்,**

**அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவென்றும்**

**அவனுடைய செயலெல்லாம் நமக்கினியவாம் என்றும்**

**அவனுடைய நிலை இவ்வாறு அறி நீ"**

## திருத்தில்லை

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றாலும் சிறப்புற்று விளங்குவதும், சைவசமயாசாரியர் நால்வராலும், ஏனைய அருளாளர்கள் பலராலும் புகழ்ந்து போற்றப் பெறுவதும், பஞ்சபூதத் தலங்களில் ஒன்றாகத் திகழ்வதும் தரிசிக்க முத்தி அளிப்பதுமாகிய திருத்தலம் தில்லை மூதூர் என்னும் சிதம்பரம் ஆகும். சைவத்தலங்கள் எல்லாவற்றுக்கும் தலைமையாதல் பற்றியும் தொன்மையுடையதாதல் பற்றியும் இத்தலம் கோயில் என வழங்கப்பெறுவது. இஃதொன்றே இதன் தனிப்பெரும் சிறப்பிற்கு போதிய சான்றாகும்.

ஊர் தில்லை எனவும், ஆலயம் கோயில் எனவும், இறைவன் அருவுருவத் திருமேனியோடு அமர்ந்திருக்கும் இடம் திருமூலட்டானம் எனவும் உமையம்மை காண ஐந்துள் நடனம் புரிந்தருளும் இடம் சித்சபை அல்லது சிற்றம்பலம் எனவும் பெயர் பெற்று விளங்குகின்றன.

நம்பி ஆண்டார் நம்பிகளைக் கொண்டு சீர்மிகு ராஜராஜ சோழன் திருமுறைகளை வெளிப்படுத்தியது இங்குதான். இதனடிப்படையில் தான் யாதொரு திருமுறை தொடர்புடைய நிகழ்வின் தொடக்கத்திலும் நிறைவிலும் திருச்சிற்றம்பலம் என்று விண்ணப்பிக்கப்படுகிறது.

மனிதனுடைய இயக்கம் இதயத் துடிப்பை ஆதாரமாகக் கொண்டது போல உலக இயக்கம் அனைத்தும் சிதம்பரத்தில் விளங்கும் பெருமானின் ஆனந்தத் தாண்டவத்தை அடிப்படையாகக் கொண்டது. தில்லைக் கூத்தனின் திருநடனத்தில் ஐந்தொழிலும் அடங்கியுள்ள நுட்பத்தை தோற்றம் துடியதனில் என்னும் மனவாசகங் கடந்தாரின் உண்மை விளக்கப் பாடலின் மூலம் நாம் அறியலாம். புலிக்கால் முனிவர் என்னும் வியாக்ரபாதர் தவம் செய்து பெருமான் திருநடனத்தைக் கண்டதால் புலியூர் என்னும்

பெயர் பெற்றது. பதஞ்சலி முனிவரும் பெருமான் திருநடனத்தை கண்டுகளிக்கும் பேறு பெற்றவர். இத்தலம் சித்சபை, கனகசபை, தேவசபை, நிருத்த சபை, இராச சபை என்று ஐந்து சபைகள் கூடியதாகும். ... பொற்பாதமும் காணப்பெற்றால் மனித்தப் பிறவியும் வேண்டுவதே என்னும் அப்பர் கூற்றும்

ஊனடைந்த உடம்பின் பிறவியே
தானடைந்த உறுதியைச் சாருமால்
தேனடைந்த மலர்ப்பொழில் **தில்லையுள்**
மாநடஞ் செய் வரதர் பொற்றாள் தொழ

என்னும் சேக்கிழார் திருவாக்கும் இத்திருத்தலத்தின் சொல்லொணா பெருமையை எடுத்துக் காட்டும்.

மூவர் முதலிகளும் இத்தலத்தை முறையே வணங்கி ஆனந்த வெள்ளத்தில் திளைத்து அருளிய பதிகங்களும், மாணிக்க வாசகர் அருளிய திருவாசகத்தின் பல பதிகங்களும் இத்தலத்தின் சிறப்பையும், பெருமானின் அருளாற்றலையும் அனைவரும் நினைந்து உருகும்படி அமைந்துள்ளன.

சிற்றம்பலமே இடமாய் நாடினாய், புலியூர் சிற்றம்பலமே புக்கார் தாமே, பொலிதரு புலியூர் புக்கு இனிது அருளினன் என்னும் திருவாக்குகளின் மூலம் பல்வேறு தலங்களில் அமர்ந்து அருளும் பெருமான் விரும்பிப் புகும் இடம் தில்லை என்பது வலியுறுத்தப் படுகிறது.

தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி !
இன்றெனக் காரமு தானாய் போற்றி !

# 1. திருக்கச்சிஏகம்பம்

இறைவர் : ஏகாம்பரநாதர் இறைவி : ஏலவார்குழலி

## திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது

## பதிகம் : 1

திருஞான சம்பந்த சுவாமிகளின் 6ஆவது செலவு நயப்பில், பெரும்பகுதி தொண்டை நாட்டு தொடர்புடையதாகும். வேதமோடு சைவநீதி விளங்கவந்த கவுணியனார் காஞ்சியை அணைந்து, மதிற்புறத்தே சென்று சேர்ந்து வணங்கினார். அளவற்ற தொண்டர்கள் அஞ்சலித்து வாழ்த்திய ஒலி வானளாவப் பெருகிற்று. பூமாரியும், பொற்சுண்ணமும் புயல்போல் பொழிந்தன. காமக்கண்ணி தழுவக்குழைந்த கச்சியேகம்பரை, உருகிய அன்பு உள்ளலைப்பப் பருகிய மெய்யுணர்வினோடும் பாடியருளிய பதிகம் இது.

திருமுறை (2) பண் : இந்தளம்

*திருச்சிற்றம்பலம்*

மறையானை மாசு இலாப் புன்சடை மல்கு வெண்
பிறையானைப் பெண்ணொடு ஆண்ஆகிய பெம்மானை
இறையானை ஏர்கொள் கச்சித் திரு ஏகம்பத்து
உறைவானை அல்லது உள்காது எனது உள்ளமே. 1

நொச்சியே வன்னி கொன்றை மதி கூவிளம்
உச்சியே புனைதல் வேடம் விடைஊர்தியான்
கச்சி ஏகம்பம் மேயகறைக் கண்டனை
நச்சியே தொழுமின் நும்மேல் வினை நையுமே. 2

பார் ஆரும் முழவம் மொந்தை குழல் யாழ் ஒலி
சீராலே பாடல் ஆடல் சிதைவுஇல்லதுஓர்
ஏர்ஆர் பூங் கச்சி ஏகம்பனை எம்மானைச்
சேராதார் இன்பம்ஆயந்நெறி சேராரே. 3

குன்று ஏய்க்கு நெடுவெண்மாடக் கொடி கூடிப்போய்
மின் தேய்க்கும் முகில்கள் தோயும் வியன் கச்சியுள்
மன்று ஏய்க்கும் மல்கு சீரால் மலி ஏகம்பம்
சென்று ஏய்க்கும் சிந்தையார்மேல் வினை சேராவே. 4

சடையானைத் தலை கை ஏந்திப் பலி தருவார்தம்
கடையே போய் மூன்றும் கொண்டான் கலிக் கச்சியுள்
புடையே பொன் மலரும் கம்பைக்கரை ஏகம்பம்
உடையானை அல்லது உள்காது எனது உள்ளமே. 5

மழுவாளோடு எழில்கொள் சூலப்படை வல்லார்தம்
கெழு வானோர் இமையர் உச்சி உமையாள் கங்கை
வழுவாமே மல்கு சீரால் வளர் ஏகம்பம்
தொழுவாரே விழுமியார் மேல்வினை துன்னாவே. 6

விண் உளார் மறைகள்வேதம் விரித்து ஓதுவார்
கண் உளார் கழலின் வெல்வார் கரி காலனை
நண்ணுவார் எழில் கொள் கச்சிநகர் ஏகம்பத்து
அண்ணலார் ஆடுகின்ற அலங்காரம்மே. 7

தூயானைத் தூயஆயம்மறை ஓதிய
வாயானை வாள் அரக்கன் வலி வாட்டிய
தீயானைத் தீது இல் கச்சித் திரு ஏகம்பம்
மேயானை மேவுவார் என் தலை மேலாரே. 8

நாகம் பூண் ஏறுஅது ஏறல் நறுங்கொன்றை தார்
பாகம் பெண் பலியும் ஏற்பர் மறை பாடுவர்
ஏகம்பம் மேவி ஆடும் இறை இருவர்க்கும்
மா கம்பம் அறியும் வண்ணத்தவன் அல்லனே. 9

போதியார் பிண்டியார் என்று இவர் பொய்ந்நூலை
வாதியா வம்மின் அம் மா எனும் கச்சியுள்
ஆதியார் மேவி ஆடும் திரு ஏகம்பம்
நீதியால் தொழுமின் நும்மேல் வினை நில்லவே. 10

அம் தண் பூங்கச்சி ஏகம்பனை அம்மானைக்
கந்தன் பூங்காழி ஊரன் கலிக்கோவையால்
சந்தமே பாடவல்ல தமிழ் ஞானசம்
பந்தன் சொல் பாடி ஆடக்கெடும் பாவமே. 11

*திருச்சிற்றம்பலம்*

காஞ்சியிலுள்ள திருமடத்தில் இருந்தருளிய பிள்ளையார், இறைவியாரின் காமக் கோட்டத்தைப் பணிந்து மகிழ்ந்திருந்த நாட்களில், திருவியமகம், திருவிருக்குக் குறள், திருப்பதிகமாலை ஆகியவற்றை இறைவற்கு அணிவித்து மகிழ்ந்தார்.

## பதிகம் : 2 - திருவியமகம்
## (இறைவர் திருமுன்பு)

திருமுறை (3) பண் : பழம்பஞ்சுரம்

*திருச்சிற்றம்பலம்*

பாயும் மால்விடை மேல் ஒரு பாகனே
பாவை தன்உருமேல் ஒரு பாகனே

தூய வானவர் வேதத் துவனியே
சோதி மால் எரி வேதத்து வனியே
ஆயும் நன் பொருள் நுண்பொருள் ஆதியே
ஆலநீழல் அரும்பொருள் ஆதியே
காய வில் மதன் பட்டது கம்பமே
கண்நுதல் பரமற்கு இடம் கம்பமே. 1

சடை அணிந்ததும் வெண்தலை மாலையே
தம் உடம்பிலும் வெண்தலை மாலையே
படையில் அம் கையில் சூல் அம் அது என்பதே
பரந்து இலங்கு ஐயில் சூலம் அது என்பதே
புடை பரப்பன பூதகணங்களே
போற்றுஇசைப்பன பூதகணங்களே
கடைகள்தோறும் இரப்பது மிச்சையே
கம்பமேவி இருப்பதும் இச்சையே. 2

வெள்எருக்கொடு தும்பை மிலைச்சியே
ஏறு முன்செலத் தும்பை மிலைச்சியே
அள்ளி நீறுஅது பூசுவ தாகமே
ஆன மாசுணம் மூசுவது ஆகமே
புள்ளி ஆடை உடுப்பது கத்துமே
போன ஊழி உடுப்பது உகத்துமே
கள்உலாம் மலர்க் கம்பம் இருப்பதே
காஞ்சி மா நகர்க் கம்பம் இருப்பதே. 3

முற்றல் ஆமை அணிந்த முதல்வரே
மூரி ஆமை அணிந்த முதல்வனே
பற்றி வாள்அரவு ஆட்டும் பரிசரே
பாலும் நெய் உகந்து ஆட்டும் பரிசரே

வற்றல்ஓடு கலம் பலி தேர்வதே
வானினோடு கலம் பலி தேர்வதே
கற்றிலா மனம் கம்பம் இருப்பதே
காஞ்சி மா நகர்க் கம்பம் இருப்பதே. 4

வேடன் ஆகி விசையற்கு அருளியே
வேலைநஞ்சம் மிசையற் கருளியே
ஆடுபாம்பு அரை ஆர்த்தது உடைஅதே
அஞ்சுபூதமும் ஆர்த்தது உடையதே
கோடு வான்மதிக் கண்ணி அழகிதே
குற்றம் இல் மதிக்கண்ணி அழகிதே
காடு வாழ் பதி ஆவதும் உம்மதே
ஏகம்பம் மா பதி ஆவதும் உம்மதே. 5

இரும் புகைக்கொடி தங்கு அழல் கையதே
இமயமாமகள் தம் கழல் கையதே
அரும்பு மொய்த்த மலர்ப் பொறை தாங்கியே
ஆழியான் தன் மலர்ப் பொறை தாங்கியே
பெரும் பகல் நடம்ஆடுதல் செய்துமே
பேதைமார் மனம் வாடுதல் செய்துமே
கரும்பு மொய்த்து எழு கம்பம் இருப்பதே
காஞ்சி மா நகர்க் கம்பம் இருப்பதே. 6

முதிரம் மங்கை தவம் செய்த காலமே
முன்பும் அம் கைதவம் செய்த காலமே
வெதிர்களோடு அகில் சந்தம் உருட்டியே
வேழம் ஓடகில்சந்தம் முருட்டியே
அதிர ஆறு வரத்து அழுவத்தொடே
ஆன்ஐஆடுவரத் தழுவத்தொடே

கதிர் கொள் பூண் முலைக் கம்பம் இருப்பதே
காஞ்சி மா நகர்க் கம்பம் இருப்பதே. 7

பண்டு அரக்கன் எடுத்த பலத்தையே
பாய்ந்து அரக்கல் நெடுத்த பலத்தையே
கொண்டு அரக்கியதும் கால்விரலையே
கோள் அரக்கியதும் கால்வு இரலையே
உண்டு உழன்றதும் முண்டத் தலையிலே
உடுபதிக்கு இடம் உண்டு அத் தலையிலே
கண்டம் நஞ்சம் அடக்கினை கம்பமே
கடவுள் நீ இடம் கொண்டது கம்பமே. 8

தூணி ஆன சுடர்விடு சோதியே
சுத்தம்ஆன சுடர்விடு சோதியே
பேணி ஓடு பிரமப் பறவையே
பித்தன் ஆன பிரமப் பறவையே
சேணினோடு கீழ் ஊழி திரிந்துமே
சித்தமோடு கீழ் ஊழி திரிந்துமே
காண நின்றனர் உற்றது கம்பமே
கடவுள் நீ இடம் உற்றது கம்பமே. 9

ஓர் உடம்பினை ஈர்உரு ஆகவே
உன் பொருள் திறம் ஈர் உரு ஆகவே
ஆரும் மெய்தன் கரிது பெரிதுமே
ஆற்ற எய்தற்கு அரிது பெரிதுமே
தேரரும் அறியாது திகைப்பரே
சித்தமும் மறியா துதி கைப்பரே
கார்நிறத்து அமணர்க்கு ஒரு கம்பமே
கடவுள் நீ இடம் கொண்டது கம்பமே. 10

கந்தம் ஆர் பொழில் சூழ்தரு கம்பமே
காதல் செய்பவர் தீர்த்திடு உகு அம்பமே
புந்தி செய்வது விரும்பிப் புகலியே
பூசுரன் தன் விரும்பிப் புகலியே
அந்தம் இல் பொருள்ஆயின கொண்டுமே
அண்ணலின் பொருள்ஆயின கொண்டுமே
பந்தன் இன் இயல் பாடிய பத்துமே
பாட வல்லவர் ஆயின பத்துமே. 11

*திருச்சிற்றம்பலம்.*

# பதிகம் : 3 – திரு இருக்குக்குறள்

திருமுறை (3) பண் : கொல்லி

*திருச்சிற்றம்பலம்*

கரு ஆர் கச்சித், திரு ஏகம்பத்து
ஒருவா என்ன, மருவா வினையே. 1

மதி ஆர் கச்சி, நதி ஏகம்பம்
விதியால் ஏத்தப், பதி ஆவாரே. 2

கலி ஆர் கச்சி, மலி ஏகம்பம்
பலியால் போற்ற, நலியா வினையே. 3

வரம் ஆர் கச்சிப்புரம் ஏகம்பம்
பரவா ஏத்த, விரவா வினையே. 4

படம் ஆர் கச்சி, இடம் ஏகம்பத்து
உடையாய் என்ன, அடையா வினையே. 5

நலம் ஆர் கச்சி, நிலவு ஏகம்பம்
குலவா ஏத்த, கலவா வினையே. 6

கரியின் உரியின், திரு ஏகம்பன்
பெரிய புரம்மூன்று, எரிசெய்தானே. 7

இலங்கை அரசைத், துலங்க ஊன்றும்
நலம் கொள் கம்பன், இலங்கு சரணே. 8

மறையோன் அரியும், அறியா அனலன்
நெறி ஏகம்பம், குறியால் தொழுமே. 9

பறியாத் தேரர், நெறி இல் கச்சிச்
செறிகொள் கம்பம், குறுகுவோமே. 10

கொச்சை வேந்தன், கச்சிக் கம்பம்
மெச்சும் சொல்லை, நச்சும் புகழே. 11

*திருச்சிற்றம்பலம்.*

# பதிகம் : 4

வேதமோடு சைவநீதி விளங்க வந்த கவுணியனார், திருகச்சி ஏகம்பத்தை பணிந்து போற்றுவார்க்கு, இடர் கெடும் என்று பறை சாற்றும் பதிகம்.

திருமுறை ① பண் : மேகராகக்குறிஞ்சி

*திருச்சிற்றம்பலம்*

வெந்தவெண்பொடிப் பூசும் மார்பின் விரிநூல் ஒருபால் பொருந்தக்
கந்தம் மல்கு குழலியோடும் கடிபொழில் கச்சிதன்னுள்

அந்தம் இல் குணத்தார்அவர் போற்ற அணங்கினோடு ஆடல் புரி
எந்தை மேவிய ஏகம்பம் தொழுதுஏத்த இடர்கெடுமே. 1

வரம் திகழும் அவுணர் மா நகர் மூன்று உடன்மாய்ந்து அவியச்
சரம் துரந்து எரிசெய்த தாழ்சடைச் சங்கரன் மேய இடம்
குருந்தம் மல்லிகை கோங்கு மாதவி நல்ல குரா மரவம்
திருந்து பைம்பொழில் கச்சி ஏகம்பம் சேர இடர் கெடுமே. 2

வண்ண வெண்பொடிப் பூசும் மார்பில் வரிஅரவம் புனைந்து
பெண் அமர்ந்து எரிஆடல் பேணிய பிஞ்ஞகன் மேய இடம்
விண் அமர் நெடுமாடம் ஓங்கி விளங்கிய கச்சி தன்னுள்
திண்ண மாம்பொழில் சூழ்ந்த ஏகம்பம் சேர இடர் கெடுமே. 3

தோலும்நூலும்துதைந்தவரைமார்பில்சுடலைவெண்நீறுஅணிந்து
காலன் மாள்உறக் காலால் காய்ந்த கடவுள் கருதும் இடம்
மாலை வெண்மதி தோயும் மா மதில் கச்சி மா நகருள்
ஏலம் நாறிய சோலை சூழ் ஏகம்பம் ஏத்த இடர் கெடுமே. 4

தோடு அணி மலர்க்கொன்றை சேர் சடைத் தூ மதியம் புனைந்து
பாடல் நால்மறையாகப் பல்கணப்பேய்கள் அவை சூழ
வாடல்வெண்தலையோடு அனல் ஏந்தி மகிழ்ந்து உடன்ஆடல்புரி
சேடர் சேர் கலிக் கச்சி ஏகம்பம் சேர இடர் கெடுமே. 5

சாகம் பொன்வரைஆகத் தானவர் மும்மதில் சாய எய்து
ஆகம் பெண் ஒருபாகம்ஆக அரவொடு நூல் அணிந்து
மாகம் தோய் மணி மாட மா மதில் கச்சி மா நகருள்
ஏகம்பத்து உறை ஈசன் சேவடி ஏத்த இடர் கெடுமே. 6-7

வாள்நிலாமதி புல்கு செஞ்சடை வாள்அரவம் அணிந்து
நாண் இடத்தினில் வாழ்க்கை பேணி நகுதலையில் பலிதேர்ந்து

ஏண்இலா அரக்கன்தன் நீள்முடி பத்தும் இறுத்தவன் ஊர்
சேண்உலாம் பொழில் கச்சி ஏகம்பம் சேர இடர் கெடுமே. 8

பிரமனும் திருமாலும் கைதொழப் பேர்அழல் ஆய பெம்மான்
அரவம் சேர் சடை அந்தணன் அணங்கினொடு அமரும் இடம்
கரவுஇல் வண்கையினார்கள் வாழ் கலிக் கச்சி மா நகருள்
மரவம் சூழ் பொழில் ஏகம்பம் தொழ வல்வினை மாய்ந்து அறுமே. 9

குண்டுபட்டு அமணஆயவரொடும் கூறை தம் மெய் போர்க்கும்
மிண்டர் கட்டிய கட்டுரை அவை கொண்டு விரும்பேன்மின்
விண்டவர் புரம்மூன்றும் வெங்கணை ஒன்றினால் அவியக்
கண்டவன் கலிக் கச்சி ஏகம்பம் காண இடர்கெடுமே. 10

ஏரின் ஆர் பொழில் சூழ்ந்த கச்சி ஏகம்பம் மேயவனைக்
காரின் ஆர் மணிமாடம் ஓங்கு கழுமல நன்நகருள்
பாரின் ஆர் தமிழ் ஞானசம்பந்தன் பரவிய பத்தும் வல்லார்
சீரின் ஆர் புகழ் ஓங்கி விண்ணவரோடும் சேர்பவரே. 11

*திருச்சிற்றம்பலம்*

# திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது

## பதிகம் : 1

தொண்டை நாட்டிலுள்ள திரு ஓத்தூர் பெருமனை வணங்கி, தக்க மொர்ழிமாலைகள் சாத்திப் பணிசெய்து, அப்பதியிலிருந்து எழுந்தருளிய நாவரசர் இடையில் உள்ள பல பதிகளையும் வணங்கித், தையல் தழுவக் குழைந்த பிரான் தங்கும் தெய்வப் பதியென்று வையமுழுதும் தொழுதேத்தும் மதில்சூழ் காஞ்சி மருங்கணைந்தார். ஞாலம் உய்யத்

திருவதிகை நம்பரது பேரருளினாற் சூலைமடுத்து முன் ஆண்ட தொண்டர் வரப்பெற்றோம் என்று காஞ்சிவாணர் முகமெல்லாம் காலை மலரும் கமலம்போற்சாலமலர்ந்து களி சிறப்பத் தழைத்த மனங்களைத் தாங்குவராய், மாடவீதி மணிவாயில் காவணங்களில், தோரணம், கதலி, கமுகு, நிறைபொற்குடம், தீபம், மாலை சூழநிறைத்துக் கொடி எடுத்துக் காஞ்சியை அழகுறுத்தினார்கள். சிவவேடப் பொலிவழகு மிக்க திருநாவுக்கரசரை எதிர்கொண்டனர். இறைஞ்சினர். அப்பரும் அடியரை இறைஞ்சினார். மணிமதிற் காஞ்சிநகர் மறுகுட்போந்து, கம்பர் செம்பொற்கோயில் குறுகினார். திருவாயிலையும் செல்வத் திருமுன்றிலையும் அணைந்து பணிந்தார். கருவார் கச்சித் திருவேகம்பர் கனக மணி மாளிகை சூழ்ந்து வருவாராய்ச், செம்பொன்மலை வல்லி தழுவக் குழைந்த மணிமேனிப் பெருவாழ்வினை முன்கண்டு இறைஞ்சிப் பேரன்பு பெருகிக், கண்ணருவி சொரிந்து, புளகம் புறம்பும் அன்பு அகம்பும் அலைப்ப, நயனம் பயன்பெற்றுத் திளைப்பத் **திருவேகம்பரை மனத்தில் வரவைத்துப்** பாடிய பரவிய சொன்மாலைத் திருப்பதிகம் இது. இப்பதிகத்தின் 9ஆவது பாடலில் மட்டும் தான் இப்பதிகத்திற்குரிய திருத்தலத்தின் பெயராகிய "கச்சி ஏகம்பம்" கூறப்படுகிறது.

திருமுறை : 4 — பண் : காந்தாரம்

*திருச்சிற்றம்பலம்*

கரவு ஆடும் வன்நெஞ்சர்க்கு அரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடை ஏறும் வித்தகனை
அரவாடச் சடை தாழ அங்கையினில் அனல் ஏந்தி
இரவாடும் பெருமானை என் மனத்தே வைத்தேனே. 1

தேன் நோக்கும் கிளிமழலை உமை கேள்வன் செழும் பவளம்
தான் நோக்கும் திருமேனி தழல்உருவாம் சங்கரனை
வான் நோக்கும் வளர்மதி சேர் சடையானை வானோர்க்கும்
ஏனோர்க்கும் பெருமானை என் மனத்தே வைத்தேனே. 2

கைப் போது மலர் தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடி சாய்த்துத் தொழ நின்ற முதல்வனை
அப்போது மலர் தூவி ஐம்புலனும் அகத்து அடக்கி
எப்போதும் இனியானை என் மனத்தே வைத்தேனே. 3

அண்டமாய் ஆதியாய் அருமறையோடு ஐம்பூதப்
பிண்டமாய் உலகுக்கு ஓர் பெய்ப்பொருளாம் பிஞ்ஞகனைத்
தொண்டர்தாம் மலர் தூவிச் சொல்மாலை புனைகின்ற
இண்டைசேர் சடையானை என் மனத்தே வைத்தேனே. 4

ஆறு ஏறு சடையானை ஆயிரம்பேர் அம்மானைப்
பாறு ஏறு படுதலையில் பலி கொள்ளும் பரம்பரனை
நீறு ஏறு திருமேனி நின்மலனை நெடுந்தூவி
ஏறு ஏறும் பெருமானை என் மனத்தே வைத்தேனே. 5

தேசனைத் தேசங்கள் தொழ நின்ற திருமாலால்
பூசனைப் பூசனைகள் உகப்பானைப் பூவின்கண்
வாசனை மலை நிலம் நீர் தீ வளி ஆகாசமாம்
ஈசனை எம்மானை என் மனத்தே வைத்தேனே. 6

நல்லானை நல்லான நால்மறையோடு ஆறுஅங்கம்
வல்லானை வல்லார்கள் மனத்து உறையும் மைந்தனைச்
சொல்லானைச் சொல் ஆர்ந்த பொருளானை துகள் ஏதும்
இல்லானை எம்மானை என் மனத்தே வைத்தேனே. 7

விரித்தானை நால்வர்க்கு வெவ்வேறு வேதங்கள்
புரித்தானைப் பதம் சந்திப் பொருள்உருவாம் புண்ணியனைத்
தரித்தானைக் கங்கைநீர் தாழ்சடைமேல் மதில் மூன்றும்
எரித்தானை எம்மானை என் மனத்தே வைத்தேனே. 8

ஆகம் பத்து அரவு அணையான் அயன் அறிதற்கு அரியானைப்
பாகம் பெண் ஆண் பாகமாய் நின்ற பசுபதியை
மா கம்பம் மறை ஓதும் இறையானை மதில் கச்சி
ஏகம்பம் மேயானை என் மனத்தே வைத்தேனே. 9

அடுத்தானை உரித்தானை அருச்சுனற்குப் பாசுபதம்
கொடுத்தானைக் குலவரையே சிலைஆகக் கூர்அம்பு
தொடுத்தானைப் புரம் எரியச் சுனை மல்கு கயிலாயம்
எடுத்தானைத் தடுத்தானை என் மனத்தே வைத்தேனே. 10

*திருச்சிற்றம்பலம்.*

கையார்ந்த திருத்தொண்டு கழிய, மிகுகாதலொடு கச்சி ஏகம்பனைப் போற்றி எல்லா செந்தமிழ் மாலையும் பாடி அருளினார் கலைவாய்மைக் காவலனார். அத்திருப் பதிகங்களாவன

# பதிகம் : 2

திருமுறை (4) திரு நேரிசை

*திருச்சிற்றம்பலம்*

நம்பனை நகரமூன்றும் எரியுண வெருவ நோக்கும்
அம்பனை அமுதை ஆற்றை அணி பொழில் கச்சியுள்ளே

கம்பனைக் கதிர் வெண்திங்கள் செஞ்சடைக் கடவுள்தன்னைச்
செம்பொனைப் பவளத்தூணைச் சிந்தியா எழுகின்றேனே. 1

ஒரு முழம் உள்ள குட்டம் ஒன்பதுதுளை உடைத்தாய்
அரைமுழம் அதன் அகலம் அதனில் வாழ் முதலை ஐந்து
பெரு முழைவாய்தல் பற்றிக் கிடந்து நான் பிதற்றுகின்றேன்
கருமுகில் தவழும் மாடக் கச்சி ஏகம்பனிரே. 2

மலையினார்மகள் ஓர்பாகம் மைந்தனார் மழு ஒன்று ஏந்திச்
சிலையினால் மதில்கள்மூன்றும் தீ எழச் செற்ற செல்வர்
இலையினார் சூலம் ஏந்தி ஏகம்பம் மேவினாரைத்
தலையினால் வணங்க வல்லார் தலைவர்க்கும் தலைவர்தாமே 3

பூத்த பொற்கொன்றைமாலை புரிசடைக்கு அணிந்த செல்வர்
தீர்த்தம் ஆம் கங்கையானைத் திருமுடி திகழ வைத்து
ஏத்துவார் ஏத்த நின்ற ஏகம்பம் மேவினாரை
வாழ்த்துமாறு அறியமாட்டேன் மால்கொடு மயங்கினேனே. 4

மையின் ஆர் மலர்நெடுங்கண் மங்கை ஓர்பங்கர்ஆகிக்
கையில் ஓர் கபாலம் ஏந்திக் கடைதொறும் பலி கொள்வார் தாம்
எய்வது ஓர் ஏனம் ஓட்டி ஏகம்பம் மேவினாரைக்
கையினால் தொழ வல்லார்க்குக் கடுவினை களையலாமே 5

தரு வினை மருவுங் கங்கை தங்கிய சடையன் எங்கள்
அருவினை அகல நல்கும் அண்ணலை அமரர் போற்றும்.
திருவினைத் திரு ஏகம்பம் செப்பிட உறைய வல்ல
உருவினை உருகி ஆங்கே உள்ளத்தால் உகக்கின்றேனே 6

கொண்டது ஓர் கோலம்ஆகிக் கோலக்கா உடைய கூத்தன்
உண்டது ஓர் நஞ்சம்ஆகி உலகுஎலாம் உய்ய உண்டான்

எண்திசையோரும் ஏத்த நின்ற ஏகம்பன்தன்னைக்
கண்டு நான் அடிமை செய்வான் கருதியே திரிகின்றேனே. 7

படம் உடை அரவினோடு பனிமதி அதனைச் சூடிக்
கடம் உடை உரிவை மூடிக் கண்டவர் அஞ்ச அம்ம
இடம் உடைக் கச்சிதன்னுள் ஏகம்பம் மேவினான்தன்
நடம்உடை ஆடல் காண ஞாலம்தான் உயர்ந்தவாறே. 8

பொன்திகழ் கொன்றைமாலை பொருந்திய நெடுந் தண் மார்பர்
நன்றியிற் புகுந்து என் உள்ளம் மெள்ளவே நவில நின்று
குன்றியில் அடுத்த மேனிக் குவளைஅம்கண்டர் எம்மை
இன் துயில் போது கண்டார் இனியர் ஏகம்பனாரே. 9

துருத்தியார் பழனத்து உள்ளார் தொண்டர்கள்பலரும் ஏத்த
அருத்தியால் அன்பு செய்வார்அவர்அவர்க்கு அருள்கள்செய்து
எருத்தினை இசைய ஏறி ஏகம்பம் மேவினார்க்கு
வருத்தி நின்று அடிமை செய்வார் வல்வினை மாயும் அன்றே 10

*திருச்சிற்றம்பலம்*

# பதிகம் : 3

ஆர்வமுற பணிந்தேத்தி, ஆய்ந்த தமிழ்ச்சொல் மலரால் அப்பர் சுவாமிகள் சாற்றிய சார்வும் தமிழ்மாலைகளில் ஒன்றான இப்பதிகத்தில், "பணி பிழைக்கிற் புளியம்வளாரால் மோதுவிப்பாய்" என்று விண்ணப்பிக்கிறார். எய்துற்ற தியானம் அறா உணர்வும், ஈறின்றி எழும் திருவாசகம், கையில் திகழும் உழவாரம் உடன் கைக்கொண்டு முக்கரணங்களாலும் பார்வாழ பணி செய்தவரின் பணிவுதான் என்னே!

*திருச்சிற்றம்பலம்*

ஓதுவித்தாய் முன் அறஉரை காட்டி அமணரொடே
காதுவித்தாய் கட்ட நோய் பிணி தீர்த்தாய் கலந்துஅருளிப்
போதுவித்தாய் நின் பணி பிழைக்கிற் புளியம்வளாரால்
மோதுவிப்பாய் உகப்பாய் முனிவாய் கச்சி ஏகம்பனே. 1

எத்தைக்கொண்டுஎத்தகைஏழைஅமணொடுஇசைவித்துஎனைக்
கொத்தைக்கு மூங்கர் வழி காட்டுவித்தென்னைக் கோகு செய்தாய்
முத்தின்திரளும் பளிங்கினின் சோதியும் மொய் பவளத்
தொத்தினை ஏய்க்கும் படியாய் பொழில் கச்சி ஏகம்பனே. 2

மெய் அம்பு கோத்த விசயனொடு அன்று ஒரு வேடுவனாய்ப்
பொய் அம்பு எய்து ஆவம் அருளிச் செய்தாய் புரம்மூன்று எரியக்
கை அம்பு எய்தாய் நுன் கழல்அடி போற்றாக் கயவர் நெஞ்சில்
குய்யம் பெய்தாய் கொடி மா மதில் சூழ் கச்சி ஏகம்பனே. 3

குறிக்கொண்டு இருந்து செந்தாமரை ஆயிரம் வைகல்வைகல்
நெறிப்பட இண்டை புனைகின்ற மாலை நிறை அழிப்பான்
கறைக்கண்ட நீ ஒரு பூக் குறைவித்துக் கண் சூல்விப்பதே
பிறைத்துண்ட வார்சடையாய் பெருங்காஞ்சி எம் பிஞ்ஞகனே 4

உரைக்குங்கழிந்துஇங்குஉணர்வுஅரியான்உள்குவார்வினையைக்
கரைக்கும் எனக் கைதொழுவது அல்லால் கதிரோர்கள் எல்லாம்
விரைக்கொண் மலரவன் மால் எண்வசுக்கள் ஏகாதசர்கள்
இரைக்கும் அமிர்தர்க்கு அறிய ஒண்ணான் எங்கள் ஏகம்பனே 5

கரு உற்ற நாள் முதல்ஆக உன் பாதமே காண்பதற்கு
உருகிற்றுஎன்உள்ளமும்நானும்கிடந்துஅலந்துஎய்த்தொழிந்தேன்

திரு ஒற்றியூரா திரு ஆலவாயா திரு ஆரூரா
ஒரு பற்று இலாமையும் கண்டு இரங்காய் கச்சி ஏகம்பனே 6

அரி அயன் இந்திரன் சந்திராதித்தர் அமரர் எல்லாம்
உரிய நின்கொற்றக் கடைத்தலையார் உணங்காக் கிடந்தார்
புரிதரு புன்சடைப் போக முனிவர் புலம்புகின்றார்
எரிதரு செஞ்சடை ஏகம்ப என்னோ திருக்குறிப்பே. 7

பாம்பு அரைச் சேர்த்திப் படருஞ்சடைமுடிப் பால்வண்ணனே
கூம்பலைச் செய்த கரதலத்து அன்பர்கள் கூடிப் பல் நாள்
சாம்பலைப் பூசித் தரையிற் புரண்டு நின் தாள் சரண் என்று
ஏம்பலிப்பார்கட்கு இரங்குகண்டாய் கச்சி ஏகம்பனே. 8

ஏன்றுகொண்டாய் என்னை எம்பெருமான் இனி அல்லம் என்னில்
சான்றுகண்டாய் இவ் உலகம்எல்லாம் தனியேன் என்று என்னை
ஊன்றி நின்றார்ஐவர்க்கு ஒற்றி வைத்தாய் பின்னை ஒற்றிஎல்லாம்
சோன்றுகொண்டாய் கச்சி ஏகம்பம் மேய சுடர் வண்ணனே 9

உந்தி நின்றார் உன்தன் ஓலக்கச் சூளைகள் வாய்தல் பற்றித்
துன்றி நின்றார் தொல்லைவானவர்ஈட்டம் பணி அறிவான்
வந்து நின்றார் அயனும் திருமாலும் மதில் கச்சியாய்
இந்த நின்றோம் இனி எங்ஙனமோ வந்து இறைஞ்சுவதே 10

*திருச்சிற்றம்பலம்*

# பதிகம் : 4

செந்தமிழ்செல்வேந்தர், இத்திருப்பதிகத்தின் முதல் பாடலில் திருத் தொண்டர்கள் பெரும் பேரின்பத்தை கூறுகிறார்

*திருச்சிற்றம்பலம்*

பண்டு செய்த பழவினையின் பயன்
கண்டும்கண்டும் களித்திகாண் நெஞ்சமே
வண்டு உலா மலர்ச் செஞ்சடை ஏகம்பன்
தொண்டனாய்த் திரியாய் துயர் தீரவே. 1

நச்சி நாளும் நயந்து அடியார் தொழ
இச்சையால் உமை நங்கை வழிபடக்
கொச்சையார் குறுகார் செறி தீம்பொழில்
கச்சி ஏகம்பமே கைதொழுமினே. 2

ஊன் நிலாவி இயங்கி உலகுஎலாம்
தான் உலாவிய தன்மையர் ஆகிலும்
வான் உலாவிய பாணி பிறங்க வெங்
கானில் ஆடுவர் கச்சி ஏகம்பரே. 3

இமையா முக்கணர் என் நெஞ்சத்து உள்ளவர்
தமை யாரும் அறிவு ஒண்ணாத் தகைமையர்
இமையோர் ஏத்த இருந்தவன் ஏகம்பன்
நமை ஆளுமவனைத் தொழுமின்களே. 4

மருந்தினொடு நல் சுற்றமும் மக்களும்
பொருந்தி நின்று எனக்காய் எம் புண்ணியன்
கருந்தடங்கண்ணினாள் உமை கைதொழ
இருந்தவன் கச்சி எகம்பத்து எந்தையே. 5

பொருளினோடு நல் சுற்றமும் பற்று இலர்க்கு
அருளும் நன்மை தந்து ஆய அரும்பொருள்
சுருள் கொள் செஞ்சடையான் கச்சி ஏகம்பம்
இருள் கெடச் சென்று கைதொழுது ஏத்துமே. 6

மூக்கு வாய் செவி கண் உடல் ஆகி வந்து
ஆக்கும் ஐவர் தம் ஆப்பை அவிழ்த்து அருள்
நோக்குவான் நமை நோய்வினை வாராமே
காக்கும் நாயகன் கச்சி ஏகம்பனே. 7

பண்ணில் ஓசை பழத்தினில் இன்சுவை
பெண்ணொடு ஆண் என்று பேசற்கு அரியவன்
வண்ணம் இலி வடிவு வேறு ஆயவன்
கண்ணில் உள் மணி கச்சி ஏகம்பனே. 8

திருவின் நாயகன் செம்மலர்மேல் அயன்
வெருவ நீண்ட விளங்கு ஒளிச்சோதியான்
ஒருவனாய் உணர்வாய் உணர்வு அல்லது ஓர்
கருவுள் நாயகன் கச்சி ஏகம்பனே. 9

இடுகுநுண்இடை ஏந்து இளமென்முலை
வடிவின் மாதர் திறம் மனம் வையன்மின்
பொடி கொள் மேனியன் பூம்பொழில் கச்சியுள்
அடிகள் எம்மை அருந்துயர் தீர்ப்பரே. 10

இலங்கை வேந்தன் இராவணன் சென்று தன்
விலங்கலை எடுக்க அவ் விரல் ஊன்றலும்
கலங்கிக் கச்சி ஏகம்பவோ என்றலும்
நலம் கொள் செலவு அளித்தான் எங்கள் நாதனே. 11

*திருச்சிற்றம்பலம்*

# பதிகம் : 5

திருமுறை (5) திருக்குறுந்தொகை

*திருச்சிற்றம்பலம்*

பூமேலானும் பூமகள்கேள்வனும்
நாமே தேவர் எனாமை நடுக்குறத்
தீ மேவும் உருவா திரு ஏகம்பா
ஆமோ அல்லல்பட அடியோங்களே. 1

அருந் திறல் அமரர் அயன் மாலொடு
திருந்த நின்று வழிபடத் தேவியோடு
இருந்தவன் எழில் ஆர் கச்சி ஏகம்பம்
பொருந்தச் சென்று புடைபட்டு எழுதுமே. 2

கறை கொள் கண்டத்து எண்தோள் இறை முக்கணன்
மறை கொள் நாவினன் வானவர்க்கு ஆதியான்
உறையும் பூம்பொழில் சூழ்கச்சி ஏகம்பம்
முறைமையால் சென்று முந்தித் தொழுதுமே. 3

பொறிப் புலன்களைப் போக்கு அறுத்து உள்ளத்தை
நெறிப்படுத்து நினைந்தவர் சிந்தையுள்
அறிப்புஉறும் அமுது ஆயவன் ஏகம்பம்
குறிப்பினால் சென்று கூடித் தொழுதுமே. 4

சிந்தையுள் சிவமாய் நின்ற செம்மையோடு
அந்தியாய் அனலாய் புனல் வானமாய்ப்
புந்தியாய்ப் புகுந்து உள்ளம் நிறைந்த எம்
எந்தை ஏகம்பம் ஏத்தித் தொழுமினே. 5

சாக்கியத்தொடு மற்றும் சமண்படும்
பாக்கியம் இலார் பாடு செலாது உறப்
பூக் கொள் சேவடியான் கச்சி ஏகம்பம்
நாக்கொடு ஏத்தி நயந்து தொழுதுமே. 6

மூப்பினோடு முனிவு உறுத்து எம்தமை
ஆர்ப்பதன் முன் அணி அமரர்க்கு இறை
காப்பதாய கடிபொழில் ஏகம்பம்
சேர்ப்பதாக நாம் சென்று அடைந்து உய்துமே. 7

ஆலும் மா மயில் சாயல் நல்லாரொடும்
சால நீ உறு மால் தவிர் நெஞ்சமே
நீலமாமிடற்று அண்ணல் ஏகம்பனார்
கோல மா மலர்ப்பாதமே கும்பிடே. 8

பொய்அனைத்தையும் விட்டவர் புந்தியுள்
மெய்யனைச் சுடர் வெண்மழு ஏந்திய
கையனைக் கச்சி ஏகம்பம் மேவிய
ஐயனைத் தொழுவார்க்கு இல்லை அல்லலே. 9

அரக்கன் தன் வலி உன்னிக் கயிலையை
நெருக்கிச் சென்று எடுத்தான் முடிதோள் நெரித்து
இரக்க இன் இசை கேட்டவன் ஏகம்பம்
தருக்குஅதுஆக நாம் சார்ந்து தொழுதுமே. 10

*திருச்சிற்றம்பலம்*

# பதிகம் : 6

உவகைக் கண்ணீர் ஆறாத ஆனந்தத்து அடியார் செய்த அநாசாரம் பொறுத்து அருளி, அவர்மேல் என்றும் சீறாத

பெருமையுடைய திருமாற்பேறு இறைவனை வணங்கி, இப்பதியிலிருந்து எழுந்தருளிய நாவரசர், இடையிலுள்ள பல பதிகளைச் சென்று வணங்கி மீண்டும் திருக்காஞ்சிக்குச் செல்வாராயினர். திருக்காஞ்சிக்கு எழுந்தருளிய நாவரசர், **"ஏகம்பன்காண் அவன் என் எண்ணத்தான்"** எனப் போற்றிப் பாகம் பெண் உருவானைப் பணிந்து இன்புற்றார். இவ்வமைப்பில் காணும் பதிகங்கள் பின்வரும் இரண்டாம். ஒரே அமைப்பில் உள்ள ஈற்றடிகள் இரண்டினை கொண்ட இரு திருப்பதிகங்கள் காணப்படும் தனிச்சிறப்பு இப்பதிகங்களுக்கும் இப்பதிக்கும் உரித்தானது.

திருமுறை (6) திருத்தாண்டகம்

*திருச்சிற்றம்பலம்*

கூற்றுவன் காண் கூற்றுவனைக் குமைத்த கோன்காண்
குவலயன்காண் குவலயத்தின் நீர் ஆனான்காண்
காற்று அவன்காண் கனல் அவன்காண் கலிக்கும் மின்காண்
கன பவளச்செம்மேனி கலந்த வெள்ளை
நீற்றவன்காண் நிலா ஊரும் சென்னியான்காண்
நிறை ஆர்ந்த புனல் கங்கை நிமிர்சடைமேல்
ஏற்றவன்காண் எழில்ஆரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவன் என் எண்ணத்தானே. 1

பரந்தவன்காண் பல்உயிர்கள்ஆகி எங்கும்
பணிந்து எழுவார் பாவமும் வினையும் போகத்
துரந்தவன்காண் தூ மலர் அம்கண்ணியான் காண்
தோற்றம் நிலை இறுதிப் பொருளாய் வந்த
மருந்து அவன்காண் வையகங்கள் பொறை தீர்ப்பான்காண்
மலர் தூவி நினைந்து எழுவார் உள்ளம் நீங்காது

இருந்தவன்காண் எழில் ஆரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவன் என் எண்ணத்தானே. 2

நீற்றவன்காண் நீர்ஆகித் தீஆனான்காண்
நிறை மழுவும் தமருகமும் எரியும் கையில்
தோற்றவன்காண் தோற்றக் கேடு இல்லாதான்காண்
துணைஇலிகாண் துணை என்று தொழுவார் உள்ளம்
போற்றவன்காண் புகழ்கள் படைத்தான் தான்காண்
பொறிஅரவும் விரிசடைமேல் புனலும்கங்கை
ஏற்றவன்காண் எழில் ஆரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவன் என் எண்ணத்தானே. 3

தாய் அவன்காண் உலகிற்கு தன் ஒப்பு இல்லாத்
தத்துவன்காண் மலைமங்கைபங்கா என்பார்
வாயவன்காண் வரும் பிறவிநோய் தீர்ப்பான்காண்
வானவர்க்கும் தானவர்க்கும் மண்ணுளோர்க்கும்
சேயவன்காண் நினையார்க்குச் சித்தம் ஆரத்
திருவடியே உள்கி நினைந்து எழுவார் உள்ளம்
ஏயவன்காண் எழில் ஆரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவன் என் எண்ணத்தானே. 4

அடுத்த ஆனை உரித்தான்காண்........ 5

அழித்தவன்காண் எயில்மூன்றும் அயில்வாய்அம்பால்
ஐயாறும் இடைமருதும் ஆள்வான் தான்காண்
பழித்தவன்காண் அடையாரை அடைவார்தங்கள்
பற்று அவன்காண் புற்று அரவம் நாணினான்காண்
சுழித்தவன்காண் முடிக் கங்கை அடியே போற்றும்
தூய மா முனிவர்க்காப் பார்மேல் நிற்க

இழித்தவன்காண் எழில் ஆரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவன் என் எண்ணத்தானே. 6

அசைந்தவன் காண் நடம் ஆடிப் பாடல் பேணி
அழல்வண்ணத்தில் அடியும் முடியும் தேடப்
பசைந்தவன்காண் பேய்க்கணங்கள் பரவி ஏத்தும்
பான்மையன்காண் பரவி நினைந்து எழுவார்தம்பால்
கசிந்தவன் காண் கரியின்உரி போர்த்தான் தான்காண்
கடலில் விடம் உண்டு அமரர்க்கு அமுதம் ஈய
இசைந்தவன்காண் எழில் ஆரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவன் என் எண்ணத்தானே. 7

முடித்தவன்காண் வன்கூற்றை சீற்றத்தீயால்
வலியார்தம் புரம்மூன்றும் வேவச் சாபம்
பிடித்தவன்காண் பிஞ்ஞகனாம் வேடத்தான்காண்
பிணையால் வெறி கமழ்கொன்றை அரவு சென்னி
முடித்தவன்காண் மூஇலைநல்வேலினான்காண்
முழங்கி உரும் எனத் தோன்றும் மழையாய் மின்னி
இடித்தவன்காண் எழில் ஆரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவன் என் எண்ணத்தானே. 8

வரும் தவன்காண் மனம் உருகி நினையாதார்க்கு
வஞ்சன்காண் அஞ்சஎழுத்தும் நினைவார்க்குஎன்றும்
மருந்து அவன்காண் வான் பிணிகள் தீரும் வண்ணம்
வானகமும் மண்ணகமும் மற்றும் ஆகிப்
பரந்தவன் காண் படர்சடைஎட்டு உடையான் தான்காண்
பங்கயத்தோன்தன் சிரத்தை ஏந்தி ஊர்ஊர்
இரந்தவன்காண் எழில் ஆரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவன் என் எண்ணத்தானே. 9

வெம் மான உழுவை அதள் உரி போர்த்தான்காண்
வேதத்தின் பொருளான்காண் என்று இயம்பி
விம்மாநின்று அழுவார்கட்கு அளிப்பான் தான்காண்
விடை ஏறித் திரிவான்காண் நடம்செய் பூதத்து
அம்மான்காண் அகலிடங்கள் தாங்கினான்காண்
அற்புதன்காண் சொல்பதமும் கடந்து நின்ற
எம்மான்காண் எழில் ஆரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவன் என் எண்ணத்தானே. 10

அறுத்தான்காண் அயன் சிரத்தை அமரர் வேண்ட
ஆழ்கடலின் நஞ்சு உண்டு அங்குஅணி நீர்க்கங்கை
செறுத்தான்காண் தேவர்க்கும் தேவன் தான்காண்
திசைஅனைத்தும் தொழுது ஏத்தக் கலைமான் கையில்
பொறுத்தான்காண் புகல்இடத்தை நலிய வந்து
பொரு கயிலை எடுத்தவன்தன் முடி தோள்நால் அஞ்சு
இறுத்தான்காண் எழில் ஆரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவன் என் எண்ணத்தானே. 11

*திருச்சிற்றம்பலம்*

# பதிகம் : 7

திருமுறை (6) திருத்தாண்டகம்

*திருச்சிற்றம்பலம்*

உரித்தவன்காண் உரக் களிற்றை உமையாள் ஒல்க
ஓங்காரத்து ஒருவன்காண் உணர் மெய்ஞ்ஞானம்
விரித்தவன்காண் விரித்த நால்வேதத்தான்காண்
வியன்உலகில் பல்உயிரை விதியினாலே

தெரித்தவன்காண் சில்உருவாய்த் தோன்றி எங்கும்
திரண்டவன்காண் திரிபுரத்தை வேவ வில்லால்
எரித்தவன்காண் எழில் ஆரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவன் என் எண்ணத்தானே. 1

நேசன்காண் நேசர்க்கு நேசம் தன்பால்
இல்லாத நெஞ்சத்து நீசர்தம்மைக்
கூசன்காண் கூசாதார் நெஞ்சு தஞ்சே
குடிகொண்ட குழகன்காண் அழகார் கொன்றை
வாசன்காண் மலைமங்கைபங்கன் தான்காண்
வானவர்கள் எப்பொழுதும் வணங்கி ஏத்தும்
ஈசன்காண் எழில் ஆரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவன் என் எண்ணத்தானே. 2

பொறையவன்காண் பூமிஏழ் தாங்கி ஓங்கும்
புண்ணியன்காண் நண்ணிய புண்டரீகப்போதில்
மறையவன்காண் மறையவனைப் பயந்தோன் தான்காண்
வார்சடை மாசுணம் அணிந்து வளரும் பிள்ளைப்
பிறையவன்காண் பிறைதிகழும் எயிற்றுப் பேழ்வாய்ப்
பேயோடு அங்கு இடுகாட்டில் எல்லி ஆடும்
இறையவன்காண் எழில் ஆரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவன் என் எண்ணத்தானே. 3

பார் அவன்காண் விசும்பு அவன்காண் பவ்வம் தான்காண்
பனி வரைகள் இரவினொடு பகலாய் நின்ற
சீரவன்காண் திசையவன்காண் திசைகள் எட்டும்
செறிந்தவன்காண் சிறந்தடியார் சிந்தைசெய்யும்
பேரவன்காண் பேர் ஆயிரங்கள் ஏத்தும்
பெரியவன்காண் அரியவன்காண் பெற்றம் ஊர்ந்த
ஏரவன்காண் எழில் ஆரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவன் என் எண்ணத்தானே. 4

பெருந் தவத்து எம் பிஞ்ஞகன்காண் பிறைசூடிகாண்
பேதையேன் வாதை உறு பிணியைத் தீர்க்கும்
மருந்து அவன்காண் மந்திரங்கள் ஆயினான்காண்
வானவர்கள்தாம் வணங்கும் மாதேவன்காண்
அருந்தவத்தான் ஆயிழையாள்உமையாள் பாகம்
அமர்ந்தவன்காண் அமரர்கள்தாம் அர்ச்சித்து ஏத்த
இருந்தவன்காண் எழில் ஆரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவன் என் எண்ணத்தானே. 5

ஆய்ந்தவன்காண் அருமறையோடு அங்கம்ஆறும்
அணிந்தவன்காண் ஆடுஅரவோடு என்பும் ஆமை
காய்ந்தவன்காண் கண் அழலால் காமன் ஆகம்
கனன்று எழுந்த காலன் உடல் பொடியாய் வீழப்
பாய்ந்தவன்காண் பண்டு பலசருகால் பந்தர்
பயின்ற நூல் சிலந்திக்குப் பாராள் செல்வம்
ஈந்தவன்காண் எழில் ஆரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவன் என் எண்ணத்தானே. 6

உமையவளை ஒருபாகம் சேர்த்தினான்காண்
உகந்து ஒலிநீர்க்கங்கை சடை ஒழுக்கினான்காண்
இமய வடகயிலைச்செல்வன் தான்காண்
இல் பலிக்குச் சென்று உழலும் நல்கூர்ந்தான்காண்
சமயம்அவைஆறினுக்கும் தலைவன் தான்காண்
தத்துவன்காண் உத்தமன்காண் தானே ஆய
இமையவன்காண் எழில் ஆரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண். அவன் என் எண்ணத்தானே. 7

தொண்டு படு தொண்டர் துயர் தீர்ப்பான் தான்காண்
தூ மலர்ச் சேவடிஇணை எம் சோதியான்காண்

உண்டு படு விடம் கண்டத்து ஒடுக்கினான்காண்
ஒலிகடலில் அமுது அமரர்க்கு உதவினான்காண்
வண்டு படு மலர்க்கொன்றைமாலையான்காண்
வாள்மதியாய் நாள்மீனும் ஆயினான்காண்
எண்திசையும் எழில் ஆரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவன் என் எண்ணத்தானே. 8

முந்தைகாண் மூவரினும் முதல் ஆனான்காண்
மூஇலைவேல் மூர்த்திகாண் முருகவேட்குத்
தந்தைகாண் தண் கட மா முகத்தினாற்குத்
தாதைகாண் தாழ்ந்து அடியே வணங்குவார்க்குச்
சிந்தைகாண் சிந்தாத சித்தத்தார்க்குச்
சிவன் அவன்காண் செங்கண் மால்விடை ஒன்று ஏறும்
எந்தைகாண் எழில் ஆரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவன் என் எண்ணத்தானே. 9

பொன் இசையும் புரிசடை எம் புனிதன் தான்காண்
பூதகணநாதன்காண் புலித்தோல் ஆடை
தன் இசைய வைத்த எழில் அரவினான்காண்
சங்கவெண்குழைக் காதின் சதுரன்தான்காண்
மின் இசையும் வெள்எயிற்றோன் வெகுண்டு வெற்பை
எடுக்க அடி அடர்ப்ப மீண்டு அவன்தன் வாயில்
இன்இசை கேட்டு இலங்கு ஒளி வாள் ஈந்தோன் கச்சி
ஏகம்பன்காண் அவன் என் எண்ணத்தானே. 10

*திருச்சிற்றம்பலம்*

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது

## பதிகம் : 1

திருவொற்றியூரில் சங்கிலியார் பொருட்டுச் செய்த சூளுறவைப் பிழைத்துத் திருவாரூருக்குச் செல்லப் புறப்பட்டுத் திருவொற்றியூர் எல்லையைக் கடந்த பொழுது, தையலார் சங்கிலியாரின் தவ வலிமையால் தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்தி நாயனார் தம் இரண்டு கண்களையும் இழந்தார். இழந்த கண்களைத் பெறவேண்டி வழியிலுள்ள பல தலங்களிலும் வணங்கிப் பாடி, திருவெண்பாக்கத்தில் ஊன்றுகோலைப் பெற்றுத் திருவாலங்காடு திருவூறல் திருத்தலங்களைத் தொழுது திரு ஏகம்பத்தை அடைந்து, காமக்கோட்டத்தில் அறம் புரக்கும் அம்மையை மனதில் கொண்டு, "கண்ணாளா ! கச்சி ஏகம்பனே ! கடையானேன் பிழைப் பொறுத்துக் கண்ணளித் தருளாய்" என்று வேண்டிட பெருமான் இடக்கண் கொடுக்க பெற்று மகிழ்ந்து பாடியருளியது இத்திருப்பதிகம். இப்பதிகத்தின் பத்தாவது திருப்பாடல் நித்திய பாராயணத்துக்குரியது.

திருமுறை : (7) பண் : தக்கேசி

*திருச்சிற்றம்பலம்*

ஆலந் தான்உகந் தமுதுசெய் தானை
        ஆதி யைஅம ரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்முடை யானைச்
        சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாள்உமை நங்கை
        என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
        காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 1

உற்ற வர்க்குத வும்பெரு மானை
ஊர்வ தொன்றுடை யான்உம்பர் கோனைப்
பற்றி னார்க்கென்றும் பற்றவன் றன்னைப்
பாவிப் பார்மனம் பாவிக்கொண் டானை
அற்ற மில்புக ழாள்உமை நங்கை
ஆதரித்து வழிபடப் பெற்ற
கற்றை வார்சடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 2

திரியும் முப்புரம் தீப்பிழம் பாகச்
செங்கண் மால்விடை மேற்றிகழ் வானைக்
கரியின் ஈருரி போர்த்துகந் தானைக்
காம னைக்கன லாவிழித் தானை
வரிகொள் வெள்வளை யாள்உமை நங்கை
மருவி ஏத்தி வழிபடப் பெற்ற
பெரிய கம்பனை எங்கள்பி ரானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 3

குண்ட லந்திகழ் காதுடையானைக்
கூற்று தைத்த கொடுந்தொழி லானை
வண்ட லம்புமலர்க் கொன்றையி னானை
வாளராமதி சேர்சடை யானைக்
கெண்டை யந்தடங் கண்ணுமை நங்கை
கெழுமி ஏத்தி வழிபடப் பெற்ற
கண்டம் நஞ்சுடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 4

வெல்லும் வெண்மழு ஒன்றுடை யானை
வேலை நஞ்சுண்ட வித்தகன் றன்னை

அல்லல் தீர்த்தருள் செய்யவல் லானை
அருமறையவை அங்கம்வல் லானை
எல்லை யில்புக ழாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
நல்ல கம்பனை எங்கள்பி ரானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 5

திங்கள் தங்கிய சடையுடையானைத்
தேவ தேவனைச் செழுங்கடல் வளரும்
சங்க வெண்குழைக் காதுடை யானைச்
சாம வேதம் பெரிதுகப் பானை
மங்கை நங்கை மலைமகள் கண்டு
மருவி ஏத்தி வழிபடப் பெற்ற
கங்கை யாளனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 6

விண்ண வர்தொழு தேத்தநின் றானை
வேதந் தான்விரித் தோதவல் லானை
நண்ணி னார்க்கென்றும் நல்லவன் றன்னை
நாளும் நாம்உகக் கின்றபி ரானை
எண்ணில் தொல்புக ழாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கண்ணும் மூன்றுடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 7

சிந்தித் தென்றும் நினைந்தெழு வார்கள்
சிந்தை யில்திக ழுஞ்சிவன் றன்னைப்
பந்தித் தவினைப் பற்றறுப் பானைப்
பாலொ டானஞ்சும் ஆட்டுகந் தானை
அந்த மில்புக ழாள்உமை நங்கை
ஆதரித்து வழிபடப் பெற்ற

கந்த வார்சடைக் கம்பன்எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 8

வரங்கள் பெற்றுழல் வாளரக் கர்தம்
வாலி யபுரம் மூன்றெரித் தானை
நிரம்பிய தக்கன் றன்பெரு வேள்வி
நிரந்த ரஞ்செய்த நிட்கண் டகனைப்
பரந்த தொல்புக ழாள்உமை நங்கை
பரவி ஏத்தி வழிபடப் பெற்ற
கரங்கள் எட்டுடைக் கம்பன்எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 9

எள்கல் இன்றி இமையவர் கோனை
ஈசனைவழி பாடுசெய் வாள்போல்
உள்ளத் துள்கி உகந்துமை நங்கை
வழிபடச் சென்று நின்றவா கண்டு
வெள்ளங் காட்டி வெருட்டிட அஞ்சி
வெருவி ஓடித் தழுவ வெளிப்பட்ட
கள்ளக் கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 10

பெற்றம் ஏறுகந் தேறவல் லானைப்
பெரிய எம்பரு மான்என்றெப் போதும்
கற்ற வர்பர வப்படு வானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற தென்று
கொற்ற வன்கம்பன் கூத்தன்எம் மானைக்
குளிர்பொ ழில்திரு நாவலா ரூரன்
நற்றமிழ் இவைஈ ரைந்தும் வல்லார்
நன்னெ றிஉல கெய்துவர் தாமே. 11.

*திருச்சிற்றம்பலம்*

## மாணிக்க வாசக சுவாமிகள் அருளியது

காசணி மின்கள் உலக்கை யெல்லாம்
காம்பணி மின்கள் கறைஉரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங் கச்சித்
திருஏகம்பன் செம்பொற் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

அறுகெடுப்பார் அயனும் அரியும்
அன்றி மற்று இந்திரனோடு அமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற்பின் பல்லது எடுக்க ஒட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருஏகம்பன் செம்பொற் கோயில் பாடி
முறுவல்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

*திருச்சிற்றம்பலம்*

படமாக என்னுள்ளே தன்னிணைப்போது அவை அளித்திங்கு
இடமாகக் கொண்டிருந்து ஏகம்பம் மேயபிரான்
தடமார் மதில்தில்லை அம்பலமே தானிடமா
நடமாடு மாபாடிப் பூவல்லி கொய்யாமோ.

*திருச்சிற்றம்பலம்*

**ஏகம்பத்துறை எந்தாய் போற்றி !**

**பாகம் பெண்ணுரு ஆனாய் போற்றி !**

*திருச்சிற்றம்பலம்*

# 2. திருஆனைக்கா

**இறைவர் : ஆனைக்கா அண்ணல் (சம்புகேசுவரர்)**

**இறைவி : அகிலாண்ட நாயகி**

## திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது

## பதிகம் : 1

திருச்சிராப்பள்ளி மேவிய தாயுமான பெருமானை வணங்கி மகிழ்ந்த பிள்ளையார், விண்ணவர் போற்றிசை ஆனைக்காவில் வெண் நாவல் மேவிய மெய்ப் பொருளை நண்ணி இறைஞ்சி அருளிய திருப்பதிகம். இத்திருப்பதிகத்தில் வரும் நான்காவது பாடலையும், ஐந்தாவது பாடலையும் உளம்கொண்ட சேக்கிழார், நாற்கோட்டு நாகம் பணிந்ததுவும் அண்ணல் கோச்செங்கணரசன் செய்த அடிமையும் அஞ்சல் தொடை மாலையில் வைத்துப் பாடினார் எனப் போற்றியருளுகின்றார்.

திருமுறை (2) பண் : இந்தளம்

*திருச்சிற்றம்பலம்*

மழை ஆர் மிடறா மழுவாள் உடையாய்
உழை ஆர் கரவா உமையாள்கணவா
விழவு ஆரும் வெண்நாவலின் மேவியஎம்
அழகா எனும் ஆயிழையாள் அவளே. 1

கொலைஆர் கரியின் உரி மூடியனே
மலை ஆர் சிலையா வளைவித்தவனே
விலையால் எனை ஆளும் வெண்நாவல் உளாய்
நிலையா அருளாய் எனும் நேரிழையே. 2

காலால் உயிர் காலனை வீடுசெய்தாய்
பாலோடு நெய்ஆடிய பால்வணனே
வேலாடு கையாய் எம் வெண்நாவல் உளாய்
ஆல் ஆர் நிழலாய் எனும் ஆயிழையே. 3

சுறவக் கொடி கொண்டவன் நீறு அதுவாய்
உற நெற்றி விழித்த எம் உத்தமனே
விறல் மிக்க கரிக்கு அருள்செய்தவனே
அறம் மிக்கது எனும் ஆயிழையே. 4

செங்கண் பெயர் கொண்டவன் செம்பியர்கோன்
அம்கண் கருணை பெரிது ஆயவனே
வெங் கண் விடையாய் எம்வெண்நாவல் உளாய்
அங்கத்து அயர்வு ஆயினள் ஆயிழையே. 5

குன்றே அமர்வாய் கொலையார் புலியின்
தன்தோல் உடையாய் சடையாய் பிறையாய்
வென்றாய் புரம்மூன்றை வெண்நாவலுளே
நின்றாய் அருளாய் எனும் நேரிழையே. 6-7

ம்லை அன்று எடுத்த அரக்கன் முடிதோள்
தொலையவ் விரல் ஊன்றிய தூ மழுவா
விலையால் எனை ஆளும் வெண்நாவல் உளாய்
அலசாமல் நல்காய் எனும் ஆயிழையே. 8

திரு ஆர்தரு நாரணன் நான்முகனும்
அருவா வெருவா அழல் ஆய் நிமிர்ந்தாய்
விரை ஆரும் வெண்நாவலுள் மேவியஎம்
அரவா எனும் ஆயிழையாள் அவளே. 9

புத்தர்பலரோடு அமண்பொய்த்தவர்கள்
ஒத்தவ் உரை சொல் இவை ஓரகிலார்
மெய்த் தேவர் வணங்கும் வெண் நாவல் உளாய்
அத்தா அருளாய் எனும் ஆயிழையே. 10

வெண் நாவல் அமர்ந்து உறை வேதியனைக்
கண் ஆர் கமழ் காழியர்தம் தலைவன்
பண்ணோடு இவை பாடிய பத்தும் வல்லார்
விண்ணோர் அவர் ஏத்த விரும்புவாரே. 11

*திருச்சிற்றம்பலம்.*

# பதிகம் : 2

இப்பதிகம் திருவானைக்காவல், திருமயேந்திரம், திருக்கயிலை, திருவாரூர் ஆகிய நான்கு பதிகளையும் இணைத்து அருளிய பதிகமாகும்.

திருமுறை (3) (கூடற்சதுக்கம்) பண் : பழம்பஞ்சுரம்

*திருச்சிற்றம்பலம்*

மண்அது உண்ட அரி மலரோன் காணா
வெண்நாவல் விரும்பு மயேந்திரரும்
கண்ணது ஓங்கிய கயிலையாரும்
அண்ணல் ஆரூர் ஆதி ஆனைக்காவே. 1

வந்து மால்அயன்அவர் காண்பரியார்
வெந்தவெண் நீறு அணி மயேந்திரரும்
கந்த வார்சடை உடைக் கயிலையாரும்
அம் தண் ஆரூர் ஆதி ஆனைக்காவே. 2

மால் அயன் தேடிய மயேந்திரரும்
காலனை உயிர்கொண்ட கயிலையாரும்
வேலைஅது ஓங்கும் வெண் நாவலாரும்
ஆலை ஆரூர் ஆதி ஆனைக்காவே. 3

கருடனை ஏறு அரி அயனார் காணார்
வெருள் விடை ஏறிய மயேந்திரரும்
கருள்தரு கண்டத்து எம் கயிலையாரும்
அருளன் ஆரூர் ஆதி ஆனைக்காவே. 4

மதுசூதனன் நான்முகன் வணங்க அரியார்
மதியது சொல்லிய மயேந்திரரும்
கதிர்முலை புல்கிய கயிலையாரும்
அதியன் ஆரூர் ஆதி ஆனைக்காவே. 5

சக்கரம் வேண்டும் மால் பிரமன் காணா
மிக்கவர் கயிலை மயேந்திரரும்
தக்கனைத் தலை அரி தழல்உருவர்
அக்கு அணியவர் ஆரூர் ஆதி ஆனைக்காவே. 6

கண்ணனும் நான்முகன் காண்பு அரியார்
வெண்நாவல் விரும்பு மயேந்திரரும்
கண்ணப்பர்க்கு அருள்செய்த கயிலைஎங்கள்
அண்ணல் ஆரூர் ஆதி ஆனைக்காவே. 7

கடல்வண்ணன் நான்முகன் காண்பு அரியார்
தடவரை அரக்கனைத் தலை நெரித்தார்
விடம்அது உண்ட எம் மயேந்திரரும்
அடல் விடை ஆரூர் ஆதி ஆனைக்காவே. 8

ஆதி மால்அயன் அவர் காண்பரியார்
வேதங்கள் துதிசெயும் மயேந்திரரும்
காதில்ஓர் குழைஉடைக் கயிலையாரும்
ஆதி ஆரூர் எந்தை ஆனைக்காவே. 9

அறிவில் அமண்புத்தர் அறிவு கொள்ளேல்
வெறிய மான் கரத்து ஆரூர் மயேந்திரரும்
மறிகடலோன் அயன் தேடத்தானும்
அறிவுஅரு கயிலையோன் ஆனைக்காவே. 10

ஏனம்மால் அயன் அவர் காண்பு அரியார்
கானம் ஆர் கயிலை நல் மயேந்திரரும்
ஆன ஆரூர் ஆதி ஆனைக்காவை
ஞானசம்பந்தன் தமிழ்சொல்லுமே. 11

*திருச்சிற்றம்பலம்*

# பதிகம் : 3

இப்பதிகத்தின் ஒன்பதாவது பாடலில், சிவகோசரியாரின் ஆகம வழிபாட்டின் சிறப்பும், கண்ணப்ப நாயனாரின் அன்பு மேலீட்டில் அமைந்த வழிபாட்டின் சிறப்பும் போற்றப்படுகிறது.

திருமுறை (3) பண் : கௌசிகம்

*திருச்சிற்றம்பலம்*

வானைக் காவில் வெண்மதி மல்கு புல்கு வார்சடைத்
தேனைக் காவில் இன்மொழித் தேவி பாகம் ஆயினான்
ஆனைக் காவில் அண்ணலை அபயம் ஆக வாழ்பவர்
ஏனைக் காவல் வேண்டுவார்க்கு ஏதும் ஏதம் இல்லையே. 1

சேறு பட்ட தண்வயல் சென்றுசென்று சேண் உலாவு
ஆறுபட்ட நுண் துறை ஆனைக்காவில் அண்ணலார்
நீறு பட்ட மேனியார் நிகர் இல் பாதம் ஏத்துவார்
வேறுபட்ட சிந்தையார் விண்ணில்எண்ண வல்லரே. 2

தாரம்ஆய மாதராள் தான்ஓர்பாகம் ஆயினான்
ஈரம் ஆய புன்சடை ஏற்ற திங்கள் சூடினான்
ஆரம் ஆய மார்புஉடை ஆனைக்காவில் அண்ணலை
வாரம் ஆய் வணங்குவார் வல்வினைகள் மாயுமே. 3

விண்ணில் நண்ணு புல்கிய வீரம் ஆய மால்விடைச்
சுண்ணவெண்நீறுஆடினான் சூலம்ஏந்து கையினான்
அண்ணல் கண்ஓர் மூன்றினான் ஆனைக்காவு கைதொழ
எண்ணும் வண்ணம் வல்லவர்க்கு ஏதம்ஒன்றும் இல்லையே 4

வெய்யபாவம் கைவிட வேண்டுவீர்கள் ஆண்ட சீர்
மை கொள் கண்டன் வெய்ய தீ மாலை ஆடு காதலான்
கொய்ய விண்ட நாள்மலர்க்கொன்றை துன்று சென்னிஎம்
ஐயன் மேய பொய்கை சூழ் ஆனைக்காவு சேர்மினே. 5

நாணும் ஓர்வு சார்வும் முன் நகையும் உட்கும் நன்மையும்
பேண்உறாத செல்வமும் பேசநின்ற பெற்றியான்
ஆணும் பெண்ணும் ஆகிய ஆனைக்காவில் அண்ணலார்
காணும் கண்ணுமூன்று உடைக் கறைகொள் மிடறன் அல்லனே 6

கூரும் மாலை நண்பகல் கூடி வல்ல தொண்டர்கள்
பேரும் ஊரும் செல்வமும் பேச நின்ற பெற்றியான்
பாரும் விண்ணும் கைதொழப் பாயும் கங்கை செஞ்சடை
ஆரம் நீரொடு ஏந்தினான் ஆனைக்காவு சேர்மினே. 7

பொன் அம் மல்கு தாமரைப்போது தாது வண்டுஇனம்
அன்னம் மல்கு தண்துறை ஆனைக்காவில் அண்ணலைப்
பன்னவல்ல நால்மறை பாடவல்ல தன்மையோர்
முன்ன வல்லர் மொய்கழல் துன்ன வல்லர் விண்ணையே. 8

ஊனொடு உண்டல் நன்று என ஊனொடு உண்டல் தீது என
ஆன தொண்டர் அன்பினால் பேச நின்ற தன்மையான்
வானொடு ஒன்று சூடினான் வாய்மை ஆக மன்னி நின்று
ஆனொடு அஞ்சும் ஆடினான் ஆனைக்காவு சேர்மினே. 9

கையில் உண்ணும் கையரும் கடுக்கள் தின் கழுக்களும்
மெய்யைப் போர்க்கும் பொய்யரும் வேதநெறியை அறிகிலார்
தையல் பாகம் ஆயினான் தழல்அது உருவத்தான் எங்கள்
ஐயன் மேய பொய்கை சூழ் ஆனைக்காவு சேர்மினே. 10

ஊழிஊழி வையகத்து உயிர்கள்தோற்று வானொடும்
ஆழியானும் காண்கிலா ஆனைக்காவில் அண்ணலைக்
காழி ஞானசம்பந்தன் கருதிச் சொன்ன பத்துஇவை
வாழியாகக் கற்பவர் வல்வினைகள் மாயுமே. 11

*திருச்சிற்றம்பலம்*

# திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது

## பதிகம் : 1

திருவானைக்காவலுக்கு எழுந்தருளிய நாவரசர் "சிலந்திக்கு அருளும் கழல் வணங்கிச் செஞ்சொல் மாலை பல பாடி" எனச் சேக்கிழார் அருளுதற்கேற்ப, இது பொழுது கிடைத்திருக்கும் பதிகங்கள் மூன்றேயாம். இவைகளில்,

திருநனிபள்ளிப் பதிகம் இரண்டாவது பாடலிலும், திருச்சாய்க்காட்டுப் பதிகம் மூன்றாவது பாடலிலும் மற்றும் பல இடங்களிலும் சிவபெருமான் சிலந்திக்கு அருளும் சிறப்பை நாவரசர் அருளியிருத்தலின் "சிலந்திக்கு அருளும் கழல் வணங்கி" எனச் சேக்கிழார் அருளுவாராயினர். இத் திருக்குறுந்தொகையில் இவ்வுலக வாழ்க்கையை மெய் எனக் கருதுவதும் நாத்திகமே என்னும் பொருள்பட, "நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே" என்று கூறுகிறார் கோதில் மொழிக் கொற்றவனார்.

திருமுறை : 5 திருக்குறுந்தொகை

*திருச்சிற்றம்பலம்*

கோனைக் காவிக் குளிர்ந்த மனத்தராய்த்
தேனைக் காவி உண்ணார் சிலதெண்ணர்கள்
ஆனைக்காவில் எம்மானை அணைகிலார்
ஊனைக் காவி உழிதர்வர் ஊமரே. 1

திருகு சிந்தையைத் தீர்த்துச் செம்மை செய்து
பருகி ஊறலைப் பற்றிப் பதம் அறிந்து
உருகி நைபவர்க்கு ஊனம் ஒன்று இன்றியே
அருகு நின்றிடும் ஆனைக்கா அண்ணலே. 2

துன்பம் இன்றித் துயர் இன்றி என்று நீர்
இன்பம் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்
என் பொன் ஈசன் இறைவன் என்று உள்குவார்க்கு
அன்பன் ஆயிடும் ஆனைக்கா அண்ணலே. 3

நாவால் நன்று நறுமலர்ச் சேவடி
ஓவாது ஏத்தி உளத்து அடைத்தார் வினை
காவாய் என்று தம் கைதொழுவார்க்கு எலாம்
ஆவா என்றிடும் ஆனைக்கா அண்ணலே. 4

வஞ்சம் இன்றி வணங்குமின் வைகலும்
வெஞ்சொல் இன்றி விலகுமின் வீடு உற
நைஞ்சுநைஞ்சு நின்று உள் குளிர்வார்க்கு எலாம்
அஞ்சல் என்றிடும் ஆனைக்கா அண்ணலே. 5

நடையை மெய் என்று நாத்திகம் பேசாதே
படைகள் போல் வரும் பஞ்சமாபூதங்கள்
தடை ஒன்று இன்றியே தன் அடைந்தார்க்கு எலாம்
அடைய நின்றிடும் ஆனைக்கா அண்ணலே. 6

ஒழுகு மாடத்துள் ஒன்பதுவாய்தனும்
கழுகு அரிப்பதன் முன்னம் கழல்அடி
தொழுது கைகளால் தூ மலர் தூவி நின்று
அழுமவர்க்கு அன்பன் ஆனைக்கா அண்ணலே. 7

உருளும்போது அறிவு ஒண்ணா உலகத்தீர்
தெருளும் சிக்கெனத் தீவினை சேராதே
இருள் அறுத்து நின்று ஈசன் என்பார்க்கு எலாம்
அருள் கொடுத்திடும் ஆனைக்கா அண்ணலே. 8

நேசம் ஆகி நினை மட நெஞ்சமே
நாசம் ஆய குலநலம் சுற்றங்கள்
பாசம் அற்றுப் பராபர ஆனந்த
ஆசை உற்றிடும் ஆனைக்கா அண்ணலே. 9

ஓதம் மா கடல் சூழ் இலங்கைக்கு இறை
கீதம் கின்னரம் பாடக் கெழுவினான்
பாதம் வாங்கிப் பரிந்து அருள்செய்து அங்கு ஓர்
ஆதி ஆயிடும் ஆனைக்கா அண்ணலே. 10

*திருச்சிற்றம்பலம்.*

## பதிகம் : 2

இத்தலத்தின் சிறப்பைக் கருதி, இறைவன் திருநாமத்தை **"செழுநீர்த்திரள்"** என்று பாடல் தோறும் போற்றுகிறார் செந்தமிழ்ச் சொல்வேந்தர்.

திருமுறை (6) திருத்தாண்டகம்

*திருச்சிற்றம்பலம்*

முன்னானைத்தோல் போர்த்த மூர்த்திதன்னை
மூவாத சிந்தையே மனமே வாக்கே
தன் ஆனையாப் பண்ணி ஏறினானைச்
சார்தற்கு அரியானை தாதைதன்னை
என் ஆனைக்கன்றினை என் ஈசன்தன்னை
எறி நீர்த் திரை உகளும் காவிரி சூழ்
தென்ஆனைக்காவானைத் தேனைப் பாலைச்
செழுநீர்த்திரளைச் சென்று ஆடினேனே. 1

மருந்தானை மந்திரிப்பார் மனத்து உளானை
வளர்மதி அம் சடையானை மகிழ்ந்து என் உள்ளத்து
இருந்தானை இறப்புஇலியைப் பிறப்புஇலானை
இமையவர்தம் பெருமானை உமையாள் அஞ்சக்
கருந் தான மதகளிற்றின் உரி போர்த்தானைக்
கன மழுவாள்படையானைப் பலி கொண்டு ஊர்ஊர்

திரிந்தானைத் திரு ஆனைக்கா உளானைச்
செழுநீர்த்திரளைச் சென்று ஆடினேனே. 2

முற்றாத வெண்திங்கள்கண்ணியானை
முந்நீர்நஞ்சு உண்டு இமையோர்க்கு அமுதம் நல்கும்
உற்றானைப் பல்உயிர்க்கும் துணை ஆனானை
ஓங்காரத்து உள்பொருளை உலகம்எல்லாம்
பெற்றானைப் பின் இறக்கம் செய்வான்தன்னைப்
பிரான் என்று போற்றாதார் புரங்கள்மூன்றும்
செற்றானைத் திரு ஆனைக்கா உளானைச்
செழுநீர்த்திரளைச் சென்று ஆடினேனே. 3

கார் ஆரும் கடைமிடற்று எம்பெருமான்தன்னைக்
காதில் வெண்குழையானைக் கமழ்பூங்கொன்றைத்
தாரானைப் புலிஅதளின் ஆடையானைத்
தான் அன்றி வேறு ஒன்றும் இல்லா ஞானப்
பேரானை மணிஆரம் மார்பினானைப்
பிஞ்ஞகனைத் தெய்வநால்மறைகள் பூண்டத்
தேரானைத் திரு ஆனைக்கா உளானைச்
செழுநீர்த்திரளைச் சென்று ஆடினேனே. 4

பொய்ஏதும் இல்லாத மெய்யன்தன்னைப்
புண்ணியனை நண்ணாதார் புரம் நீறுஆக
எய்தானைச் செய் தவத்தின் மிக்கான்தன்னை
ஏறு அமரும் பெருமானை இடமான் ஏந்தும்
கையானைக் கங்காளவேடத்தானைக்
கட்டங்கக் கொடியானைக் கனல் போல் மேனிச்
செய்யானைத் திரு ஆனைக்கா உளானைச்
செழுநீர்த்திரளைச் சென்று ஆடினேனே. 5

கலையானைப் பரசு தர பாணியானைக்
கன வயிரத்திரளானை மணிமாணிக்க
மலையானை என் தலையின் உச்சியானை
வார்தரு புன்சடையானை மயானம் மன்னும்
நிலையானை வரிஅரவு நாணாக் கோத்து
நினையாதார் புரம் எரிய வளைத்த மேருச்
சிலையானைத் திரு ஆனைக்கா உளானைச்
செழுநீர்த்திரளைச் சென்று ஆடினேனே. 6

ஆதியனை எறி மணியின் ஓசையானை
அண்டத்தார்க்கு அறிவு ஒண்ணாது அப்பால் மிக்க
சோதியனைத் தூ மறையின் பொருளான் தன்னைச்
சுரும்பு அமரும் மலர்க்கொன்றை தொல்நூல் பூண்ட
வேதியனை அறம் உரைத்த பட்டன்தன்னை
விளங்கு மலர் அயன் சிரங்கள்ஐந்தில் ஒன்றைச்
சேதியனைத் திரு ஆனைக்கா உளானைச்
செழுநீர்த்திரளைச் சென்று ஆடினேனே. 7

மகிழ்ந்தானைக் கச்சி ஏகம்பன்தன்னை
மறவாது கழல் நினைந்து வாழ்த்தி ஏத்திப்
புகழ்ந்தாரைப் பொன்னுலகம் ஆள்விப்பானைப்
பூதகணப்படையானைப் புறங்காட்டுஆடல்
உகந்தானைப் பிச்சையே இச்சிப்பானை
ஒண்பவளத்திரளை என் உள்ளத்துள்ளே
திகழ்ந்தானைத் திரு ஆனைக்கா உளானைச்
செழுநீர்த்திரளைச் சென்று ஆடினேனே. 8

நசையானை நால்வேதத்து அப்பாலானை
நல்குரவும் தீப்பிணிநோய் காப்பான்தன்னை

இசையானை எண் இறந்த குணத்தான்தன்னை
இடைமருதும் ஈங்கோயும் நீங்காது ஏற்றின்
மிசையானை விரிகடலும் மண்ணும் விண்ணும்
மிகு தீயும் புனல் எறிகாற்று ஆகி எட்டுத்
திசையானைத் திரு ஆனைக்கா உளானைச்
செழுநீர்த்திரளைச் சென்று ஆடினேனே. 9

பார்த்தானைக் காமன் உடல் பொடியாய் வீழப்
பண்டு அயன் மால் இருவர்க்கும் அறியா வண்ணம்
சீர்த்தானைச் செந்தழல் போல் உருவினானைத்
தேவர்கள்தம் பெருமானைத் திறம் உன்னாதே
ஆர்த்து ஓடி மலை எடுத்த இலங்கை வேந்தன்
ஆண்மைஎலாம் கெடுத்தவன்தன் இடர் அப்போதே
தீர்த்தானைத் திரு ஆனைக்கா உளானைச்
செழுநீர்த்திரளைச் சென்று ஆடினேனே. 10

*திருச்சிற்றம்பலம்*

## பதிகம் : 3

"**அல்லகண்டம்கொண்டு அடியேன் என் செய்கேனே**" என்னும் மகுடம் அமைந்த இத்திருப்பதிகத்தின் மூலம், ஆனைக்கா அண்ணலை அடைந்து அடிபணிந்தால் நம் அல்லல் களையப்பெறலாம் என்று அறிவுறுத்துகிறார் அருந்தவ வேந்தராகிய அப்பர் பெருமான்.

*திருச்சிற்றம்பலம்*

எத் தாயர் எத் தந்தை எச் சுற்றத்தார்
எம் மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால் வந்து உதவுவார் ஒருவர் இல்லை
சிறு விறகால் தீ மூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திரு ஆனைக்கா உடைய செல்வா என்தன்
அத்தா உன் பொற்பாதம் அடையப்பெற்றால்
அல்லகண்டம்கொண்டு அடியேன் என் செய்கேனே. 1

ஊன்ஆகி உயிர்ஆகி அதனுள் நின்ற
உணர்வுஆகிப் பிறஅனைத்தும் நீயாய் நின்றாய்
நான் ஏதும் அறியாமே என்னுள் வந்து
நல்லனவும் தீயனவும் காட்டாநின்றாய்
தேன்ஆரும் கொன்றையனே நின்றியூராய்
திரு ஆனைக்காவில் உறை சிவனே ஞானம்
ஆனாய் உன் பொற்பாதம் அடையப்பெற்றால்
அல்லகண்டம்கொண்டு அடியேன் என் செய்கேனே. 2

ஒப்பாய் இவ் உலகத்தோடு ஒட்டி வாழ்வான்
ஒன்று அலாத் தவத்தாரோடு உடனேநின்று
துப்பு ஆரும் குறை அடிசில் துற்றி நற்று உன்
திறம் மறந்து திரிவேனைக் காத்து நீ வந்து
எப்பாலும் நுன் உணர்வே ஆக்கி என்னை.
ஆண்டவனே எழில் ஆனைக்காவா வானோர்
அப்பா உன் பொற்பாதம் அடையப்பெற்றால்
அல்லகண்டம்கொண்டு அடியேன் என் செய்கேனே. 3

நினைத்தவர்கள் நெஞ்சுளாய் வஞ்சக் கள்வா
நிறை மதியம் சடை வைத்தாய் அடையாது உன்பால்
முனைத்தவர்கள் புரம்மூன்றும் எரியச் செற்றாய்
முன் ஆனைத்தோல் போர்த்த முதல்வா என்றும்
கனைத்து வரும் எருது ஏறும் காளகண்டா
கயிலாயமலையா நின் கழலே சேர்ந்தேன்
அனைத்துஉலகும் ஆள்வானே ஆனைக்காவா
அல்லகண்டம்கொண்டு அடியேன் என் செய்கேனே. 4

இம் மாயப் பிறப்பு என்னும் கடலாம் துன்பத்து
இடைச் சுழிப்பட்டு இளைப்பேனை இளையா வண்ணம்
கைம் மான மனத்து உதவிக் கருணை செய்து
காதல்அருள்அவை வைத்தாய் காண நில்லாய்
வெம் மான மதகரியின் உரிவை போர்த்த
வேதியனே தென்ஆனைக்காவுள் மேய
அம்மான் நின் பொற்பாதம் அடையப்பெற்றால்
அல்லகண்டம்கொண்டு அடியேன் என் செய்கேனே. 5

உரை ஆரும் புகழானே ஒற்றியூராய்
கச்சி ஏகம்பனே காரோணத்தாய்
விரை ஆரும் மலர் தூவி வணங்குவார்பால்
மிக்கானே அக்கு அரவம் ஆரம் பூண்டாய்
திரை ஆரும் புனல் பொன்னித்தீர்த்தம் மல்கு
திரு ஆனைக்காவில் உறை தேனே வானோர்
அரையா உன் பொற்பாதம் அடையப்பெற்றால்
அல்லகண்டம்கொண்டு அடியேன் என் செய்கேனே. 6

மை ஆரும் மணிமிடற்றாய் மாது ஓர்கூறாய்
மான்மறியும் மா மழுவும் அனலும் ஏந்தும்

கையானே காலன் உடல் மாளச் செற்ற
கங்காளா முன் கோளும் விளைவும் ஆனாய்
செய்யானே திருமேனி அரியாய் தேவர்
குலக்கொழுந்தே தென்ஆனைக்காவுள் மேய
ஐயா உன் பொற்பாதம் அடையப்பெற்றால்
அல்லகண்டம்கொண்டு அடியேன் என் செய்கேனே. 7

இலை ஆரும் சூளத்தாய் என்தோளானே
எவ்இடத்தும் நீயல்லா தில்லை என்று
தலை ஆரக் கும்பிடுவார் தன்மையானே
தழல் மடுத்த மா மேருக் கையில் வைத்த
சிலையானே திரு ஆனைக்காவுள் மேய
தீஆடீ சிறு நோயால் நலிவுண்டு உள்ளம்
அலையாதே நின் அடியே அடையப்பெற்றால்
அல்லகண்டம்கொண்டு அடியேன் என் செய்கேனே. 8

விண் ஆரும் புனல் பொதி செஞ்சடையாய் வேத
நெறியானே எறிகடலின் நஞ்சம் உண்டாய்
எண் ஆரும் புகழானே உன்னை எம்மான்
என்றுஎன்றே நாவினில் எப்பொழுதும் உன்னிக்
கண் ஆரக் கண்டிருக்கக் களித்து எப்போதும்
கடிபொழில் சூழ் தென் ஆனைக்காவுள் மேய
அண்ணா நின் பொற்பாதம் அடையப்பெற்றால்
அல்லகண்டம்கொண்டு அடியேன் என் செய்கேனே. 9

கொடி ஏயும் வெள்ஏற்றாய் கூளி பாடக்
குறள்பூதம் கூத்துஆட நீயும் ஆடி
வடிவு ஏயும் மங்கைதனை வைத்த மைந்தா
மதில் ஆனைக்கா உளாய் மாகாளத்தாய்

படி ஏயும் கடல் இலங்கைக் கோமான்தன்னைப்
பரு முடியும் திரள்தோளும் அடர்த்து உகந்த
அடியே வந்து அடைந்து அடிமை ஆகப்பெற்றால்
அல்லகண்டம்கொண்டு அடியேன் என் செய்கேனே. 10

*திருச்சிற்றம்பலம்*

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது

## பதிகம் : 1

பொன்னார் மேனியனாய் மழபாடியுள் மன்னும் மாமணியை வணங்கிய நம்பி ஆரூரர், செய்ய சடையார் திரு ஆனைக்கா அணைந்து, அன்பர்களுடன் கோயிலுட்புகுந்து ஐயர் சேவடிக்கீழ் வீழ்ந்தெழுந்து மெய்யும் முகிழ்ப்ப அருளிய திருப்பதிகம். இப்பதிகத்தின் 7ஆவது பாடலில் நீரில் மூழ்கிய சோழ மன்னனின் மணி மாலையை அவரது வேண்டுகோளுக்கிணங்க ஆரமாக பெற்றுக் கொண்ட ஆனைக்கா அண்ணலின் அளப்பில் கருணையை போற்றுகின்றார் திருநாவலூர் பெருமான்.

திருமுறை : (7) பண் : காந்தாரம்

*திருச்சிற்றம்பலம்*

மறைகள் ஆயின நான்கும்
மற்றுள பொருள்களு மெல்லாம்
துறையும் தோத்திரத் திறையும்
தொன்மையும் நன்மையும் ஆய
அறையும் பூம்புனல் ஆனைக்
காவுடை ஆதியை நாளும்

இறைவன் என்றடி சேர்வார்
எம்மையும் ஆளுடை யாரே. 1

வங்கம் மேவிய வேலை
நஞ்செழ வஞ்சர்கள் கூடித்
தங்கள் மேல்அட ராமை
உண்ணென உண்டிருள் கண்டன்
அங்கம் ஓதிய ஆனைக்
காவுடை ஆதியை நாளும்
எங்கள் ஈசனென் பார்கள்
எம்மையும் ஆளுடை யாரே. 2

நீல வண்டறை கொன்றை
நேரிழை மங்கைஓர் திங்கள்
சால வாள்அர வங்கள்
தங்கிய செஞ்சடை எந்தை
ஆல நீழலுள் ஆனைக்
காவுடை ஆதியை நாளும்
ஏலு மாறுவல் லார்கள்
எம்மையும் ஆளுடை யாரே. 3

தந்தை தாயுல குக்கோர்
தத்துவன் மெய்த்தவத் தோர்க்குப்
பந்த மாயின பெருமான்
பரிசுடை யவர் திரு வடிகள்
அந்தண் பூம்புனல் ஆனைக்
காவுடை ஆதியை என்றடி சேர்வார்
எந்தை என்றடி சேர்வார்
எம்மையும் ஆளுடை யாரே. 4

கணைசெந் தீயவரந்நாண்
கல்வளை யுஞ்சிலை யாகத்
துணைசெய் மும்மதில் மூன்றும்
சுட்டவ னேஉல குய்ய
அணையும் பூம்புனல் ஆனைக்
காவுடை ஆதியை நாளும்
இணைகொள் சேவடி சேர்வார்
எம்மையும் ஆளுடை யாரே. 5

விண்ணின் மாமதி சூடி
விலையிலி கலன்அணி விமலன்
பண்ணின் நேர்மொழி மங்கை
பங்கினன் பசுவுகந் தேறி
அண்ண லாகிய ஆனைக்
காவுடை ஆதியை நாளும்
எண்ணு மாறுவல் லார்கள்
எம்மையும் ஆளுடை யாரே. 6

தார மாகிய பொன்னித்
தண்டுறை ஆடி விழுத்தும்
நீரில் நின்றடி போற்றி
நின்மலா கொள்என ஆங்கே
ஆரங் கொண்டஎம் ஆனைக்
காவுடை ஆதியை நாளும்
ஈரம் உள்ளவர் நாளும்
எம்மையும் ஆளுடை யாரே. 7

உரவம் உள்ளதோர் உழையின்
உரிபுலி அதளுடைய யானை

விரைகொள் கொன்றை யினானை
　　விரிசடை மேற்பிறை யானை
அரவம் வீக்கிய ஆனைக்
　　காவுடை ஆதியை நாளும்
இரவும் எல்லியும் பகலும்
　　ஏத்துவார் எமைஉடை யாரே. 8

வலங்கொள் வாரவர் தங்கள்
　　வல்வினை தீர்க்கும் மருந்து
கலங்கக் காலனைக் காலாற்
　　காமனைக் கண்சிவப் பானை
அலங்கல் நீர்பொரும் ஆனைக்
　　காவுடை ஆதியை நாளும்
இலங்கு சேவடி சேர்வார்
　　எம்மையும் ஆளுடை யாரே. 9

ஆழி யாற்கருள் ஆனைக்
　　காவுடை ஆதிபொன் னடியின்
நீழ லேசர ணாக
　　நின்றருள் கூர நினைந்து
வாழ வல்லவன் றொண்டன்
　　வண்தமிழ் மாலைவல்லார் போய்
ஏழு மாபிறப் பற்று
　　வெம்மையும் ஆளுடையாரே. 10

*திருச்சிற்றம்பலம்*

## மாணிக்க வாசக சுவாமிகள் அருளியது

முன்னானை மூவர்க்கும் முற்றுமாய் முற்றுக்கும்
பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னானை வானவனை மாதியலும் பாதியனைத்
**தென்னானைக் காவானைத்** தென்பாண்டி நாட்டானை
என்னானை என்னப்பன் என்பார்கட்(கு) இன்னமுதை
அன்னானை அம்மானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

*திருச்சிற்றம்பலம்*

# 3. திருஅண்ணாமலை

**இறைவர் : அண்ணாமலையார்**
**இறைவி : உண்ணாமுலை அம்மை**

## திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது

### பதிகம் : 1

உமையம்மையாரை ஒருகூற்றில் கொண்ட பெருமானின் அறையணி நல்லூரில் அமைந்திருக்கும் திருமலையை வலம் வந்த காழிப் பிள்ளையார், பாரின்மல்கிய தொண்டர்கள் இமையவர் நாள்தொறும் பணிந்தேத்தும் காரின் மல்கிய சோலை திருவண்ணாமலை தெரியக்கண்டு காட்ட, வணங்கி மகிழ்ந்தார். அப்பொழுது அருளிய திருப்பதிகம்.

திருமுறை ① பண் : நட்டபாடை

*திருச்சிற்றம்பலம்*

உண்ணாமுலை உமையாளொடும் உடன் ஆகிய ஒருவன்
பெண் ஆகிய பெருமான் மலை திரு மா மணி திகழ
மண் ஆர்ந்தன அருவித்திரள் மழலை முழவுஅதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே. 1

தேமாங்கனி கடுவன் கொள விடு கொம்பொடு தீண்டித்
தூ மா மழை துறுகல் மிசை சிறுநுண்துளி சிதற
ஆமாம்பிணை அணையும் பொழில் அண்ணாமலை அண்ணல்
பூ மாங் கழல் புனை சேவடி நினைவார் வினை இலரே. 2

பீலிம் மயில் பெடையோடு உறை பொழில் சூழ் கழை முத்தம்
சூலிம் மணி தரைமேல் நிறை சொரியும் விரி சாரல்
ஆலிம் மழை தவழும் பொழில் அண்ணாமலை அண்ணல்
காலன் வலி தொலை சேவடி தொழுவாரன புகழே. 3

உதிரும் மயிர் இடு வெண்தலை கலனா உலகுஎல்லாம்
எதிரும் பலி உணவுஆகவும் எருது ஏறுவது அல்லால்
முதிரும் சடை இளவெண்பிறை முடிமேல் கொள அடிமேல்
அதிரும் கழல் அடிகட்கு இடம் அண்ணாமலை அதுவே. 4

மரவம் சிலை தரளம் மிகு மணி உந்து வெள்அருவி
அரவம் செய முரவம் படும் அண்ணாமலை அண்ணல்
உரவம் சடை உலவும் புனல் உடன்ஆவதும் ஓரார்
குரவம் கமழ் நறுமென்குழல் உமை புல்குதல் குணமே. 5

பெருகும் புனல் அண்ணாமலை பிறைசேர் கடல் நஞ்சைப்
பருகும்தனை துணிவார் பொடி அணிவார் அது பருகிக்
கருகும் மிடறு உடையார் கமழ் சடையார் கழல் பரவி
உருகும் மனம் உடையார்தமக்கு உறு நோய்அடை யாவே. 6

கரி காலன குடர் கொள்வன கழுது ஆடிய காட்டில்
நரி ஆடிய நகுவெண்தலை உதையுண்டவை உருள
எரிஆடிய இறைவர்க்கு இடம் இனவண்டு இசை முரல
அரி ஆடிய கண்ணாளொடும் அண்ணாமலை அதுவே. 7

ஒளிறூ புலிஅதள்ஆடையன் உமை அஞ்சுதல் பொருட்டால்
பிளிறூ குரல் மதவாரணம் வதனம் பிடித்து உரித்து
வெளிறூபட விளையாடிய விகிர்தன் இராவணனை
அளறூபட அடர்த்தான் இடம் அண்ணாமலை அதுவே. 8

விளவு ஆர் கனி படநூறிய கடல்வண்ணனும் வேதக்
கிளர் தாமரைமலர்மேல் உறை கேடுஇல் புகழோனும்
அளவா வணம் அழல் ஆகிய அண்ணாமலை அண்ணல்
தளராமுலை முறுவல் உமை தலைவன் அடி சரணே. 9

வேர் வந்துஉற மாசு ஊர்தர வெயில் நின்று உழல்வாரும்
மார்வம் புதை மலி சீவரம் மறையா வருவாரும்
ஆரம்பர்தம் உரை கொள்ளன்மின் அண்ணாமலை அண்ணல்
சுவர்வெண்மழுப்படையான் நல்ல கழல் சேர்வது குணமே. 10

வெம்பு உந்திய கதிரோன் ஒளி விலகும் விரிசாரல்
அம்பு உந்தி மூஎயில் எய்தவன் அண்ணாமலை அதனைக்
கொம்பு உந்துவ குயில் ஆலுவ குளிர் காழியுள் ஞான
சம்பந்தன தமிழ் வல்லவர் அடிபேணுதல் தவமே. 11

*திருச்சிற்றம்பலம்.*

# பதிகம் : 2

(இறைவர் திருமுன்பு)

ஆளுடைய பிள்ளையார், ஆதிமூர்த்தி அண்ணாமலையார் அடிக்கமலம் இறைஞ்சி, அங்கண் இனிது அமர்ந்த நாட்களில் அருளிய திருப்பதிகம். "**நினைத்துத் தொழுவார் பாவம் தீர்க்கும் அண்ணாமலை**" என்று பறைசாற்றும் திருப்பதிகம் இது.

திருமுறை ① பண் : தக்கேசி

திருச்சிற்றம்பலம்

பூ ஆர் மலர் கொண்டு அடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்கள் எரித்த அன்று மூவர்க்கு அருள்செய்தார்
தூ மாமழை நின்று அதிர வெருவித் தொறுவின் நிரையோடும்
ஆமாம்பிணை வந்து அணையும் சாரல் அண்ணாமலையாரே. 1

மஞ்சைப் போழ்ந்த மதியம் சூடும் வானோர்பெருமானோர்
நஞ்சைக் கண்டத்து அடக்குமதுவும் நன்மைப்பொருள்போலும்
வெஞ்சொல் பேசும் வேடர்மடவார் இதணம்அதுஏறி
அம்சொல்கிளிகள் ஆயோ என்னும் அண்ணாமலையாரே. 2

ஞானத்திரள்ஆய் நின்ற பெருமான் நல்ல அடியார்மேல்
ஊனத்திரளை நீக்குமதுவும் உண்மைப் பொருள்போலும்
ஏனத்திரளோடு இனமான் கரடி இழியும் இரவின்கண்
ஆனைத்திரள் வந்து அணையும் சாரல் அண்ணாமலையாரே. 3

இழைத்த இடையாள்உமையாள் பங்கர் இமையோர் பெருமானார்
தழைத்த சடையார் விடைஒன்று ஏறித் தரியார் புரம் எய்தார்
பிழைத்த பிடியைக் காணாது ஓடிப் பெருங்கை மதவேழம்
அழைத்துத் திரிந்து அங்கு உறங்கும் சாரல் அண்ணாமலையாரே 4

உருவில் திகழும் உமையாள் பங்கர் இமையோர் பெருமானார்
செரு வில் ஒரு கால் வளைய ஊன்றிச் செந்தீ எழுவித்தார்
பரு வில் குறவர் புனத்தில் குவித்த பரு மா மணி முத்தம்
அருவித்திரளோடு இழியும் சாரல் அண்ணாமலையாரே. 5

எனைத்து ஓர் ஊழி அடியார் ஏத்த இமையோர் பெருமானார்
நினைத்துத் தொழுவார் பாவம் தீர்க்கும் நிமலர் உறைகோயில்
கனைத்த மேதி காணாது ஆயன் கைம்மேல் குழல் ஊத
அனைத்தும் சென்று திரளும் சாரல் அண்ணாமலையாரே. 6

வந்தித்திருக்கும் அடியார்தங்கள் வரு மேல்வினையோடு
பந்தித்திருந்த பாவம்தீர்க்கும் பரமன் உறை கோயில்
முந்தி எழுந்த முழவின் ஓசை முதுகல்வரைகள்மேல்
அந்திப்பிறை வந்து அணையும் சாரல் அண்ணாமலையாரே. 7

மறம்தான் கருதி வலியை நினைந்து மாறுஆய் எடுத்தான் தோள்
நிறம்தான் முரிய நெறிய ஊன்றி நிறைய அருள்செய்தார்
திறம்தான் காட்டி அருளாய் என்று தேவர்அவர் வேண்ட
அறந்தான் காட்டி அருளிச்செய்தார் அண்ணாமலையாரே. 8

தேடிக் காணார் திருமால் பிரமன் தேவர் பெருமானை
மூடி ஓங்கி முதுவேய் உகுத்த முத்தம்பல கொண்டு
கூடிக் குறவர்மடவார் குவித்துக் கொள்ள வம்மின் என்று
ஆடிப் பாடி அளக்கும் சாரல் அண்ணாமலையாரே. 9

தட்டை இடுக்கித் தலையைப் பறித்துச் சமணே நின்று உண்ணும்
பிட்டர் சொல்லுக் கொள்ள வேண்டா பேணித் தொழுமின்கள்
வட்டமுலையாள் உமையாள் பங்கர் மன்னி உறைகோயில்
அட்டம் ஆளித்திரள் வந்து அணையும் அண்ணாமலையாரே. 10

அல் ஆடுஅரவம் இயங்கும் சாரல் அண்ணாமலையாரை
நல்லார் பரவப்படுவான் காழி ஞானசம்பந்தன்
சொல்லால் மலிந்த பாடல்ஆன பத்தும்இவை கற்று
வல்லார்எல்லாம் வானோர் வணங்க மன்னி வாழ்வாரே. 11

*திருச்சிற்றம்பலம்*

# திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது

## பதிகம் : 1

பைஞ்ஞீலியில் அமர்ந்தருளும் பரமன் திருவருளைப் பருகிய திருநாவுக்கரசர் பெருமான், நாதர் மருவும் திருமலைகள், நாடுகள், பதிகள் பல மிகவும் காதல் கூரச் சென்று இறைஞ்சி, கலந்த இசைவண்தமிழ்பாடி, மாதொரு பாகர் அருளாலே வடபால் நோக்கி, ஆதி தேவர் அமர்ந்தருளும் திருஅண்ணாமலையை நண்ணினார். நடு நாட்டுச் செலவு நயப்பில், திருவண்ணாமலைக்கு எழுந்தருளிய நாவரசர், அம்மலையைத் தொழுது வலங்கொண்டு, வரை (மலை)யின் மிசை ஏறி, அங்கண் அரசைத் தொழு தெழுந்து திளைத்துத் தங்கு பிறப்பே வீட்டினுக்கு மேலாம் பெருமை சாதித்தார். அது பொழுதருளிய பண்ணார் பதிகத் தமிழ் மாலைகள்.

திருமுறை (5) திருக்குறுந்தொகை

*திருச்சிற்றம்பலம்*

பட்டிஏறு உகந்து ஏறிப் பலஇல்லம்
இட்டம்ஆக இரந்து உண்டு உழிதரும்
அட்டமூர்த்தி அண்ணாமலை கைதொழக்
கெட்டுப் போம் வினை கேடு இல்லைக் காண்மினே. 1

பெற்றம் ஏறுவர் பெய் பலிக்கு என்று அவர்
சுற்றமா மிகு தொல்புகழாளொடும்
அற்றம் தீர்க்கும் அண்ணாமலை கைதொழ
நல் தவத்தொடு ஞானத்து இருப்பரே. 2

பல்இல்ஓடு கை ஏந்திப் பலஇல்லம்
ஒல்லை சென்று உணங்கல் கவர்வார்அவர்
அல்லல் தீர்க்கும் அண்ணாமலை கைதொழ
நல்லஆயின நம்மை அடையுமே. 3

பாடிச் சென்று பலிக்கு என்று நின்றவர்
ஓடிப் போயினர் செய்வது ஒன்று என்கொலோ
ஆடிப் பாடி அண்ணாமலை கைதொழ
ஓடிப் போகும் நம் மேலைவினைகளே. 4

தேடிச் சென்று திருந்து அடி ஏத்துமின்
நாடி வந்து அவர் நம்மையும் ஆட்கொள்வர்
ஆடிப் பாடி அண்ணாமலை கைதொழ
ஓடிப் போம் நமது உள்ள வினைகளே. 5

கட்டி ஒக்கும் கரும்பின்இடைத் துணி
வெட்டி வீணைகள் பாடும் விகிர்தனார்
அட்டமூர்த்தி அண்ணாமலை மேவிய
நட்டம் ஆடியை நண்ண நன்கு ஆகுமே. 6

கோணிக்கொண்டையர் வேடம் முன் கொண்டவர்
பாணி நட்டங்கள் ஆடும் பரமனார்
ஆணிப் பொன்னின் அண்ணாமலை கைதொழப்
பேணி நின்ற பெருவினை போகுமே. 7

கண்டம்தான் கறுத்தான் காலன் ஆருயிர்
பண்டு கால்கொடு பாய்ந்த பரமனார்
அண்டத்து ஓங்கும் அண்ணாமலை கைதொழ
விண்டுபோகும் நம் மேலை வினைகளே. 8

முந்திச் சென்று முப்போதும் வணங்குமின்
அந்திவாய் ஒளியாய்தன் அண்ணாமலை
சிந்தியா எழுவார் வினை தீர்த்திடும்
கந்தமாமலர் சூடும் கருத்தனே. 9

மறையினானொடு மாலவன் காண்கிலா
நிறையும் நீர்மையுள் நின்று அருள்செய்தவன்
உறையும் மாண்பின் அண்ணாமலை கைதொழப்
பறையும் நாம் செய்த பாவங்கள் ஆனவே. 10

*திருச்சிற்றம்பலம்*

## பதிகம் : 2

திருமுறை (4) திரு நேரிசை

*திருச்சிற்றம்பலம்*

ஓதி மா மலர்கள் தூவி உமையவள்பங்கா மிக்க
சோதியே துளங்கும் எண்தோள் சுடர் மழுப்படையினானே
ஆதியே அமரர்கோவே அணி அணாமலை உளானே
நீதியால் நின்னை அல்லால் நினையுமா நினைவு இலேனே. 1

பண்தனை வென்ற இன்சொல் பாவை ஓர்பங்க நீல
கண்டனே கார் கொள் கன்றைக் கடவுளே கமலபாதா
அண்டனே அமரர்கோவே அணி அணாமலை உளானே
தொண்டனேன் உன்னை அல்லால் சொல்லுமா சொல் இலேனே 2

உருவமும் உயிரும் ஆகி ஓதிய உலகுக்கு எல்லாம்
பெருவினை பிறப்பு வீடாய் நின்ற எம்பெருமான் மிக்க
அருவி பொன் சொரியும் அண்ணாமலை உளாய் அண்டர்கோவே
மருவி நின் பாதம்அல்லால் மற்று ஒரு மாடு இலேனே. 3

பைம்பொனே பவளக்குன்றே பரமனே பால்வெண்நீற்றா
செம்பொனே மலர் செய் பாதா சீர் தரு மணியே மிக்க
அம் பொனே கொழித்து வீழும் அணி அணாமலை உளானே
என் பொனே உன்னை அல்லால் ஏதும் நான் நினைவு இலேனே 4

பிறை அணி முடியினானே பிஞ்ஞகா பெண் ஓர்பாகா
மறைவலா இறைவா வண்டு ஆர் கொன்றையாய் வாமதேவா
அறைகழல் அமரர் ஏத்தும் அணி அணாமலை உளானே
இறைவனே உன்னை அல்லால் யாதும் நான் நினைவு இலேனே 5

புரிசடைமுடியின்மேல் ஓர் பொரு புனல் கங்கை வைத்துக்
கரிஉரி போர்வைஆகக் கருதிய காலகாலா
அரிகுலம் மலிந்த அண்ணாமலை உளாய் அலரின் மிக்க
வரி மிகு வண்டு பண்செய் பாதம் நான் மறப்பு இலேனே. 6

இரவியும் மதியும் விண்ணும் இரு நிலம் புனலும் காற்றும்
உரகம் ஆர் பவனம்எட்டும் திசை ஒளி உருவம்ஆனாய்
அரவு உமிழ் மணி கொள் சோதி அணியணாமலை உளானே
பரவும் நின் பாதம் அல்லால் பரம நான் பற்று இலேனே. 7

பார்த்தனுக்கு அன்று நல்கிப் பாசுபதத்தை ஈந்தாய்
நீர்த் ததும்பு உலாவு கங்கை நெடு முடி நிலாவ வைத்தாய்
ஆர்த்து வந்து ஈண்டு கொண்டல் அணியணாமலை உளானே
தீர்த்தனே நின்தன் பாதத் திறம்அலால் திறம் இலேனே. 8

பாலு நெய் முதலா மிக்க பசுவில்ஐந்து ஆடுவானே
மாலு நான்முகனும் கூடிக் காண்கிலா வகையுள் நின்றாய்
ஆலும் நீர் கொண்டல் பூசும் அணியணாமலை உளானே
வால் உடை விடையாய் உன்தன் மலர்அடி மறப்பிலேனே. 9

இரக்கம் ஒன்றுயாதும் இல்லாக் காலனைக் கடிந்த எம்மான்
உரத்தினால் வரையை ஊக்க ஒருவிரல்நுதியினாலே
அரக்கனை நெரித்த அண்ணாமலை உளாய் அமரர்ஏறே
சிரத்தினால் வணங்கி ஏத்தித் திருவடி மறப்பிலேனே. 10

*திருச்சிற்றம்பலம்*

# பதிகம் : 3

திருமுறை : 5 திருக்குறுந்தொகை

*திருச்சிற்றம்பலம்*

வட்டனை மதிசூடியை வானவர்
சிட்டனைத் திரு அண்ணாமலையனை
இட்டனை இகழ்ந்தார் புரம்மூன்றையும்
அட்டனை அடியேன் மறந்து உய்வனோ.* 1

வானனைம் மதி சூடிய மைந்தனைத்
தேனனைத் திரு அண்ணாமலையனை
ஏனனை இகழ்ந்தார் புரம்மூன்று எய்த
ஆனனை அடியேன் மறந்து உய்வனோ. 2

---

* *மறந்து உய்வனோ என்று அப்பர் சுவாமிகள் அருளிய இரு திருப்பதிகங்களில் ஒன்று இதுவாகும். ஏனையது தில்லைக்கு உரியது.*

மத்தனை மதயானை உரித்த எம்
சித்தனைத் திரு அண்ணாமலையனை
முத்தனைம் முனிந்தார் புரம்மூன்று எய்த
அத்தனை அடியேன் மறந்து உய்வனோ. 3

காற்றனைக் கலக்கும் வினை போய் அறத்
தேற்றனைத் திரு அண்ணாமலையனைக்
கூற்றனைக் கொடியார் புரம்மூன்று எய்த
ஆற்றனை அடியேன் மறந்து உய்வனோ. 4

மின்னனை வினை தீர்த்து எனை ஆட்கொண்ட
தென்னனைத் திரு அண்ணாமலையனை
என்னனை இகழ்ந்தார் புரம்மூன்று எய்த
அன்னனை அடியேன் மறந்து உய்வனோ. 5

மன்றனைம் மதியாதவன் வேள்விமேல்
சென்றனைத் திரு அண்ணாமலையனை
வென்றனை வெகுண்டார் புரம்மூன்றையும்
கொன்றனைக் கொடியேன் மறந்து உய்வனோ. 6

வீரனை விடம் உண்டனை விண்ணவர்
தீரனைத் திரு அண்ணாமலையனை
ஊரனை உணரார் புரம்மூன்று எய்த
ஆரனை அடியேன் மறந்து உய்வனோ. 7

கருவினைக் கடல்வாய் விடம் உண்ட எம்
திருவினைத் திரு அண்ணாமலையனை
உருவினை உணரார் புரம்மூன்று எய்த
அருவினை அடியேன் மறந்து உய்வனோ. 8

அருத்தனை அரவுஐந்தலைநாகத்தைத்
திருத்தனைத் திரு அண்ணாமலையனைக்
கருத்தனைக் கடியார் புரம்மூன்று எய்த
அருத்தனை அடியேன் மறந்து உய்வனோ. 9

அரக்கனை அலற விரல் ஊன்றிய
திருத்தனைத் திரு அண்ணாமலையனை
இரக்கமாய் என் உடல் உறு நோய்களைத்
துரக்கனைத் தொண்டனேன் மறந்து உய்வனோ. 10

*திருச்சிற்றம்பலம்*

# பதிகம் : 4

அகந்தை கொண்டு எங்கும் தேடியும் மாலும் அயனும் காணமுடியா கண்ணுதற்கடவுளை, நாம் காணுதற்குரிய உபாயங்களை தொகுத்து வழங்கும் அரிய திருப்பதிகம் இது.

திருமுறை (5) இலிங்க புராணத் திருக்குறுந்தொகை

*திருச்சிற்றம்பலம்* .

புக்கணைந்து புரிந்து அலர் இட்டிலர்
நக்கு அணைந்து நறுமலர் கொய்திலர்
சொக்கு அணைந்த சுடர்ஒளிவண்ணனை
மிக்குக் காணல்உற்றார் அங்கு இருவரே. 1

அலரும் நீரும் கொண்டு ஆட்டித் தெளிந்திலர்
திலகம் மண்டலம் தீட்டித் திரிந்திலர்
உலகமூர்த்தி ஒளிநிற வண்ணனைச்
செலவு காணல்உற்றார் அங்கு இருவரே 2

ஆப்பிநீரோடு அலகுகைக் கொண்டிலர்
பூப்பெய்கூடை புனைந்து சுமந்திலர்
காப்புக்கொள்ளி கபாலிதன் வேடத்தை
ஓப்பிக் காணல் உற்றார் அங்கு இருவரே. 3

நெய்யும் பாலும் கொண்டு ஆட்டி நினைந்திலர்
பொய்யும் பொக்கமும் போக்கிப் புகழ்ந்திலர்
ஐயன் வெய்ய அழல்நிற வண்ணனை
மெய்யைக் காணல்உற்றார் அங்கு இருவரே. 4

எருக்கங்கண்ணிகொண்டு இண்டை புனைந்திலர்
பெருக்கக் கோவணம் பீறி உடுத்திலர்
தருக்கினால் சென்று தாழ்சடை அண்ணலை
நெருக்கிக் காணல்உற்றார் அங்கு இருவரே. 5

மரங்கள் ஏறி மலர் பறித்து இட்டிலர்
நிரம்ப நீர் சுமந்து ஆட்டி நினைந்திலர்
உரம் பொருந்தி ஒளிநிற வண்ணனை
நிரம்பக் காணல்உற்றார் அங்கு இருவரே. 6

கட்டுவாங்கம் கபாலம் கைக்கொண்டிலர்
அட்டமாங்கம் கிடந்து அடி வீழ்ந்திலர்
சிட்டன் சேவடி சென்று எய்திக் காணிய
பட்ட கட்டம் உற்றார் அங்கு இருவரே. 7

வெந்த நீறு விளங்க அணிந்திலர்
கந்தமாமலர் இண்டை புனைந்திலர்
எந்தை ஏறு உகந்து ஏறு எரிவண்ணனை
அந்தம் காணல்உற்றார் அங்கு இருவரே. 8

இள எழுந்த இருங்குவளை மலர்
பிளவு செய்து பிணைத்து அடி இட்டிலர்
களவுசெய் தொழில் காமனைக் காய்ந்தவன்
அளவு காணல்உற்றார் அங்கு இருவரே. 9

கண்டி பூண்டு கபாலம் கைக் கொண்டிலர்
விண்ட வான் சங்கம் விம்ம வாய்வைத்திலர்
அண்டமூர்த்தி அழல்நிற வண்ணனைக்
கெண்டிக் காணல்உற்றார் அங்கு இருவரே. 10

செங்கணானும் பிரமனும் தம்முளே
எங்கும் தேடித் திரிந்தவர் காண்கிலார்
இங்கு உற்றேன் என்று இலிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணியமூர்த்தியே. 11

*திருச்சிற்றம்பலம்*

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது

நம்பிகள் இத்தலத்துக்கு அருளிய திருப்பதிகம், நம் தவக்குறைவினால் நமக்குக் கிட்டவில்லை. ஊர்த்தொகையின் ஏழாவது பாடலில் அண்ணாமலை போற்றப்படுவதைக் கண்டு, அதை மனதில் கொண்டு நாமும் போற்றுவோம்.

# ஊர்த்தொகை

திருமுறை : (7) பண் : பழம்பஞ்சுரம்

*திருச்சிற்றம்பலம்*

காட்டூர்க் கடலே கடம்பூர் மலையே
கானப் பேரூராய்
கோட்டூர்க் கொழுந்தே அழுந்தூ ரரசே
கொழுநற் கொல்லேறே
பாட்டூர் பலரும் பரவப் படுவாய்
பனங்காட் டூரானே
மாட்டூர் அறவா மறவா துன்னைப்
பாடப் பணியாயே. 1

கொங்கிற் குறும்பிற் குரக்குத் தளியாய்
குழகா குற்றாலா
மங்குற் றிரிவாய் வானோர் தலைவா
வாய்மூர் மணவாளா
சங்கக் குழையார் செவியா அழகா
அவியா அனல்ஏந்திக்
கங்குற் புறங்காட் டாடீஅடியார்
கவலை களையாயே. 2

நிறைக்காட் டானே நெஞ்சத்தானே
நின்றி யூரானே
மிறைக்காட் டானே புனல்சேர் சடையா
யனல்சேர் கையானே
மறைக்காட் டானேதிருமாந் துறையாய்
மாகோ ணத்தானே
இறைக்காட் டானே எங்கட்குன்னை
எம்மான் தம்மானே. 3

ஆரூர் அத்தா ஐயாற் றமுதே
அளப்பூர் அம்மானே
காரூர் பொழில்கள் புடைசூழ் புறவிற்
கருகா வூரானே
பேரூர் உறைவாய் பட்டிப் பெருமான்
பிறவா நெறியானே
பாரூர் பலரும் பரவப் படுவாய்
பாசூர் அம்மானே. 4

மருகல் உறைவாய் மாகா ளத்தாய்
மதியஞ் சடையானே
அருகற் பிணிநின் னடியார் மேல
அகல அருளாயே
கருகற் குரலாய் வெண்ணிக் கரும்பே
கானூர்க் கட்டியே
பருகப் பணியா யடியார்க் குன்னைப்
பவளப் படியானே. 5

தாங்கூர் பிணிநின் னடியார் மேல
அகல அருளாயே
வேங்கூ ருறைவாய் விளமர் நகராய்
விடையார் கொடியானே
நாங்கூர் உறைவாய் தேங்கூர் நகராய்
நல்லூர் நம்பானே
பாங்கூர் பலிதேர் பரனே பரமா
பழனப் பதியானே. 6

தேனைக் காவல் கொண்டு விண்ட
கொன்றைச் செழுந்தாராய்

வானைக் காவல் கொண்டு நின்றார்
அறியா நெறியானே
ஆனைக் காவில் அரனே பரனே
அண்ணா மலையானே
ஊனைக் காவல் கைவிட் டுன்னை
உகப்பார் உணர்வாரே. 7

துருத்திச் சுடரே நெய்த்தா னத்தாய்
சொல்லாய் கல்லாலா
பருத்தி நியமத் துறைவாய் வெயிலாய்ப்
பலவாய்க் காற்றானாய்
திருத்தித் திருத்தி வந்தென் சிந்தை
இடங்கொள் கயிலாயா
அருத்தித் துன்னை அடைந்தார் வினைக
ளகல அருளாயே. 8

புலியூர்ச் சிற்றம் பலத்தாய் புகலூர்ப்
போதா மூதூரா
பொலிசேர் புரமூன் றெரியச் செற்ற
புரிபுன் சடையானே
வலிசேர் அரக்கன் தடக்கை ஐஞ்ஞான்
கடர்த்த மதிசூடீ
கலிசேர் புறவிற் கடவூர் ஆளீ
காண அருளாயே 9

கைம்மா உரிவை அம்மான் காக்கும்
பலவூர் கருத்துன்னி
மைம்மாந் தடங்கண் மதுர மன்ன
மொழியாள் மடச்சிங்கடி

தம்மான் ஊரன் சடையன் சிறுவன்
அடியன் தமிழ்மாலை
செம்மாந் திருந்து திருவாய் திறப்பார்
சிவலோ கத்தாரே. 10

*திருச்சிற்றம்பலம்*

# மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளியது

# திருஅம்மானை

(திருஅண்ணாமலையில் அருளியது)

## ஆனந்தக் களிப்பு

(ஆனந்தக் கனிவு நிலமதில் வந்து ஆளும் கருணை நினைந்து ஆடல் சுகமேலீடு மகளிர் ஆடும் அம்மானை விளையாட்டிலும் ஈசன் திறமே புகழ்தல்)

*திருச்சிற்றம்பலம்*

செங்கண் நெடுமாலும் சென்றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட்டு எந்தரமும் ஆட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாய் அறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய். 1

பாரார் விசும்புள்ளார் பாதாளத் தார்புறத்தார்
ஆராலும் காண்டற் கரியான்; எமக்கெளிய

பேராளன்; தென்னன்; பெருந்துறையான்; பிச்சேற்றி;
வாராவழியருளி வந்தென் உளம்புகுந்த
ஆரா அமுதாய் அலைகடல்வாய் மீன்விசிறும்
பேராசை வாரியனைப் பாடுதுங்காண் அம்மானாய் 2

இந்திரனும் மாலயனும் ஏனோரும் வானோரும்
அந்தரமே நிற்கச் சிவன் அவனி வந்தருளி
எந்தரமும் ஆட்கொண்டு தோள்கொண்ட நீற்றனாய்ச்
சிந்தனையை வந்துருக்கும் சீரார் பெருந்துறையான்
பந்தம் பறியப்பரி மேற்கொண் டான்தந்த
அந்தமிலா ஆனந்தம் பாடுதுங்காண் அம்மானாய். 3

வான்வந்த தேவர்களும் மாலயனோடு இந்திரனும்
கானின்று வற்றியும் புற்றெழுந்தும் காண்பரிய
தான்வந்து நாயேனைத் தாய்போல் தலையளித்திட்டு
ஊன்வந் துரோமங்கள் உள்ளே உயிர்ப்பெய்து
தேன்வந் தமுதின் தெளிவின் ஒளி வந்த
வான்வந்த வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய். 4

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்ப்புக்குச் சிற்றம் பலம்மன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய். 5

கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவம்காட்டித்
தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி

நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடெய்த
ஆட்டான் கொண்டு ஆண்டவா பாடுதுங்காண் அம்மானாய். 6

ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே உலகேழும்
ஆயானை ஆள்வானைப் பாடுதுங்காண் அம்மானாய். 7

பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்து ஈசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய். 8

துண்டப்பிறையான் மறையான் பெருந்துறையான்
கொண்ட புரிநூலான் கோலமா ஊர்தியான்
கண்டங் கரியான்செம் மேனியான் வெண்ணீற்றான்
அண்டமுதல் ஆயினான் அந்தமிலா ஆனந்தம்
பண்டைப் பரிசே பழவடியார்க்கு ஈந்தருளும்
அண்டம் வியப்புறுமா பாடுதுங்காண் அம்மானாய். 9

விண்ணாளும் தேவர்க்கும் மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கும் மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
கண்ணார் கழல் காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய். 10

செப்பார் முலைபங்கன் தென்னன் பெருந்துறையான்
தப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்கும் தன்மையினான்
அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த
அப்பார் சடையப்பன் ஆனந்த வார்கழலே
ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தார் உள்ளிருக்கும்
அப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்காண் அம்மானாய். 11

மைப்பொலியும் கண்ணிகேள் மாலயனோடு இந்திரனும்
எப்பிறவி யுந்தேட என்னையும்தன் இன்னருளால்
இப்பிறவி ஆட்கொண்டு இனிப்பிறவா மேகாத்து
மெய்ப்பொருட்கண் தோற்றமாய் மெய்யே நிலைபேறாய்
எப்பொருட்கும் தானேயாய் யாவைக்கும் வீடாகும்
அப்பொருளாம் நம்சிவனைப் பாடுதுங்காண் அம்மானாய். 12

கையார் வளைசிலம்பக் காதார் குழையாட
மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்ணீ(று) அணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையானை எங்கும் செறிந்தானை அன்பர்க்கு
மெய்யானை அல்லாதார்க் கல்லாத வேதியனை
ஐயாறு அமர்ந்தானைப் பாடுதுங்காண் அம்மானாய். 13

ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய்
ஏனைப் பிறவாய்ப் பிறந்திறந்(து) எய்த்தேனை
ஊனையும் நின்றுருக்கி என்வினையை ஓட்டுகந்து
தேனையும் பாலையும் கன்னலையும் ஒத்தினிய
கோனவன்போல்வந்தென்னைத்தன்தொழும்பில்கொண்டருளும்
வானவன் பூங்கழலே பாடுதுங்காண் அம்மானாய். 14

சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்தன் வேள்வியினில்
இந்திரனைத் தோள்நெரித்திட் டெச்சன் தலையரிந்து

அந்தரமே செல்லும் அலர்கதிரோன் பல்தகர்த்துச்
சிந்தித் திசைதிசையே தேவர்களை ஓட்டுகந்த
செந்தாரப் பொழில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
மந்தார மாலையே பாடுதுங்காண் அம்மானாய். 15

ஊனாய் உயிராய் உணர்வாய்என் னுட்கலந்து
தேனாய் அமுதமுமாய் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானோர் அறியா வழிஎமக்குத் தந்தருளும்
தேனார் மலர்க்கொன்றைச் சேவகனார் சீரொளிசேர்
ஆனா அறிவாய் அளவிறந்த பல்லுயிர்க்கும்
கோனாகி நின்றவா கூறுதுங்காண் அம்மானாய். 16

சூடுவேன் பூங்கொன்றைச் சூடிச் சிவன்திரள்தோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்(று)
ஊடுவேன் செவ்வாய்க் குருகுவேன் உள்ளுருகித்
தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்தும் மலர்வேன் அனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய். 17

கிளிவந்த மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை
வெளிவந்த மாலயனும் காண்பரிய வித்தகனைத்
தெளிவந்த தேறலைச் சீரார் பெருந்துறையில்
எளிவந்(து) இருந்திரங்கி எண்ணரிய இன்னருளால்
ஒளிவந்தென் உள்ளத்தின் உள்ளே ஒளிதிகழ
அளிவந்த அந்தணனைப் பாடுதுங்காண் அம்மானாய். 18

முன்னானை மூவர்க்கும் முற்றுமாய் முற்றுக்கும்
பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னானை வானவனை மாதியலும் பாதியனைத்
தென்னானைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை

என்னானை என்னப்பன் என்பார்கட்(கு) இன்னமுதை
அன்னானை அம்மானைப் பாடுதுங்காண் அம்மானாய். 19

பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்னடியார்
குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான் தொல்புகழே
பற்றிஇப் பாசத்தைப் பற்றறநாம் பற்றுவான்
பற்றியபே ரானந்தம் பாடுதுங்காண் அம்மானாய். 20

*திருச்சிற்றம்பலம்.*

## திருத்தோள் நோக்கம்

பிரமன் அரியென் றிருவரும்தம் பேதைமையால்
பரமம் யாம்பரமம் என்றவர்கள் பதைப்பொடுங்க
அரனார் அழலுருவாய் அங்கே அளவிறந்து
பரமாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ.

**அண்ணாமலை எம் அண்ணா போற்றி !**

**கண்ணார் அமுதக் கடலே போற்றி !**

# 4. திருக்காளத்தி

**இறைவர் : திருக்காளத்தி நாதர்**

**இறைவி : ஞானப் பூங்கோதை அம்மன்**

## திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது

## பதிகம் : 1

(திருமலையைக் கண்ட அளவில் போற்றி இசைத்தது)

இறைவர் கனவில் அருள தாம் திருஆலங்காடு பெருமானைப் பாடி மகிழ்ந்த பிள்ளையார் இப்பதியினின்றும் எழுந்தருளி திருப்பாசூர் முதலிய பதிகளை வணங்கி பெருவிருப்போடு திருக்காளத்தி மலையை அணுகினார். கண்ணப்பர் திருப்பாதம் தோய்ந்த கானகத்தைக் கடந்து வரும் பிள்ளையாரைக் கண்ட காளத்தி வேடுவர்கள், பெரு விருப்புடன் வரவேற்க, மகிழ்ந்த பிள்ளையார், இம்மலைகளில் திருக்காளத்தி மலை என அழைக்கப் பெறுவது எது? என, அங்கு வந்திருந்த மறவர்கள் இது எனக்காட்ட, வணங்கிப் பதிகம் போற்றிசைத்தவாறு, பொன் முகலியாற்றைக் கடந்து, திருமலைமேல் ஏறி, இறைவர் திருமுன்பு எய்தி வணங்கி, அவ்விறைவரைக் கும்பிட்ட பயன் காண்பார் போல் கண்ணப்பரின் திருவுருவைக் கண்டு வணங்கி, அத்திருவடியையும், அத்திருவடிவில் உறைகின்ற இறைவர் வடிவையும் ஒருங்கு கண்டு வண்ங்கிப் பதிகம் போற்றிசைத்தார். இப்பதிகத்தில் வ்ரும் நான்காவது பாடலில் கண்ணப்பர் தம் அன்பின் மாண்மை சிறப்பிக்கப் படுகிறது.

திருமுறை (3) பண் : சாதாரி

*திருச்சிற்றம்பலம்*

வானவர்கள் தானவர்கள் வாதைபட
வந்தது ஒரு மாகடல் விடம்
தான் அமுதுசெய்து அருள்புரிந்த சிவன்
மேவும் மலைதன்னை வினவில்
ஏனம் இளமானினொடு கிள்ளை தினை
கொள்ள எழிலார்க் கவணினால்
கானவர்தம் மா மகளிர் கனகம் மணி
விலகு காளத்திமலையே 1

முது சின வில் அவுணர் புரம்மூன்றும் ஒரு
நொடிவரையின் மூள எரிசெய்
சதுரர் மதி பொதி சடையர் சங்கரர்
விரும்பும் மலைதன்னை வினவில்
எதிர் எதிர வெதிர் பிணைய எழு பொறிகள்
சிதற எழில் ஏனம் உழுத
கதிர் மணியின் வளர் ஒளிகள் இருள் அகல
நிலவு காளத்திமலையே. 2

வல்லை வரு காளியை வகுத்து வலி
ஆகி மிகு தாருகனை நீ
கொல் என விடுத்து அருள்புரிந்த சிவன்
மேவும் மலை கூறி வினவில்
பல்பல இருங் கனி பருங்கி மிக
உண்டவை நெருங்கி இனம் ஆய்க்
கல் அதிர நின்று கரு மந்தி விளையாடு
காளத்திமலையே 3

வேய் அனைய தோள் உமை ஓர்பாகம்அதுஆக
விடை ஏறி சடைமேல்
தூய மதி சூடி சுடுகாடில் நடம்ஆடி மலை
தன்னை வினவில்
**வாய் கலசம் ஆக வழிபாடு செயும்**
**வேடன்** மலர் ஆகும் நயனம்
காய்கணையினால் இடந்து ஈசன்அடி கூடு
காளத்திமலையே. 4

மலையின்மிசைதனில் முகில் போல் வருவது ஒரு
மதகரியை மழைபோல் அலறக்
கொலைசெய்து உமை அஞ்ச உரி போர்த்த சிவன்
மேவும் மலை கூறி வினவில்
அலை கொள் புனல் அருவி பலசுனைகள் வழி இழிய
அயல் நிலவு முது வேய்
கலகலென ஒளிகொள் கதிர் முத்தம்அவை
சிந்து காளத்திமலையே. 5

பார்அகம் விளங்கிய பகீரதன்
அருந்தவம் முயன்ற பணி கண்டு
ஆர் அருள் புரிந்து அலைகொள் கங்கை சடை
ஏற்ற அரன் மலையை வினவில்
வார் அதர் இருங்குறவர் சேவலில்
மடுத்து அவர் எரித்த விறகில்
கார்அகில் இரும் புகை விசும்பு கமழ்கின்ற
காளத்திமலையே 6

ஆரும் எதிராத வலி ஆகிய
சலந்தரனை ஆழிஅதனால்

ஈரும் வகை செய்து அருள் புரிந்தவன்
இருந்த மலைதன்னை வினவில்
ஊரும் அரவம் ஒளி கொள் மா மணி
உமிழ்ந்தவை உலாவி வரலால்
கார்இருள் கடிந்து கனகம் என விளங்கு
காளத்திமலையே 7

எரி அனைய சுரிமயிர் இராவணனை
ஈடு அழிய எழில் கொள் விரலால்
பெரிய வரை ஊன்றி அருள்செய்த சிவன்
மேவும் மலை பெற்றி வினவில்
வரிய சிலை வேடுவர்கள் ஆடவர்கள்
நீடு வரைஊடு வரலால்
கரியினொடு வரிஉழுவை அரிஇனமும்
வெருவு காளத்திமலையே. 8

இனது அளவில் இவனது அடிஇணையும் முடி
அறிதும் என இகலும் இருவர்
தனது உருவம் அறிவு அரிய சகல சிவன்
மேவும் மலைதன்னை வினவில்
புனவர் புனமயில் அனைய மாதரொடு
மைந்தரும் மணம் புணரும் நாள்
கனகம் என மலர்கள் அணி வேங்கைகள்
நிலாவு காளத்திமலையே. 9

நின்று கவளம்பல கொள் கையரொடு
மெய்யில் இடு போர்வையவரும்
நன்றி அறியாத வகை நின்ற சிவன்
மேவும் மலை நாடி வினவில்

குன்றில் மலி துன்று பொழில் நின்ற குளிர்
சந்தின் முறி தின்று குலவிக்
கன்றினொடு சென்று பிடி நின்று விளையாடு
காளத்திமலையே. 10

காடுஅது இடம்ஆக நடம்ஆடு சிவன்
மேவு காளத்திமலையை
மாடமொடு மாளிகைகள் நீடுவளர்
கொச்சைவயம் மன்னு தலைவன்
நாடுபல நீடு புகழ் ஞானசம்
பந்தன் உரை நல்ல தமிழின்
பாடலொடு பாடும் இசை வல்லவர்கள்
நல்லர் பரலோகம் எளிதே. 11

*திருச்சிற்றம்பலம்*



# பதிகம் : 2

காளத்தி அப்பரையும் கலைமலிந்த சீர் கண்ணப்பரையும் போற்றி மகிழ்ந்த பிள்ளையார், அந்நாட்களில் அங்கிருந்தவாறே திருக்கயிலை, திருக்கேதாரம் மற்றும் சில திருப்பதிகளை போற்றி தென் திசையில் கயிலை என்னும் திருக்காளத்தி மலையிலிருந்து, திருவொற்றியூரை வணங்கும் திருவுளம் கொண்டவராய்க் காளத்திப் பெருமானின் திருவருள் பெற்று மீண்டு வருபவர் **எந்தையார் இணையடி என் மனத்து உள்ளவே** என்னும் கருத்தமைவுடைய இத்திருப்பதிகத்தைப் போற்றிசைத்தார்.

*திருச்சிற்றம்பலம்*

சந்தம் ஆர் அகிலொடு சாதி தேக்கம்மரம்
உந்தும் மா முகலியின் கரையினில் உமையொடும்
மந்தம் ஆர் பொழில் வளர் மல்கு வண் காளத்தி
எந்தையார் இணைஅடி என் மனத்து உள்ளவே. 1

ஆலம் மா மரவமோடு அமைந்த சீர்ச் சந்தனம்
சாலம் மா பீலியும் சண்பகம் உந்தியே
காலம் ஆர் முகலி வந்து அணைதரு காளத்தி
நீலம் ஆர் கண்டனை நினையுமா நினைவதே. 2

கோங்கமே குரவமே கொன்றை அம் பாதிரி
மூங்கில் வந்து அணைதரு முகலியின் கரையினில்
ஆங்கு அமர் காளத்தி அடிகளை அடி தொழ
வீங்கு வெந்துயர் கெடும் வீடு எளிது ஆகுமே. 3

கரும்பு தேன்கட்டியும் கதலியின் கனிகளும்
அரும்பு நீர் முகலியின் கரையினில் அணி மதி
ஒருங்கு வர்ர்சடையினன் காளத்தி ஒருவனை
விரும்புவார் அவர்கள்தாம் விண்ணுலகு ஆள்வரே. 4

வரை தரும் அகிலொடு மா முத்தம் உந்தியே
திரை தரு முகலியின் கரையினில் தேமலர்
விரை தரு.சடைமுடிக் காளத்தி விண்ணவன்
நிரைதரு கழல் இணை நித்தலும் நினைமினே. 5-7

முத்தும் மா மணிகளும் முழுமலர்த்திரள்களும்
எத்து மா முகலியின் கரையினில் எழில்பெறக்

கத்திட அரக்கனைக் கால்விரல் ஊன்றிய
அத்தன்தன் காளத்தி அணைவது கருமமே. 8

மண்ணும் மா வேங்கையும் மருதுகள் பீழ்ந்து உந்தி
நண்ணு மா முகலியின் கரையினில் நன்மை சேர்
வண்ண மா மலரவன் மால் அவன் காண்கிலா
அண்ணலார் காளத்தி ஆங்கு அணைந்து உய்ம்மினே. 9

வீங்கிய உடலினர் விரிதரு துவர்உடைப்
பாங்குஇலார் சொலை விடும் பரன்அடி பணியுமின்
ஓங்கு வண் காளத்தி உள்ளமோடு உணர்தர
வாங்கிடும் வினைகளை வானவர்க்கு ஒருவனே. 10

அட்டமாசித்திகள் அணைதரு காளத்தி
வட்டவார்சடையனை வயல் அணி காழியான்
சிட்ட நால்மறை வல ஞானசம்பந்தன் சொல்
இட்டமாப் பாடுவார்க்கு இல்லையாம் பாவமே. 11

*திருச்சிற்றம்பலம்.*

## திருநாவுக்கரசர் சுவாமிகள் அருளியது

## பதிகம் : 1

திருவாலங்காடுறையும் செல்வர்தம் திறத்தைப் போற்றிய திருநாவுக்கரசர் பெருமான் மற்றும் சில திருப்பதிகளை வணங்கி வடதிசை மேல்வழிக் கொள்வார், பல்பதியும் நெடுங்கிரியும், படர்வனமும் சென்றடைந்து திருக்காரிகரைப் பணிந்து, திருக்காளத்தி மலையை எய்தினார்.

திருக்காளத்தியில் பணிந்தெழுந்து, மன்னு மலை மிசையேறி,

காதணி வெண்குழையானை, காளத்தி மலைக் கொழுந்தை, வேதமொழி மூலத்தை விழுந்து இறைஞ்சி எழுந்து காதல்புரி மனம் களிப்ப, கண் களிப்ப உருவம், அருவம், அருவுருவம் ஆகிய மூன்று நிலைகளிலும் பெருமானைக் கண்டு அப்பரவசத்தில் "**நாதனை என் கண்ணுளான்**" எனும் இத்திருத்தாண்டகத்தை நவின்றார். மலைச்சிகரச் சிகாமணியின் மருங்குறமுன் னேநிற்குஞ், சிலைத்தடக்கை கண்ணப்பர் திருப்பாதமும் சேர்ந்திறைஞ்சினார் கலைவாய்மைக் காவலனார்.

திருமுறை : 6 திருத்தாண்டகம்

*திருச்சிற்றம்பலம்*

விற்று ஊண் ஒன்று இல்லாத நல்கூர்ந்தான்காண்
வியன்கச்சிக் கம்பன்காண் பிச்சை அல்லால்
மற்று ஊண் ஒன்று இல்லாத மா சதுரன்காண்
மயானத்து மைந்தன்காண் மாசு ஒன்று இல்லாப்
பொன் தூண்காண் மா மணிநல்குன்று ஒப்பான்காண்
பொய்யாது பொழில்ஏழும் தாங்கி நின்ற
கல் தூண்காண் காளத்தி காணப்பட்ட
கணநாதன்காண் அவன் என் கண் உளானே. 1

இடிப்பான்காண் என் வினையை ஏகம்பன்காண்
எலும்புஆபரணன்காண் எல்லாம் முன்னே
முடிப்பான்காண் மூஉலகும் ஆயினான்காண்
முறைமையால் ஐம்புரியும் வழுவா வண்ணம்
படித்தான் தலை அறுத்த பாசுபதன்காண்
பராய்த்துறையான் பழனம் பைஞ்ஞீலியான்காண்
கடித்தார் கமழ்கொன்றைக்கண்ணியான்காண்
காளத்தியான்அவன் என் கண் உளானே. 2

நாரணன்காண் நான்முகன்காண் நால்வேதன்காண்
ஞானப்பெருங்கடற்கு ஓர் நாவாய் அன்ன
பூரணன்காண் புண்ணியன்காண் புராணன் தான்காண்
புரிசடைமேல் புனல் ஏற்ற புனிதன் தான்காண்
சாரணன்காண் சந்திரன்காண் கதிரோன் தான்காண்
தன்மைக்கண் தானேகாண் தக்கோர்க்கு எல்லாம்
காரணன்காண் காளத்தி காணப்பட்ட
கணநாதன்காண் அவன் என் கண் உளானே. 3

செற்றான்காண் என் வினையைத் தீஆடீகாண்
திரு ஒற்றியூரான்காண் சிந்தை செய்வார்க்கு
உற்றான்காண் ஏகம்பம் மேவினான்காண்
உமையாள்நல்கொழுநன்காண் இமையோர் ஏத்தும்
சொல்தான்காண் சோற்றுத்துறை உளன்காண்
சுறாவேந்தன் ஏவலத்தை நீறா நோக்கக்
கற்றான்காண் காளத்தி காணப்பட்ட
கணநாதன்காண் அவன் என் கண் உளானே. 4

மனத்துஅகத்தான் தலைமேலான் வாக்கின் உள்ளான்
வாய் ஆரத் தன் அடியே பாடும் தொண்டர்
இனத்துஅகத்தான் இமைய்வர்தம் சிரத்தின் மேலான்
ஏழ்அண்டத்து அப்பாலான் இப் பால் செம்பொன்
புனத்துஅகத்தான் நறுங்கொன்றைப்போதின் உள்ளான்
பொருப்புஇடையான் நெருப்புஇடையான் காற்றின் உள்ளான்
கனத்துஅகத்தான் கயிலாயத்து உச்சி உள்ளான்
காளத்தியான் அவன் என் கண் உளானே. 5

எல்லாம் முன் தோன்றாமே தோன்றினான்காண்
ஏகம்பம் மேயான்காண் இமையோர் ஏத்தப்

பொல்லாப் புலன்ஐந்தும் போக்கினான்காண்
        புரிசடைமேல் பாய்கங்கை பூரித்தான்காண்
நல்ல விடை மேற்கொண்டு நாகம் பூண்டு
        நளிர் சிரம் ஒன்று ஏந்தி ஓர் நாணாய் அற்ற
கல்ஆடை மேல் கொண்ட காபாலிகாண்
        காளத்தியான் அவன் என் கண் உளானே. 6

கரிவுருவுகண்டத்து எம் கண் உளான்காண்
        கண்டன்காண் வண்டு உண்ட கொன்றையான்காண்
எரி பவள வண்ணன்காண் ஏகம்பன்காண்
        எண்திசையும் தானாய குணத்தினான்காண்
திரிபுரங்கள் தீ இட்ட தீ ஆடீகாண்
        தீவினைகள் தீர்த்திடும் என் சிந்தையான்காண்
கரிஉரிவை போர்த்து உகந்த காபாலிகாண்
        காளத்தியான்அவன் என் கண் உளானே. 7

இல்ஆடிச் சில்பலி சென்று ஏற்கின்றான்காண்
        இமையவர்கள் தொழுது இறைஞ்ச இருக்கின்றான்காண்
வில்ஆடி வேடனாய் ஓடினான்காண்
        வெண்நூலும் சேர்ந்த அகலத்தான்காண்
மல் ஆடு திரள்தோள்மேல் மழுவாளன்காண்
        மலைமகள் தன் மணாளன்காண் மகிழ்ந்து முன்நாள்
கல்லாலின்கீழ் இருந்த காபாலிகாண்
        காளத்தியான் அவன் என் கண் உளானே. 8

தேனப் பூ வண்டு உண்ட கொன்றையான்காண்
        திரு ஏகம்பத்தான்காண் தேன் ஆர்ந்து உக்க
**ஞானப்பூங்கோதையாள் பாகத்தான்காண்**
        நம்பன்காண் ஞானத்துஒளி ஆனான்காண்
வானப்பேர் ஊரும் மறிய ஓடி
        மட்டித்து நின்றான்காண் வண்டார் சோலைக்

கானப்பேரூரான்காண் கறைக்கண்டன்காண்
காளத்தியான் அவன் என் கண் உளானே. 9

இறையவன்காண் ஏழ்உலகும் ஆயினான்காண்
ஏழ்கடலும் சூழ்மலையும் ஆயினான்காண்
குறை உடையார் குற்றேவல் கொள்வான் தான்காண்
குடமூக்கில் கீழ்க்கோட்டம் மேவினான்காண்
மறை உடைய வானோர்பெருமான் தான்காண்
மறைக்காட்டு உறையும் மணிகண்டன்காண்
கறை உடைய கண்டத்து எம் காபாலிகாண்
காளத்தியான் அவன் என் கண் உளானே. 10

உண்ணா அருநஞ்சம் உண்டான்தான்காண்
ஊழித்தீ அன்னான்காண் உகப்பார் காணப்
பண் ஆரப் பல்லியம் பாடினான்காண்
பயின்ற நால்வேதத்தின் பண்பினான்காண்
அண்ணாமலையான்காண் அடியார்ஈட்டம்
அடிஇணைகள் தொழுது ஏத்த அருளுவான்காண்
கண் ஆரக் காண்பார்க்கு ஓர் காட்சியான்காண்
காளத்தியான் அவன் என் கண் உளானே. 11

*திருச்சிற்றம்பலம்*

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது

## பதிகம் : 1

திருமாற்பேறு அணைந்து வணங்கிய சைவமுதல் திருத்தொண்டர் ஆகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள், மற்றும் சில பதிகளை வணங்கி திருக்காளத்தி மலை சேர்ந்தார். தடுக்கலாகா

பெருங்காதல் தலைநின்றருளும் கண்ணப்பர் திருத்தொண்டினை ஏற்றுக் கொண்டு மகிழ்ந்த காளத்தி அப்பரை வணங்கி, உள்ளங் களி கூர மகிழ்ந்து **செண்டாடு** என்னும் இப்பதிகம் பாடி, திருக்காளத்தி மன்னனார் கண்ணில் புண் நீர் தம் கண்ணால் மாற்றப்பெற்ற கண்ணப்ப நாயனார் கழற் சேவடிகளையும் வணங்கினார்.

திருமுறை : (7) பண் : நட்டராகம்

*திருச்சிற்றம்பலம்*

செண்டா டும்விடையாய் சிவனேயென் செழுஞ்சுடரே
வண்டாருங் குழலாள் உமைபாகம் மகிழ்ந்தவனே
கண்டார் காதலிக்குங் கணநாதன்எங் காளத்தியாய்
அண்டா உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே. 1

இமையோர் நாயகனே இறைவாஎன் னிடர்த்துணையே
கமையார் கருணையினாய் கருமாமுகில் போல்மிடற்றாய்
உமையோர் கூறுடையாய் உருவேதிருக் காளத்தியுள்
அமைவே உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே. 2

படையார் வெண்மழுவா பகலோன்பல் லுகுத்தவனே
விடையார் வேதியனே விளங்குங்குழைக் காதுடையாய்
கடையார் மாளிகைசூழ் கணநாதன்எங் காளத்தியாய்
உடையாய் உன்னையல்லால் உகந்தேத்த மாட்டேனே. 3

மறிசேர் கையினனே மதமாவுரி போர்த்தவனே
குறியே என்னுடைய குருவேவுன்குற் றேவல்செய்வேன்
நெறியே நின்றடியார் நினைக்கும் திருக்காளத்தியுள்
அறிவே உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே. 4

செஞ்சேல் அன்னகண்ணார் திறத்தேகிடந் துற்றலறி
நஞ்சேன் நான்அடியேன் நலம் ஒன்றறி யாமையினால்

துஞ்சேன் நான்ஒருகால் தொழுதேன்திருக் காளத்தியாய்
அஞ்சா துன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே. 5

பொய்யவன் நாயடியேன் புகவேநெறி ஒன்றறியேன்
செய்யவ னாகிவந்திங் கிடர் ஆனவை தீர்த்தவனே
மெய்யவ னேதிருவே விளங்குந்திருக் காளத்திஎன்
ஐயநுன் றன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே. 6

கடியேன் காதன்மையாற் கழற்போதறி யாதஎன்னுள்
குடியாக் கோயில்கொண்ட குளிர்வார்சடை எம்குழகா
முடியால் வானவர்கள் முயங்குந்திருக் காளத்தியாய்
அடியேன் உன்னையல்லா லறியேன்மற் றொருவரையே. 7

நீறார் மேனியனே நிமலாநினை அன்றிமற்றுக்
கூறேன் ஆவதனாற் கொழுந்தேயென் குணக்கடலே
பாறார் வெண்டலையிற் பலிகொண்டுழல் காளத்தியாய்
ஏறே உன்னையல்லால் இனிஏத்த மாட்டேனே. 8

தளிர்போல் மெல்லடியாள் தனைஆகத் தமர்ந்தருளி
எளிவாய் வந்தென்உள்ளம் புகுதவல்ல எம்பெருமான்
களியார் வண்டறையுந் திருக்காளத்தி யுள்ளிருந்த
ஒளியே உன்னையல்லால் இனிஒன்றும் உணரனே. 9

காரூ ரும்பொழில்சூழ் கணநாதன்எங் காளத்தியுள்
ஆரா இன்னமுதை அணிநாவலா ரூரன்சொன்ன
சீரூர் செந்தமிழ்கள் செப்புவார்வினை யாயினபோய்ப்
பேரா விண்ணுலகம் பெறுவார்பிழைப் பொன்றிலரே. 10

*திருச்சிற்றம்பலம்*

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும்ஆட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

பொருள்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்றசீரடி வாய்க்கலசம் ஊனமுதம்
விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்கு
அருள்பெற்று நின்றவா தோணோக்கம் ஆடாமோ.

*திருச்சிற்றம்பலம்*

# 5. திருத்தில்லை

**இறைவர் : தில்லைக் கூத்தர், திருமூல நாதர்**
**இறைவி : சிவகாமி அம்மை, உமையம்மை**

## திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது

## பதிகம் : 1

ஆளுடைய பிள்ளையார், தமது நான்காவது செலவு நயப்பில் தில்லையின் தென் திரு வாயில் வழியாகச் சென்று முறையே கூத்தப்பிரானை முறையே வணங்கி, அண்ணலார் தமக்களித்த மெய்ஞ்ஞானமே ஆன அம்பலமும் தம் உள் நிறைந்த ஞானத்தெழும் ஆனந்த ஒரு பெருந் தனிக் கூத்துங் கண்ணின் முன் புறக் கண்டுகும் பிட்டெழுங் களிப்பொடு போற்றுவார் புனிதராடிய பொற்பு.

இணையில் வன்பெருங் கருணையே ஏத்திமுன்

எடுத்தசொற் பதிகத்தில், புணரும் இன்னிசை பாடினர், ஆடினர், பொழிந்தனர், விழிமாரி. ஊழி முதல்வர்க் குரிமைத் தொழிற்சிறப்பால் வாழி திருத் தில்லைவாழ் அந்தணரை முன்வைத்தே ஏழிசையும் ஓங்க எடுத்திசைத்த திருப்பதிகம் இது.

திருமுறை (1) பண் : குறிஞ்சி

*திருச்சிற்றம்பலம்*

கற்றாங்கு எரிஓம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம்பலம் மேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே 1

பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட்டு எரிஓம்பும்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம்பலம் மேய
பிறப்பில் பெருமானைப் பின்தாழ் சடையானை
மறப்பிலார் கண்டீர் மையல் தீர்வாரே 2

மையார் ஒண்கண்ணார் மாட நெடுவீதிக்
கையால் பந்தோச்சும் கழிசூழ் தில்லையுள்
பொய்யா மறைபாடல் புரிந்தான் உலகேத்தச்
செய்யான் உறைகோயில் சிற்றம்பலம்தானே 3

நிறைவெண் கொடிமாடம் நெற்றி நேர்தீண்டப்
பிறைவந்து இறைதாக்கும் பேரம்பலம் தில்லைச்
சிறைவண்டு அறைஓவாச் சிற்றம்பலம் மேய
இறைவன் கழல்ஏத்தும் இன்பம் இன்பமே 4

செல்வ நெடுமாடம் சென்று சேண்ஓங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற

செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பலம் மேய
செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே 5

வருமாந் தளிர்மேனி மாதோர் பாகமாம்
திருமாந் தில்லையுள் சிற்றம்பலம் மேய
கருமான் உரியாடைக் கறைசேர் கண்டத்துளம்
பெருமான் கழல்அல்லால் பேணாது உள்ளமே 6

அலையார் புனல்சூடி ஆகத்து ஒருபாகம்
மலையான் மகளோடு மகிழ்ந்தான் உலகேத்தச்
சிலையால் எயிலெய்தான் சிற்றம்பலம் தன்னைத்
தலையால் வணங்குவார் தலை ஆனார்களே 7

கூர்வாள் அரக்கன்தன் வலியைக் குறைவித்துச்
சீராலே மல்கு சிற்றம்பலம் மேய
நீரார் சடையானை நித்தல் ஏத்துவார்
தீரா நோயெல்லாம் தீர்தல் திண்ணமே. 8

கோணா கணையானும் குளிர் தாமரையானும்
காணார் கழலேத்தக் கனலாய் ஓங்கினான்
சேணார் வாழ்தில்லைச் சிற்றம்பலம் ஏத்த
மாணா நோய்எல்லாம் வாளா மாயுமே. 9

பட்டைத் துவராடைப் படிமம் கொண்டாடும்
முட்டைக் கட்டுரை மொழிவ கேளாதே
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம்பலம் மேய
நட்டப் பெருமானை நாளும் தொழுவோமே. 10

ஞாலத்து உயர்காழி ஞான சம்பந்தன்
சீலத்தார் கொள்கைச் சிற்றம்பலம் மேய

சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை
கோலத்தால் பாட வல்லார் நல்லாரே. 11

*திருச்சிற்றம்பலம்*

## பதிகம் : 2

திருவேட்களம், திருக்கழிப்பாலை, திருவுச்சி ஆகிய தலங்களை வணங்கிய திருஞானசம்பந்தர், தில்லை வாழ் அந்தணர்கள் கூத்தப்பிரானின் அணுக்கத் தொண்டர்களாயிருக்கும் அருமைப்பாட்டைக் கண்டு வியந்து தில்லைக்கு வருகின்ற போது தில்லை மூவாயிரவர்களும் சிவகணநாதர்களாகத் தோன்ற, அவ்வரிய காட்சியினைத் திருநீலகண்டயாழ்ப்பாணருக்கும் காட்டி மகிழ்ந்தார். பின் தில்லைத் திருவாயினுள் சென்ற பிள்ளையார், மாணிக்கக்கூத்தரின் திருவடியின் கீழுள்ள திருக்களிற்றுப் படியின்கீழ் நின்று, பேரார்வத்தால் பாடிய திருப்பதிகம்.

திருமுறை (3) பண் : காந்தாரபஞ்சமம்

*திருச்சிற்றம்பலம்*

ஆடினாய் நறு நெய்யொடு பால்தயிர்
அந்தணர் பிரியாத சிற்றம்பலம்
நாடினாய் இடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய் மறையோடு பல்கீதமும்
பல்சடைப்பனி கால்கதிர் வெண்திங்கள்
சூடினாய் அருளாய் சுருங்க எம் தொல்வினையே 1

கொட்டமே கமழும் குழலாளொடு
கூடினாய் எருது ஏறினாய் நுதல்

பட்டமே புனைவாய் இசை பாடுவ பாரிடமா
நட்டமே நவில்வாய் மறையோர் தில்லை
நல்லவர் பிரியாத சிற்றம்பலம்
இட்டமா உறைவாய் இவை மேவியது என்னைகொலோ. 2

நீலத்தார் கரியமிடற்றார் நல்ல
நெற்றி மேல்உற்ற கண்ணினார் பற்று
சூலத்தார் சுடலைப்பொடி நீறு அணிவார் சடையார்
சீலத்தார் தொழுது ஏத்து சிற்றம்பலம்
சேர்தலால் கழல் சேவடி கைதொழக்
கோலத்தாய் அருளாய் உனகாரணம் கூறுதுமே. 3

கொம்பலைத்து அழகு எய்திய நுண்ணிடைக்
கோலவாள்மதி போல முகத்து இரண்டு
அம்பலைத்த கண்ணாள் முலை மேவிய வார்சடையான்
கம்பலைத்து எழு காமுறு காளையர்
காதலால் கழல் சேவடி கைதொழ
அம்பலத்து உறைவான் அடியார்க்கு அடையாவினையே. 4

தொல்லையார் அமுது உண்ண நஞ்சு உண்டது ஓர்
தூமணி மிடறா பகுவாயது ஓர்
பல்லையார் தலையில் பலியேற்று உழல் பண்டரங்கா
தில்லையார் தொழுது ஏத்து சிற்றம்பலம்
சேர்தலால் கழல்சேவடி கைதொழ
இல்லையாம் வினைதான் எரிய மதில் எய்தவனே. 5

ஆகம்தோய்அணி கொன்றையாய் அனல்
அங்கையாய் அமரர்க்கு அமரா உமை
பாகம்தோய்பகவா பலியேற்று உழல் பண்டரங்கா
மாகம்தோய் பொழில் மல்குசிற்றம்பலம்

மன்னினாய் மழுவாளினாய் அழல்
நாகம் தோய் அரையாய் அடியாரை நண்ணா வினையே. 6

சாதியார் பளிங்கினொடு வெள்ளிய
சங்கவார் குழையாய் திகழப்படும்
வேதியா விகிர்தா விழவார் அணி தில்லைதன்னுள்
ஆதியாய்க்கு இடம் ஆய சிற்றம்பலம்
அம்கையால் தொழ வல் அடியார்களை
வாதியாது அகலும் நலியாமலி தீவினையே. 7

வேயினார் பணைத் தோளியோடு ஆடலை
வேண்டினாய் விகிர்தா உயிர்கட்கு அமுது
ஆயினாய் இடுகாட்டுளரி ஆடல் அமர்ந்தவனே
தீயினார் கணையால் புரம் மூன்று எய்த
செம்மையாய் திகழ்கின்ற சிற்றம்பலம்
மேவினாய் கழலே தொழுது எய்துதும் மேல்உலகே. 8

தாரினார் விரி கொன்றையாய் மதி
தாங்கு நீள் சடையாய் தலைவா நல்ல
தேரினார் மறுகின் திருஆர் அணி தில்லைதன்னுள்
சீரினால் வழிபாடு ஒழியாதது ஓர்
செம்மையால் அழகாய சிற்றம்பலம்
ஏரினால் அமர்ந்தாய் உன் சீர் அடி ஏத்துதுமே. 9

வெற்று அரை உழல்வார் துவர் ஆடைய
வேடத்தார் அவர்கள் உரை கொள்ளன்மின்
மற்றவர் உலகின் அவலம் அவை மாற்றகில்லார்
கற்றவர் தொழுது ஏத்து சிற்றம்பலம்
காதலால் கழல்சேவடி கைதொழ
உற்றவர் உலகின் உறுதிகொள வல்லவரே. 10

நாறுபூம்பொழில் நண்ணிய காழியுள்
நான்மறைவல்ல ஞானசம்பந்தன்
ஊறும் இன்தமிழால் உயர்ந்தார் உறை தில்லைதன்னுள்
ஏறுதொல்புகழ் ஏந்து சிற்றம்பலத்து
ஈசனை இசையால் சொன்ன பத்து இவை
கூறும் ஆறு வல்லார் உயர்ந்தாரொடும் கூடுவரே. 11

*திருச்சிற்றம்பலம்.*

## திருநாவுக்கரசர் சுவாமிகள் அருளியது

### பதிகம் : 1

**(இறைவன் திருமுன்பு)**

**திருமுதுகுன்றத்தை பணிந்த திருநாவுக்கரசர்** பெருமான் அருகிலுள்ள சில பதிகளை பணிந்து கீழ்த்திசையின் கண்ணுள்ள நிவா நதிக்கரை.வழியாகத் திருப்புலியூரின் மருங்கணைந்தார். திருப்புலியூர் எனப் போற்றப் பெறும் .திருத்தில்லையை அணையுங்கால், குயில்களும், கிளிகளும், பூவைகளும் போற்றி மகிழ, மேற்கு வாயிலின் வழியாகச், சிவமே நிலவிய திருவீதிகளின் வழிச் சென்று, கூத்தப் பெருமானை ஆர்வம் மிகக் கும்பிட்டு மகிழ்ந்து அருளிய பதிகங்களில் ஒன்று இது. இப்பதிகத்தில் **ஒன்றியிருந்து** என வரும் இரண்டாவது பாடலில் தில்லையுள் **சிற்றம்பலத்து நட்டம் என்று வந்தாய்** என்னும் எம்பெருமான் தன் திருக்குறிப்பே, எனும் தொடர் அமைந்துள்ளது. இத்திருவாக்கைத்திருவுளங்கொண்டே சேக்கிழாரும், இத்தன்மையர்

பலமுறையும் தொழுதெழ என்று எய்தினை என, மன்றாடும் அத்தன் திருவருள் பொழியும் கருணையின் வினவினார் என அருளுவாராயினர்.

திருமுறை (4) திரு விருத்தம் பண் : கொல்லி

*திருச்சிற்றம்பலம்*

கரு நட்ட கண்டனை அண்டத்தலைவனைக் கற்பகத்தைச்
செரு நட்ட மும்மதில் எய்ய வல்லானைச் செந்தீ முழங்கத்
திருநட்டம்ஆடியைத் தில்லைக்கு இறையைச் சிற்றம்பலத்துப்
பெருநட்டம்ஆடியை வானவர்கோன் என்று வாழ்த்துவனே. 1

ஒன்றி இருந்து நினைமின்கள் உம்தமக்கு ஊனம் இல்லைக்
கன்றிய காலனைக் காலால் கடிந்தான் அடியவற்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுள் சிற்றம்பலத்து நட்டம்
என்று வந்தாய் என்னும் எம்பெருமான்தன் திருக்குறிப்பே. 2

கல்மனவீர் கழியும் கருத்தே சொல்லிக் காண்பது என்னே
நல்மனவர் நவில் தில்லையுள் சிற்றம்பலத்து நட்டம்
பொன்மலையில் வெள்ளிக்குன்றது போலப் பொலிந்து இலங்கி
என் மனமே ஒன்றிப் புக்கனன் போந்த சுவடு இல்லையே. 3

குனித்த புருவமும் கொவ்வைச்செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால்வெண்நீறும்
இனித்தம் உடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப்பிறவியும் வேண்டுவதே இந்த மா நிலத்தே. 4

வாய்த்தது நம்தமக்கு ஈது ஓர் பிறவி மதித்திடுமின்
பார்த்தற்குப் பாசுபதம் அருள்செய்தவன் பத்தர் உள்ளீர்

கோத்து அன்று முப்புரம் தீ வளைத்தான் தில்லை அம்பலத்துக்
கூத்தனுக்கு ஆட்பட்டு இருப்பதுஅன்றோ நம்தம் கூழைமையே. 5

பூத்தன பொன்சடை பொன்போல் மிளிரப் புரிகணங்கள்
ஆர்த்தன கொட்டி அரித்தன பல்குறள்பூதகணம்
தேத்தென என்று இசை வண்டுகள் பாடு சிற்றம்பலத்துக்
கூத்தனில் கூத்து வல்லார் உளரோ என்தன் கோல்வளைக்கே 6

முடி கொண்ட மத்தமும் முக்கண்ணின் நோக்கும் முறுவலிப்பும்
துடி கொண்ட கையும் துதைந்த வெண்நீறும் சுரிகுழலாள்
படி கொண்ட பாகமும் பாய் புலித்தோலும் என் பாவிநெஞ்சில்
குடி கொண்டவா தில்லை அம்பலக் கூத்தன் குரைகழலே. 7

படைக்கலமாகஉன்நாமத்துஎழுத்துஅஞ்சும்என்நாவில்கொண்டேன்
இடைக்கலம் அல்லேன் எழுபிறப்பும் உனக்கு ஆட்செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித் தூ நீறு அணிந்து உன்
அடைக்கலம்கண்டாய் அணி தில்லைச் சிற்றம்பலத்து அரனே 8

பொன் ஒத்த மேனிமேல் வெண்நீறு அணிந்து புரிசடைகள்
மின் ஒத்து இலங்கப் பலி தேர்ந்து உழலும் விடங்கர்வேடச்
சின்னத்தினால் மலி தில்லையுள் சிற்றம்பலத்து நட்டம்
என் அத்தன் ஆடல் கண்டு இன்புஉற்றதால் இவ் இரு நிலமே 9

சாட எடுத்தது தக்கன்தன் வேள்வியில் சந்திரனை
வீட எடுத்தது காலனை நாரணன் நான்முகனும்
தேடஎடுத்தது தில்லையுள் சிற்றம்பலத்து நட்டம்
ஆட எடுத்திட்ட பாதம் அன்றோ நம்மை ஆட்கொண்டதே. 10

*திருச்சிற்றம்பலம்*

# பதிகம் : 2

## (இறைவன் திருமுன்பு)

**என்று வந்தாய் என இறைவர் வினவி அருளியதற்கு** விடையாகவே **அத்தா உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே** என்னும் திருவாக்கு மூலம் விடை கூறுவார் போல் எதற்கு வந்தேன் என்பதையும் உள்ளடக்கி விண்ணப்பித்த இத்திருப்பதிகத்தின் திறம் அறிந்து இன்புறத் தக்கதாம்.

திருமுறை (4) திருநேரிசை பண் : கொல்லி

*திருச்சிற்றம்பலம்*

பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகீ
எத்தினால் பத்தி செய்கேன் என்னை நீ இகழவேண்டா
முத்தனே முதல்வா தில்லை அம்பலத்து ஆடுகின்ற
அத்தா உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே. 1

கருத்தனாய்ப் பாடமாட்டேன் காம்பன தோளி பங்கா
ஒருத்தரால் அறிய ஒண்ணாத் திருஉரு உடைய சோதீ
திருத்தமாம் தில்லைதன்னுள் திகழ்ந்த சிற்றம்பலத்தே
நிருத்தம் நான் காண வேண்டி நேர்பட வந்தவாறே. 2

கேட்டிலேன் கிளைபிரியேன் கேட்குமா கேட்டிஆகில்
நாட்டினேன் நின்தன் பாதம் நடுப்பட்ட நெஞ்சினுள்ளே
மாட்டில் நீர் வாளை பாயு மல்கு சிற்றம்பலத்தே
கூட்டமாம் குவிமுலையாள் கூட நீ ஆடுமாறே. 3

சிந்தையைத் திகைப்பியாதே செறிவு உடை அடிமை செய்ய
எந்தை நீ அருளிச் செய்யாய் யாது நான் செய்வது என்னே

செந்தியார் வேள்வி ஓவாத் தில்லைச் சிற்றம்பலத்தே
அந்தியும் பகலும் ஆட அடிஇணை அலசும்கொல்லோ. 4

கண்டவா திரிந்து நாளும் கருத்தினால் நின்தன் பாதம்
கொண்டிருந்து ஆடிப் பாடிக் கூடுவன் குறிப்பினாலே
வண்டு பண் பாடும் சோலை மல்கு சிற்றம்பலத்தே
எண்திசையோரும் ஏத்த இறைவ நீ ஆடுமாறே. 5

பார்த்திருந்து அடியனேன் நான் பரவுவன் பாடி ஆடி
மூர்த்தியே என்பன் உன்னை மூவரில் முதல்வன் என்பன்
ஏத்துவார் இடர்கள் தீர்ப்பாய் தில்லைச் சிற்றம்பலத்துக்
கூத்தா உன் கூத்துக் காண்பான் கூட நான் வந்தவாறே. 6

பொய்யினைத் தவிர விட்டுப் புறம் அலா அடிமை செய்ய
ஐய நீ அருளிச் செய்யாய் ஆதியே ஆதிமூர்த்தி
வையகம் தன்னில் மிக்க மல்கு சிற்றம்பலத்தே
பைய நின் ஆடல் காண்பான் பரம நான் வந்தவாறே. 7

மனத்தினார் திகைத்து நாளும் மாண்பு அலா நெறிகள்மேலே
கனைப்பரால் என் செய்கேனோ கறை அணி கண்டத்தானே
தினைத்தனை வேதம் குன்றாத் தில்லைச் சிற்றம்பலத்தே
அனைத்தும் நின் இலயம் காண்பான் அடியனேன் வந்தவாறே. 8

நெஞ்சினைத் தூய்மை செய்து நினைக்குமா நினைப்பியாதே
வஞ்சமே செய்தியாலோ வானவர் தலைவனே நீ
மஞ்சு அடை சோலைத் தில்லை மல்கு சிற்றம்பலத்தே
அஞ் சொலாள் காண நின்று அழக நீ ஆடுமாறே. 9

மண் உண்ட மாலவனும் மலர்மிசை மன்னினானும்
விண் உண்ட திருஉருவம் விரும்பினார் காணமாட்டார்

திண்ணுண்ட திருவே மிக்க தில்லைச் சிற்றம்பலத்தே
பண்ணுண்ட பாடலோடும் பரம நீ ஆடுமாறே. 10

*திருச்சிற்றம்பலம்*

# பதிகம் : 3

அத்தா உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே என்று வணங்கி மகிழ்ந்த் நாவரசர் திரு முன்றிலின் கண்ணும் திருவீதியின்கண்ணும் உழவாரத் திருப்பணி செய்வாராய் **அன்னம் பாலிக்கும்** என வரும் திருப்பதிகத்தை அருளிச் செய்தவாறு அப்பணி தலைநின்றார்.

திருமுறை (5) திருக்குறுந்தொகை

*திருச்சிற்றம்பலம்*

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலும் இப் பூமிசை
என் அன்பு ஆலிக்குமாறு கண்டு இன்புற
இன்னம் பாலிக்குமோ இப் பிறவியே. 1

அரும்பு அற்றப் பட ஆய் மலர் கொண்டு நீர்
சுரும்பு அற்றப் படத் தூவித் தொழுமினோ
கரும்பு அற்றச் சிலைக் காமனைக் காய்ந்தவன்
பெரும்பற்றப்புலியூர் எம்பிரானையே. 2

அரிச்சுஉற்ற வினையால் அடர்ப்புண்டு நீர்
எரிச் சுற்றக் கிடந்தார் என்று அயலவர்
சிரிச்சுஉற்றுப் பல பேசப்படாமுனம்
திருச்சிற்றம்பலம் சென்று அடைந்து உய்ம்மினே. 3

அல்லல் என் செயும் அருவினை என் செயும்
தொல்லை வல்வினைத் தொந்தம்தான் என் செயும்
தில்லை மா நகர்ச் சிற்றம்பலவனார்க்கு
எல்லைஇல்லது ஓர் அடிமை பூண்டேனுக்கே. 4

ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுதுஎலாம்
நான் நிலாவி இருப்பன் என் நாதனைத்
தேன் நிலாவிய சிற்றம்பலவனார்
வான் நிலாவி இருக்கவும் வைப்பரே. 5

சிட்டர் வானவர் சென்று வரம் கொளும்
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம்பலத்து உறை
சிட்டன் சேவடி கைதொழச் செல்லும் அச்
சிட்டர்பால் அணுகான் செறு காலனே. 6

ஒருத்தனார் உலகங்கட்கு ஒரு சுடர்
திருத்தனார் தில்லைச் சிற்றம்பலவனார்
விருத்தனார் இளையார் விடம் உண்ட எம்
அருத்தனார் அடியாரை அறிவரே. 7

விண் நிறைந்தது ஓர் வெவ்அழலின் உரு
எண் நிறைந்த இருவர்க்கு அறிவு ஒணாக்
கண் நிறைந்த கடிபொழில் அம்பலத்து
உள்நிறைந்து நின்று ஆடும் ஒருவனே. 8

வில்லை வட்டப்பட வாங்கி அவுணர்தம்
வல்லை வட்டம் மதில் மூன்று உடன்மாய்த்தவன்
தில்லை வட்டம் திசை கைதொழுவார் வினை
ஒல்லை வட்டம் கடந்து ஓடுதல் உண்மையே. 9

நாடி நாரணன் நான்முகன் என்று இவர்
தேடியும் திரிந்தும் காண வல்லரோ
மாட மாளிகை சூழ் தில்லை அம்பலத்து
ஆடி பாதம் என் நெஞ்சுள் இருக்கவே. 10

மதுர வாய்மொழி மங்கை ஓர் பங்கினன்
சதுரன் சிற்றம்பலவன் திருமலை
அதிர ஆர்த்து எடுத்தான் முடிபத்து இற
மிதிகொள் சேவடி சென்று அடைந்து உய்ம்மினே. 11

*திருச்சிற்றம்பலம்*

# பதிகம் : 4

தில்லையினின்றும் எழுந்தருளிய நாவரசர் திருவேட்களம், திருக்கழிப்பாலை ஆகிய பதிகளுக்குச் சென்று இறைவனை போற்றி மகிழ்ந்து மீண்டும் தில்லையை நினைந்து வருபவர், நினைப்பவர்தம் மனக்கோயில் கொண்டருளும் அம்பலத்து நிருத்தனாரைத் தினைத்துணையாம் பொழுதும் **மறந்து உய்வனோ** என்னும் மகுடமுடைய இத்திருப்பதிகத்தை பாடியவாறு தில்லையை அடைந்தார். மறந்து உய்வனோ என்று அப்பர் சுவாமிகள் அருளிய இரு திருப்பதிகங்களில் ஒன்று இதுவாகும். ஏனையது திருஅண்ணாமலைக்கு உரியது.

திருமுறை (5) திருக்குறுந்தொகை

*திருச்சிற்றம்பலம்*

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்

அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்தனைப் பொழுதும் மறந்து உய்வனோ. 1

தீர்த்தனைச் சிவனைச் சிவலோகனை
மூர்த்தியை முதலாய ஒருவனைப்
பார்த்தனுக்கு அருள்செய்த சிற்றம்பலக்
கூத்தனைக் கொடியேன் மறந்து உய்வனோ. 2

கட்டும் பாம்பும் கபாலம் கை மான்மறி
இட்டமாய் இடுகாட்டு எரிஆடுவான்
சிட்டர் வாழ் தில்லை அம்பலக் கூத்தனை
எள் தனைப் பொழுதும் மறந்து உய்வனோ. 3

மாணி பால் கறந்து ஆட்டி வழிபட
நீண் உலகுஎலாம் ஆளக் கொடுத்த என்
ஆணியைச் செம்பொன் அம்பலத்துள் நின்ற
தாணுவைத் தமியேன் மறந்து உய்வனோ. 4

பித்தனைப் பெருங்காடு அரங்கா உடை
முத்தனை முளைவெண்மதிசூடியைச்
சித்தனைச் செம்பொன் அம்பலத்துள் நின்ற
அத்தனை அடியேன் மறந்து உய்வனோ. 5

நீதியை நிறைவை மறைநான்கு உடன்
ஓதியை ஒருவர்க்கும் அறிவு ஒணாச்
சோதியைச் சுடர்ச் செம்பொனின் அம்பலத்து
ஆதியை அடியேன் மறந்து உய்வனோ. 6

மை கொள் கண்டன் எண்தோளன் முக்கண்ணினன்
பை கொள் பாம்பு அரை ஆர்த்த பரமனார்

செய்யமாது உறை சிற்றம்பலத்து எங்கள்
ஐயனை அடியேன் மறந்து உய்வனோ. 7

முழுதும் வான்உலகத்து உள தேவர்கள்
தொழுதும் போற்றியும் தூய செம்பொன்னினால்
எழுதி மேய்த்த சிற்றம்பலக் கூத்தனை
இழுதையேன் மறந்து எங்ஙனம் உய்வனோ. 8

கார் உலாம் மலர்க்கொன்றைஅம்தாரனை
வார் உலாம் முலை மங்கை மணாளனைத்
தேர் உலாவிய தில்லையுள் கூத்தனை
ஆர்கிலா அமுதை மறந்து உய்வனோ. 9

ஓங்கு மால்வரை ஏந்தல் உற்றான் சிரம்
வீங்கி விம்முற ஊன்றிய தாளினான்
தேங்கு நீர் வயல் சூழ் தில்லைக் கூத்தனைப்
பாங்கு இலாத் தொண்டனேன் மறந்து உய்வனோ. 10

*திருச்சிற்றம்பலம்*

# பதிகம் : 5

(பெருமானை வலம் வந்தவாறு)

தில்லைத் திருக்கோயிலை அடைந்தவர், அரியானை என்று எடுத்தே அடியவருக்கு எளியானை அவர்தம் சிந்தை பிரியாத பெரிய திருத்தாண்டகச் செந்தமிழ்பாடி, விளங்கிய பொன் அம்பலத்து மேவிப் பணிந்து, பின்னும் தமிழால் பாடல் செய்தார்.

செந்தமிழ் பாடிப் பொன் அம்பலத்து மேவி, என்பதால் பெருமானை வலம் வந்தவாறே இப்பதிகம் பாடியமை

புலப்படுகின்றது. **பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே** என்னும் தொடர் நினைவில் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

திருமுறை : 6 பெரிய திருத்தாண்டகம்

*திருச்சிற்றம்பலம்*

அரியானை அந்தணர்தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழ் ஒளியைத் தேவர்கள் தம் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாத நாள்எல்லாம் பிறவா நாளே 1

கற்றானைக் கங்கை வார்சடையான் தன்னைக்
காவிரி சூழ் வலஞ்சுழியும் கருதினானை
அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள்செய்வானை
ஆரூரும் புகுவானை அறிந்தோம் அன்றே
மற்று ஆரும் தன் ஒப்பார் இல்லாதானை
வானவர்கள் எப்பொழுதும் வணங்கி ஏத்தப்
பெற்றானைப் பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாத நாள்எல்லாம் பிறவா நாளே. 2

கருமானின்உரி அதளே உடையா வீக்கிக்
கனைகழல்கள் கலந்து ஒலிப்ப அனல் கை ஏந்தி
வரு மானத் திரள்தோள்கள் மட்டித்து ஆட
வளர்மதியம் சடைக்கு அணிந்து மான் நேர் நோக்கி
அரு மான வாள்முகத்தாள் அமர்ந்து காண
அமரர்கணம் முடி வணங்க ஆடுகின்ற

பெருமானைப் பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாத நாள்எல்லாம் பிறவா நாளே. 3

அருந்தவர்கள் தொழுது ஏத்தும் அப்பன்தன்னை
அமரர்கள் தம் பெருமானை அரனை மூவா
மருந்து அமரர்க்கு அருள்புரிந்த மைந்தன்தன்னை
மறிகடலும் குலவரையும் மண்ணும் விண்ணும்
திருந்து ஒளிய தாரகையும் திசைகள்எட்டும்
திரி சுடர்கள்ஓர் இரண்டும் பிறவுமாய
பெருந்தகையைப் பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாத நாள்எல்லாம் பிறவா நாளே. 4

அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகல் ஞாலத்து அகத்துள் தோன்றி
வரும் துணையும் சுற்றமும் பற்றும் விட்டு
வான் புலன்கள் அகத்து அடக்கி மடவாரோடும்
பொருந்து அணைமேல் வரும் பயனைப் போக மாற்றிப்
போது நீக்கித் தனை நினைய வல்லோர்க்கு என்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாத நாள்எல்லாம் பிறவா நாளே. 5

கரும்பு அமரும் மொழி மடவாள் பங்கன்தன்னைக்
கன வயிரக்குன்று அனைய காட்சியானை
அரும்பு அமரும் பூங்கொன்றைத்தாரான்தன்னை
அருமறையோடு ஆறுஅங்கம் ஆயினானைச்
சுரும்பு அமரும் கடிபொழில்கள் சூழ் தென்ஆரூர்ச்
சுடர்க்கொழுந்தைத் துளக்கு இல்லா விளக்கை மிக்க
பெரும் பொருளைப் பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாத நாள்எல்லாம் பிறவா நாளே. 6

வரும் பயனை எழுநரம்பின் ஓசையானை
வரை சிலையா வானவர்கள் முயன்ற வாளி
அரும் பயம் செய் அவுணர் புரம் எரியக் கோத்த
அம்மானை அலைகடல்நஞ்சு அயின்றான்தன்னைச்
சுரும்பு அமரும் குழல் மடவார் கடைக்கண் நோக்கில்
துளங்காத சிந்தையராய்த் துறந்தோர் உள்ளப்
பெரும்பயனைப் பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாத நாள்எல்லாம் பிறவா நாளே. 7

கார்ஆனை ஈர்உரிவைப்போர்வையானைக்
காமரு பூங் கச்சி ஏகம்பன்தன்னை
ஆரேனும் அடியவர்கட்கு அணியான்தன்னை
அமரர்களுக்கு அறிவு அரிய அளவுஇலானைப்
பாரோரும் விண்ணோரும் பணிய நட்டம்
பயில்கின்ற பரஞ்சுடரைப் பரனை எண்ணில்
பேரானைப் பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாத நாள்எல்லாம் பிறவா நாளே. 8

முற்றாத பால்மதியம் சூடினானை
மூஉலகம் தானாய முதல்வன்தன்னைச்
செற்றார்கள் புரம்மூன்றும் செற்றான்தன்னைத்
திகழ் ஒளியை மரகதத்தைத் தேனைப் பாலைக்
குற்றாலத்து அமர்ந்து உறையும் குழகன்தன்னைக்
கூத்துஆட வல்லானைக் கோனை ஞானம்
பெற்றானைப் பெரும்பற்றப்புலியூரர்னைப்
பேசாத நாள்எல்லாம் பிறவா நாளே. 9

கார் ஒளிய திருமேனிச் செங்கண் மாலும்
கடிக்கமலத்து இருந்தவனும் காணா வண்ணம்

சீர் ஒளிய தழல்பிழம்பாய் நின்ற தொல்லைத்
திகழ் ஒளியைச் சிந்தைதனை மயக்கம் தீர்க்கும்
ஏர் ஒளியை இரு நிலனும் விசும்பும் விண்ணும்
ஏழ்உலகும் கடந்து அண்டத்து அப்பால் நின்ற
பேரொளியைப் பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாத நாள்எல்லாம் பிறவா நாளே. 10

*திருச்சிற்றம்பலம்*

# பதிகம் : 6

(இறைவர் திருமுன்பு)

சிந்தை பிரியாத பெரியதிருத்தாண்டகம் பாடியபின், சிற்றம்பலத்து பெருமானைப் புகழ்ந்து பாடிய திருப்பதிகம் இது. செஞ்சடைக்கற்றை முற்றத்து இளநிலா எறிக்கும் சென்னி எனும் சிறந்த வாய்மை அஞ்சொல் வளர் தமிழ் மாலை அதிசயமாம் படி பாடி என இப்பதிகத் தொடக்கத்தையும் நிறைவையும் எடுத்துக் கூறிச் சிறப்பிக்கின்றார் சேக்கிழார். இவ்வருமை எண்ணற்குரியது. **சிற்றம்பலத்து அதிசயம் போல நின்று அனல் எரி ஆடுமாறே** என்பது இப்பதிகத்தில் வரும் நிறைவான தொடராகும்.

திருமுறை (4) திரு நேரிசை பண் : கொல்லி

*திருச்சிற்றம்பலம்*

செஞ்சடைக்கற்றை முற்றத்து இளநிலா எறிக்கும் சென்னி
நஞ்சு அடை கண்டனாரைக் காணல் ஆம் நறவம் நாறும்
மஞ்சு அடை சோலைத் தில்லை மல்கு சிற்றம்பலத்தே
துஞ்சு அடை இருள் கிழியத் துளங்கு எரிஆடுமாறே. 1

ஏறனார் ஏறு தம்பால் இளநிலா எறிக்கும் சென்னி
ஆறனார் ஆறு சூடி ஆயிழையாள் ஓர்பாகம்
நாறு பூஞ்சோலைத் தில்லை நவின்ற சிற்றம்பலத்தே
நீறு மெய் பூசி நின்று நீண்டு எரி ஆடுமாறே. 2

சடையனார் சாந்தநீற்றர் தனி நிலா எறிக்கும் சென்னி
உடையனார் உடைதலையில் உண்பதும் பிச்சை ஏற்றுக்
கடி கொள் பூந் தில்லைதன்னுள் கருது சிற்றம்பலத்தே
அடி கழல் ஆர்க்க நின்று அனல் எரி ஆடுமாறே. 3

பைஅரவு அசைத்த அல்குல் பனிநிலா எறிக்கும் சென்னி
மையரிக்கண்ணியாளும் மாலும் ஓர்பாகம்ஆகிச்
செய்எரித் தில்லைதன்னுள் திகழ்ந்த சிற்றம்பலத்தே
கை எரி வீசி நின்று கனல் எரி ஆடுமாறே. 4

ஓதினார் வேதம் வாயால் ஒளி நிலா எறிக்கும் சென்னி
பூதனார் பூதம் சூழப் புலிஉரி அதளனார் தாம்
நாதனார் தில்லைதன்னுள் நவின்ற சிற்றம்பலத்தே
காதில் வெண்குழைகள் தாழக் கனல் எரி ஆடுமாறே. 5

ஓர் உடம்பு இருவர் ஆகி ஒளி நிலா எறிக்கும் சென்னிப்
பாரிடம் பாணிசெய்யப் பயின்ற எம் பரமமூர்த்தி
கார் இடம் தில்லைதன்னுள் கருது சிற்றம்பலத்தே
பேர் இடம் பெருக நின்று பிறங்கு எரி ஆடுமாறே. 6

முதல் தனிச் சடையை மூழ்க முகிழ்நிலா எறிக்கும் சென்னி
மதக்களிற்று உரிவை போர்த்த மைந்தரைக் காணல் ஆகும்
மதத்து வண்டு அறையும் சோலை மல்கு சிற்றம்பலத்தே
கதத்தது ஓர் அரவம் ஆடக்கனல் எரி ஆடுமாறே. 7

மறையனார் மழு ஒன்று ஏந்தி மணி நிலா எறிக்கும் சென்னி
இறைவனார் எம்பிரானார் ஏத்துவார் இடர்கள் தீர்ப்பார்
சிறை கொள் நீர்த் தில்லை தன்னுள் திகழ்ந்த சிற்றம்பலத்தே
அறைகழல் ஆர்க்க நின்று அனல் எரி ஆடுமாறே. 8

விருத்தனாய்ப் பாலனாகி விரிநிலா எறிக்கும் சென்னிப்
நிருத்தனார் நிருத்தம் செய்ய நீண்ட புன்சடைகள் தாழக்
கருத்தனார் தில்லைதன்னுள் கருது சிற்றம்பலத்தே
அருத்தமாமேனிதன்னோடு அனல் எரி ஆடுமாறே. 9

பாலனாய் விருத்தனாகிப் பனிநிலா எறிக்கும் சென்னிக்
காலனைக் காலால் காய்ந்த கடவுளார் விடை ஒன்று ஏறி
ஞாலம் ஆம் தில்லைதன்னுள் நவின்ற சிற்றம்பலத்தே
நீலம் சேர் கண்டனார் தாம் நீண்டு எரி ஆடுமாறே. 10

மதி இலா அரக்கன் ஓடி மாமலை எடுக்க நோக்கி
நெதியன் தோள் நெரிய ஊன்றி நீடு இரும் பொழில்கள் சூழ்ந்த
மதியம் தோய் தில்லைதன்னுள் மல்கு சிற்றம்பலத்தே
அதிசயம் போல நின்று அனல் எரி ஆடுமாறே. 11

*திருச்சிற்றம்பலம்*

# பதிகம் : 7

தில்லைக்கூத்தனின் திருவடி முதல் திரு முடி வரை பொலியும் அழகைக் கண்டு அதை அங்கம் அங்கமாக சிறப்பித்து அருளிய திருப்பதிகம் இது.

*திருச்சிற்றம்பலம்*

பாளையுடைக் கமுகு ஓங்கிப் பல்மாடம் நெருங்கி எங்கும்
வாளையுடைப் புனல் வந்து எறி வாழ் வயல் தில்லைதன்னுள்
ஆளயுடைக் கழல் சிற்றம்பலத்து அரன் ஆடல் கண்டால்
பீளையுடைக்கண்களால் பின்னைப்பேய்த்தொண்டர்காண்பது என்னே 1

பொரு விடை ஒன்று உடைப் புண்ணியமூர்த்தி புலிஅதளன்
உருவுடை அம் மலைமங்கை மணாளன் உலகுக்கு எல்லாம்
திருஉடை அந்தணர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலவன்
திருவடியைக் கண்ட கண்கொண்டு மற்று இனிக் காண்பது என்னே 2

தொடுத்த மலரொடு தூபமும் சாந்தும் கொண்டு எப்பொழுதும்
அடுத்து வணங்கும் அயனொடு மாலுக்கும் காண்பு அரியான்
பொடிக்கொண்டு அணிந்து பொன் ஆகிய தில்லைச் சிற்றம்பலவன்
உடுத்த துகில் கண்ட கண்கொண்டு மற்று இனிக் காண்பது என்னே 3

வைச்ச பொருள் நமக்கு ஆகும் என்று எண்ணி நமச்சிவாய
அச்சம் ஒழிந்தேன் அணி தில்லை அம்பலத்து ஆடுகின்ற
பிச்சன் பிறப்புஇலி பேர்நந்தி உந்தியின்மேல் அசைத்த
கச்சின் அழகு கண்டால் பின்னைக் கண்கொண்டு காண்பது என்னே 4

செய்ஞ் ஞின்ற நீலம் மலர்கின்ற தில்லைச் சிற்றம்பலவன்
மைஞ் ஞின்ற ஒண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்து நிற்க
நெய்ஞ் ஞின்று எரியும் விளக்கு ஒத்த நீலமணிமிடற்றான்
கைஞ் ஞின்ற ஆடல் கண்டால் பின்னைக் கண்கொண்டு காண்பது என்னே 5

ஊனத்தை நீக்கி உலகு அறிய என்னை ஆட்கொண்டவன்
தேன் ஒத்து எனக்கு இனியான் தில்லைச் சிற்றம்பலவன் எம் கோன்

வானத்தவர் உய்ய வன்நஞ்சை உண்ட கண்டத்து இலங்கும்
ஏனத்துஎயிறுகண்டால்பின்னைக்கண்கொண்டுகாண்பதுஎன்னே 6

தெரித்த கணையால் திரி புரம்மூன்றும் செந்தீயில் மூழ்க
எரித்த இறைவன் இமையவர்கோமான் இணைஅடிகள்
தரித்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலவன்
சிரித்தமுகம்கண்டகண்கொண்டுமற்றுஇனிக்காண்பதுஎன்னே 7

சுற்றும் அமரர் சுரபதி நின் திருப்பாதம் அல்லால்
பற்றுஒன்றுஇலோம்என்றுஅழைப்பப்பரவையுள்நஞ்சைஉண்டான்
செற்று அங்கு அநங்கனைத் தீவிழித்தான் தில்லை அம்பலவன்
நெற்றியில்கண் கண்டகண்கொண்டுமற்றுஇனிக்காண்பதுஎன்னே 8

சித்தத்து எழுந்த செழுங் கமலத்து அன்ன சேவடிகள்
வைத்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலவன்
முத்தும் வயிரமும் மாணிக்கம்தன்னுள் விளங்கிய தூ
மத்தமலர் கண்ட கண்கொண்டு மற்று இனிக் காண்பது என்னே 9

தருக்கு மிகுத்துத் தன் தோள்வலி உன்னித் தடவரையை
வரைக்கைகளால் எடுத்து ஆர்ப்ப மலைமகள்கோன் சிரித்து
அரக்கன் மணி முடிபத்தும் அணி தில்லை அம்பலவன்
நெருக்கி மிதித்த விரல் கண்ட கண்கொண்டு காண்பது என்னே 10

*திருச்சிற்றம்பலம்*

# பதிகம் : 8

பொலிதரு புலியூர் புக்கு இனிது அருளினன் என்னும் மணிவாசகரின் கூற்றை ஒத்து அமைந்துள்ளது இப்பதிகம்.

பல்வகை தொழில்களை ஆற்றியும் பல்வேறு பதிகளில் இருந்தும் அருள்புரியும் பெருமான் புக்கும் இடம் தில்லையாகும் என்னும் கருத்தை மையமாகக் கொண்டு, திருநாவுக்கரசர் அருளிய புக்க திருத்தாண்டகம் இது.

திருமுறை (6) புக்க திருத்தாண்டகம்

*திருச்சிற்றம்பலம்*

மங்குல்மதி தவழும் மாட வீதி
மயிலாப்பில் உள்ளார் மருகல் உள்ளார்
கொங்கில் கொடுமுடியார் குற்றாலத்தார்
குடமூக்கின் உள்ளார் போய்க் கொள்ளம்பூதூர்த்
தங்கும் இடம் அறியார் சால நாளார்
தருமபுரத்து உள்ளார் தக்களூரார்
பொங்கு வெண்நீறு அணிந்து பூதம் சூழப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே. 1

நாகம் அரைக்கு அசைத்த நம்பர் இந் நாள்
நனிபள்ளி உள்ளார் போய் நல்லூர்த் தங்கிப்
பாகப்பொழுதுஎலாம் பாசூர்த் தங்கிப்
பரிதிநியமத்தார் பன்னிருநாள்
வேதமும் வேள்விப் புகையும் ஓவா
விரிநீர் மிழலை எழுநாள் தங்கிப்
போகமும் பொய்யாப் பொருளும் ஆனார்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே. 2.

துறம் காட்டி எல்லாம் விரித்தார்போலும்
தூ மதியும் பாம்பும் உடையார்போலும்

மறம் காட்டி மும்மதிலும் எய்தார்போலும்
மந்திரமும் தந்திரமும் தாமேபோலும்
அறம் காட்டி அந்தணர்க்கு அன்று ஆழநீழல்
அறம் அருளிச் செய்த அரனார் இந் நாள்
புறங்காட்டு எரிஆடிப் பூதம் சூழப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே. 3

வார் ஏறு வனமுலையாள் பாகமாக
மழுவாள் கை ஏந்தி மயானத்து ஆடிச்
சீர் ஏறு தண் வயல் சூழ் ஓத வேலித்
திரு வாஞ்சியத்தார் திரு நள்ளாற்றார்
கார் ஏறு கண்டத்தார் காமற் காய்ந்த
கண் விளங்கு நெற்றியார் கடல் நஞ்சு உண்டார்
போர் ஏறு தாம் ஏறிப் பூதம் சூழப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே. 4

கார் ஆர் கமழ்கொன்றைக் கண்ணி சூடிக்
கபாலம் கை ஏந்திக் கணங்கள் பாட
ஊரார் இடு பிச்சை கொண்டு உழல்லும்
உத்தமராய் நின்ற ஒருவனார் தாம்
சீர் ஆர் கழல் வணங்கும் தேவதேவர்
திரு ஆரூர்த் திரு மூலட்டானம் மேயார்
போர் ஆர் விடை ஏறிப் பூதம் சூழப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே. 5

காது ஆர் குழையினர் கட்டங்கத்தர்
கயிலாயமாமலையார் காரோணத்தார்
மூதாயர் மூதாதை இல்லார் போலும்
முதலும் இறுதியும் தாமே போலும்
மாதாய மாதர் மகிழ அன்று

வன் மத வேள்தன் உடலம் காய்ந்தார் இந் நாள்
போது ஆர் சடை தாழப் பூதம் சூழப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே. 6

இறந்தார்க்கும் என்றும் இறவாதார்க்கும்
இமையவர்க்கும் ஏகமாய் நின்று சென்று
பிறந்தார்க்கும் என்றும் பிறவாதார்க்கும்
பெரியார் தம் பெருமையே பேச நின்று
மறந்தார் மனத்து என்றும் மருவார்போலும்
மறைக்காட்டு உறையும் மழுவாள் செல்வர்
புறம் தாழ்சடை தாழப் பூதம் சூழப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே. 7

குலா வெண்தலைமாலை என்பு பூண்டு
குளிர்கொன்றைத்தார் அணிந்து கொல் ஏறு ஏறிக்
கலா வெங்களிற்று உரிவைப்போர்வை மூடிக்
கை ஓடு அனல் ஏந்திக் காடு உறைவார்
நிலாவெண்மதி உரிஞ்ச நீண்ட மாடம்
நிறை வயல் சூழ் நெய்த்தானம் மேய செல்வர்
புலால் வெண்தலை ஏந்திப் பூதம் சூழப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே. 8

சந்தித்த கோவணத்தர் வெண்நூல் மார்பர்
சங்கரனைக் கண்டீரோ கண்டோம் இந் நாள்
பந்தித்த வெள்விடையைப் பாய ஏறிப்
படுதலையில் என்கொலோ ஏந்திக்கொண்டு
வந்து ஈங்கு என் வெள்வளையும் தாமும் எல்லா
மணி ஆரூர் நின்று அந்தி கொள்ளக்கொள்ளப்
பொன்தீ மணிவிளக்குப் பூதம் பற்றப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே. 9

பாதங்கள் நல்லார் பரவி ஏத்தப்
பத்திமையால் பணி செய்யும் தொண்டர்தங்கள்
ஏதங்கள் தீர இருந்தார்போலும்
எழுபிறப்பும் ஆள்உடைய ஈசனார்தாம்
வேதங்கள் ஓதி ஓர் வீணை ஏந்தி
விடை ஒன்று தாம் ஏறி வேதகீதர்
பூதங்கள் சூழப் புலித்தோல் வீக்கிப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே. 10

பட்டு உடுத்துத் தோல் போர்த்துப் பாம்பு ஒன்று ஆர்த்துப்
பகவனார் பாரிடங்கள் சூழ நட்டம்
சிட்டராய்த் தீ ஏந்திச் செய்வார்தம்மைத்
தில்லைச் சிற்றம்பலத்தே கண்டோம் இந் நாள்
விட்டு இலங்கு சூலமே வெண்நூல் உண்டே
ஓதுவதும் வேதமே வீணை உண்டே
கட்டங்கம் கையதே சென்று காணீர்
கறை சேர் மிடற்று எம் கபாலியார்க்கே. 11

*திருச்சிற்றம்பலம்*

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது

## பதிகம் : 1

திருகளத்து முதுகுன்றர் தருகனகம் ஆற்றிலிட்டு பின் குளத்தில் எடுத்துக் கொள்ள்லாம் என்ற சிந்தையுடன் தில்லையை வணங்கும் விருப்பினராய் பல பதிகளையும் வணங்கிக் கொண்டு தில்லையை அடைந்து கூத்தப் பெருமானைக் கண்டு அவருடைய ஆடிய திருவடிகளை

போற்றிப் பாடியது இத்திருப்பதிகம். இப்பதிகத்தின் திருக்கடைக் காப்பில் மேலைச் சிதம்பரமாகிய பேரூரை நினைந்து பாடியிருத்தல் குறிப்பிடத்தக்கது.

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

மடித்தாடும் அடிமைக்கண் அன்றியே
மனனேநீ வாழும் நாளும்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
கடுத்தாடு கரதலத்தில் தமருகமும்
எரிஅகலுங் கரிய பாம்பும்
பிடித்தாடி புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 1

பேராது காமத்திற் சென்றாற்போல்
அன்றியே பிரியா துள்கிச்
சீரார்ந்த அன்பராய்ச் சென்றுமுன்
அடிவீழுந் திருவி னாரை
ஓராது தருமனார் தமர்செக்கில்
இடும்போது தடுத்தாட்கொள்வான்
பேராளர் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 2

நரியார்தங் கள்ளத்தாற் பக்கான
பரிசொழிந்து நாளும் உள்கிப்
பிரியாத அன்பராய்ச் சென்றுமுன்
அடிவீழும் சிந்தை யாரைத்
தரியாது தருமனார் தமர்செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்

பெரியோர்கள் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 3

கருமையார் தருமனார் தமர்நம்மைக்
கட்டியகட் டறுப்பிப் பானை
அருமையாம் தன்னுலகம் தருவானை
மண்ணுலகம் காவல் பூண்ட
உரிமையாற் பல்லவர்க்குத் திறைகொடா
மன்னவரை மறுக்கஞ் செய்யும்
பெருமையார் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 4

கருமானின் உரியாடைச் செஞ்சடைமேல்
வெண்மதியக் கண்ணி யானை
உருமன்ன கூற்றத்தை உருண்டோட
உதைத்துகந் துலவா இன்பம்
தருவானைத் தருமனார் தமர்செக்கில்
இடும்போது தடுத்தாட்கொள்வான்
பெருமானார் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 5

உய்த்தாடித் திரியாதே உள்ளமே
ஒழிகண்டாய் ஊன்கண் ஓட்டம்
எத்தாலுங் குறைவில்லை என்பர்காண்
நெஞ்சமே நம்மை நாளும்
பைத்தாடும் அரவினன் படர்சடையன்
பரஞ்சோதி பாவந் தீர்க்கும்
பித்தாடி புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 6

முட்டாத முச்சந்தி மூவா
யிரவர்க்கு மூர்த்தி என்னப்
பட்டானைப் பத்தராய்ப் பாவிப்பார்
பாவமும் வினையும் போக
விட்டானை மலைஎடுத்த இராவணனைத்
தலைபத்தும் நெரியக் காலால்
தொட்டானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 7

கற்றானுங் குழையுமா றன்றியே
கருதுமா கருத கிற்றார்க்
கெற்றாலுங் குறைவில்லை என்பர்காண்
உள்ளமே நம்மை நாளுஞ்
செற்றாட்டித் தருமனார் தமர்செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
பெற்றேறிப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 8

நாடுடைய நாதன்பால் நன்றென்றுஞ்
செய்மனமே நம்மை நாளும்
தாடுடைய தருமனார் தமர்செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
மோடுடைய சமணர்க்கும் முடையுடைய
சாக்கியர்க்கும் மூடம் வைத்த
பீடுடைய புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 9

பாரூரும் அரவல்குல் உமைநங்கை
யவள்பங்கன் பைங்கண் ஏற்றன்
ஊரூரன் தருமனார் தமர்செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்

ஆரூரன் தம்பிரான் ஆரூரன்
மீகொங்கில் அணிகாஞ் சிவாய்ப்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற்
றம்பலத்தே பெற்றா மன்றே. 10

*திருச்சிற்றம்பலம்*

# மாணிக்க வாசக சுவாமிகள் அருளியது

## கண்ட பத்து

பரமானந்த நிருத்த தரிசனம்

(பொறி புலன்களுடன் கூடிய மாய வாழ்வினின்று எடுப்பித்துத் தானாக்கும் ஆனந்தம் - ஆனந்தக் கூத்து கண்டு களித்தல்).

(திருத்தில்லையில் அருளியது)

*திருச்சிற்றம்பலம்*

இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள் தில்லை கண்டேனே. 1

வினைப்பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டுத்
தனைச்சிறிதும் நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை
எனைப்பெரிதும் ஆட்கொண்டு என் பிறப்பறுத்த இணையிலியை
அனைத்துலகும் தொழுந்தில்லை அம்பலத்தே கண்டேனே. 2

உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் உளம்மன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணிகொள்தில்லை கண்டேனே. 3

கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை
வல்லாள னாய்வந்து வனப்பெய்தி இருக்கும் வண்ணம்
பல்லோரும் காணஎன்தன் பசுபாசம் அறுத்தானை
எல்லோரும் இறைஞ்சுதில்லை அம்பலத்தே கண்டேனே 4

சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம் யான்எனதென்(று) உரைமாய்த்துக்
கோதில்அமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே. 5

பிறவிதனை அறமாற்றிப் பிணிமூப்பென் றிவையிரண்டும்
உறவினொடும் ஒழியச்சென்(று) உலகுடைய ஒருமுதலைச்
செறிபொழில்சூழ் தில்லைநகர்த் திருச்சிற்றம் பலம்மன்னி
மறையவரும் வானவரும் வணங்கிடநான் கண்டேனே. 6

பத்திமையும் பரிசுமிலாப் பசுபாசம் அறுத்தருளிப்
பித்தனிவன் எனஎன்னை ஆக்(கு)வித்துப் பேராமே
சித்தமெனும் திண்கயிற்றால் திருப்பாதம் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே. 7

அளவிலாப் பாவகத்தால் அழுக்குண்டிங்(கு) அறிவின்றி
விளைவொன்றும் அறியாதே வெறுவியனாய்க் கிடப்பேனுக்(கு)
அளவிலா ஆனந்தம் அளித்தென்னை ஆண்டானைக்
களவிலா வானவரும் தொழுந்தில்லை கண்டேனே. 8

பாங்கினொடு பரிசொன்றும் அறியாத நாயேனை
ஓங்கிஉளத்(து) ஒளிவளர உலப்பிலா அன்பருளி
வாங்கிவினை மலம்அறுத்து வான்கருணை தந்தானை
நான்குமறை பயில்தில்லை அம்பலத்தே கண்டேனே. 9

பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே. 10

*திருச்சிற்றம்பலம்.*

## திருச்சிக்கல்

இறைவர் : நவநீதநாதர் இறைவியார் : வேல்நெடுங்கண்ணி

திருநாகை காரோணத்தை வணங்கிய ஆளுடைய பிள்ளையார் அப்பதிகனின்றும் எழுந்தருளி இடையில் உள்ள சில பதிகளை வணங்கி பின் கீழ் வேளூரை அடைந்தார். இடையிலுள்ள பதி எனக் கருதப்படும் திருச்சிக்கலுக்குரிய பதிகம் இது.

திருமுறை (2) பண் : இந்தளம்

*திருச்சிற்றம்பலம்*

வான் உலாவும் மதி வந்து உலவும் மதில் மாளிகை
தேன் உலாவும் மலர்ச்சோலை மல்கும் திகழ் சிக்கலுள்
வேனல் வேளை விழித்திட்ட வெண்ணெய்ப்பெருமான் அடி
ஞானம்ஆக நினைவார் வினைஆயின நையுமே. 1

மடம் கொள் வாளை குதிகொள்ளும் மணமலர்ப்பொய்கை சூழ்
திடம் கொள் மா மறையோர் அவர் மல்கிய சிக்கலுள்
விடம் கொள் கண்டத்து வெண்ணெய்ப் பெருமான் அடி மேவியே
அடைந்து வாழும் அடியார் அவர் அல்லல் அறுப்பரே. 2

நீலம் நெய்தல் நிலவி மலரும் சுனை நீடிய
சேலும் ஆலும் கழனி வளம் மல்கிய சிக்கலுள்
வேல்ஒண்கண்ணியினாளை ஓர்பாகன் வெண்ணெய்ப்பிரான்
பால்வண்ணன் கழல் ஏத்த நம் பாவம் பறையுமே. 3

கந்தம் உந்தக் கைதை பூத்துக் கமழ்ந்து சேரும் பொழில்
செந்து வண்டு இன்இசை பாடல் மல்கும் திகழ் சிக்கலுள்
வெந்தவெண்நீற்று அண்ணல் வெண்ணெய்ப்பிரான் விரையார் கழல்
சிந்தைசெய்வார் வினையாயின தேய்வது திண்ணமே. 4

மங்குல் தங்கும் மறையோர்கள் மாடத்து அயலே மிகு
தெங்கு துங்கப் பொழில் செல்வம் மல்கும் திகழ் சிக்கலுள்
வெங்கண் வெள்ஏறு உடை வெண்ணெய்ப்பிரான் அடி மேவவே
தங்கும் மேன்மை சரதம் திரு நாளும் தகையுமே. 5

வண்டு இரைத்து மது விம்மிய மா மலர்ப்பொய்கை சூழ்
தெண்திரைக் கொள் புனல் வந்து ஒழுகும் வயல் சிக்கலுள்
விண்டு இரைத்து மலரால் திகழ் வெண்ணெய்ப்பிரான்அடி
கண்டு இரைத்து மனமே மதியாய் கதி ஆகவே. 6

முன்னு மாடம் மதில்மூன்று உடனே எரியாய் விழத்
துன்னு வார்வெங்கணை ஒன்று செலுத்திய சோதியான்
செந்நெல் ஆரும் வயல் சிக்கல் வெண்ணெய்ப்பெருமான் அடி
உன்னி நீடம் மனமே நினையாய் வினைஓயவே. 7

தெற்றல் ஆகிய தென்இலங்கைக்கு இறைவன் மலை
பற்றினான் முடிபத்தொடு தோள்கள் நெரியவே
செற்ற தேவன் நம் சிக்கல் வெண்ணெய்ப்பெருமான் அடி
உற்று நீ நினையாய் வினை ஆயின ஓயவே. 8

மாலினொடு அருமாமறை வல்ல முனிவனும்
கோலினார் குறுகச் சிவன் சேவடி கோலியும்
சீலம் தாம் அறியார் திகழ் சிக்கல் வெண்ணெய்ப்பிரான்
பாலும் பல்மலர் தூவ பறையும் நம் பாவமே. 9

பட்டை நல் துவர் ஆடையினாரொடும் பாங்குஇலாக்
கட்டு அமணகழுக்கள் சொல்லினைக் கருதாது நீர்
சிட்டன் சிக்கல் வெண்ணெய்ப் பெருமான் செழுமாறைப்
பட்டன் சேவடியே பணிமின் பிணி போகவே. 10

கந்தம் ஆர் பொழில் காழியுள் ஞானசம்பந்தன் நல்
செந் தண்பூம்பொழில் சிக்கல் வெண்ணெய்ப் பெருமான் அடிச்
சந்தமாச் சொன்ன செந்தமிழ் வல்லவர் வான்இடை
வெந்தநீறு அணியும் பெருமான் அடி மேவரே. 11

*திருச்சிற்றம்பலம்*

## திருஎறும்பியூர்

இறைவர் : எறும்பீசர் இறைவி : நறுங்குழல் நாயகி

சிலந்திக்கருளிய கழல் வணங்கிய செந்தமிழ்ச்சொல் வேந்தர், இலங்கு செஞ்சடையார் எறும்பியூர் மலையை அடைந்து, இறைஞ்சி அப்பர் சுவாமிகள் பாடிய பதிகங்களில் ஒன்று இது. பாரிடந்தும், மேலுயர்ந்தும், மாலும் அயனும் காணமுடியா மலர்ச் சேவடிகளை ஆணவத்தை விடுத்து அன்பால் தான் அடைந்து அருள்பெற முடியும் என்பதை வலியுறுத்துகிறார். பதிகம்ஏழ் எழுநூறு பரவு மா கவியோகி பரசு நாவரசர் **பன்னிய செந்தமிழ் அறியேன்** என்று கூறுகிறார். பணியுமாம் என்றும் பெருமை.

*திருச்சிற்றம்பலம்*

பன்னிய செந்தமிழ் அறியேன் கவியேன் மாட்டேன்
என்னோடு பண் நிறைந்த கலைகள் ஆய
தன்னை உன் தன் திறத்து அறியாப் பொறிஇலேனைத்
தன் திறமும் அறிவித்து நெறியும் காட்டி
அன்னையையும் அத்தனையும் போல அன்பாய்
அடைந்தேனைத் தொடர்ந்து என்னை ஆளாக் கொண்ட
தென் எறும்பியூர்மலைமேல் மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்று அடையப்பெற்றேன் நானே. 1

பளிங்கின் நிழலுள் பதித்த சோதியானைப்
பசுபதியைப் பாசுபதவேடத்தானை
விளிந்து எழுந்த சலந்தரனை வீட்டினானை
வேதியனை விண்ணவனை மேவி வையம்
அளந்தவனை நான்முகனை அல்லல் தீர்க்கும்
அருமருந்தை ஆமாறு அறிந்து என் உள்ளம்
தெளிந்து எறும்பியூர்மலைமேல் மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்று அடையப்பெற்றேன் நானே. 2

கருவை என்தன் மனத்து இருந்த கருத்தை ஞானக்
கடுஞ்சுடரைப் படிந்து கிடந்து அமரர் ஏத்தும்
உருவை அண்டத்து ஒரு முதலை ஓத வேலி
உலகில் நின்ற தொழில் இறுதி நடுவாய் நின்ற
மருவை வென்ற குழல் மடவாள் பாகம் வைத்த
மயானத்து மாசிலா மணியை வாசத்
திரு எறும்பியூர்மலைமேல் மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்று அடையப்பெற்றேன் நானே. 3

பகழி பொழிந்து அடல் அரக்கர் புரங்கள் மூன்றும்
பாழ்படுத்த பரஞ்சுடரைப் பரிந்து தன்னைப்
புகழும் அன்பர்க்கு இன்பு அமரும் அமுதை தேனைப்
புண்ணியனைப் புவனிஅது முழுதும் போத
உமிழும் அம் பொன்குன்றத்தை முத்தின்தூணை
உமையவள்தம் பெருமானை இமையோர் ஏத்தும்
திகழ் எறும்பியூர்மலைமேல் மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்று அடையப்பெற்றேன் நானே. 4

பாரிடங்கள் உடன்பாடப் பயின்று நட்டம்
பயில்வானை அயில்வாய சூலம் ஏந்தி
நேரிடும் போர் மிக வல்ல நிமலன்தன்னை
நின்மலனை அம் மலர் கொண்டயனும் மாலும்
பார் இடந்தும் மேல் உயர்ந்தும் காணா வண்ணம்
பரந்தானை நிமிர்ந்து முனிகணங்கள் ஏத்தும்
சீர் எறும்பியூர்மலைமேல் மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்று அடையப்பெற்றேன் நானே. 5

கார்முகிலாய்ப் பொழிவானைப் பொழிந்த முந்நீர்
கரப்பானைக் கடிய நடை விடை ஒன்று ஏறி
ஊர்பலவும் திரிவானை ஊர்அது ஆக
ஒற்றியூர் உடையனாய் முற்றும் ஆண்டு
பேர்எழுத்து ஒன்று உடையானைப் பிரமனோடு
மாலவனும் இந்திரனும் மந்திரத்தால் ஏத்தும்
சீர் எறும்பியூர்மலைமேல் மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்று அடையப்பெற்றேன் நானே. 6

நீள் நிலமும் அம் தீயும் நீரும் மற்றை
நெறி இலங்கும் மிகு காலும் ஆகாசமும்

வாள் நிலவு தாரகையும் மண்ணும் விண்ணும்
மன் உயிரும் என் உயிரும் தானாய் செம்பொன்
ஆணி என்றும் அஞ்சனமாமலையே என்றும்
அம் பவளத்திரள் என்றும் அறிந்தோர் ஏத்தும்
சேண் எறும்பியூர்மலைமேல் மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்று அடையப்பெற்றேன் நானே. 7

அறம் தெரியா ஊத்தைவாய் அறிவு இல் சிந்தை
ஆரம்பக் குண்டரோடு அயர்த்து நாளும்
மறந்தும் அரன்திருவடிகள் நினையமாட்டா
மதி இலியேன் வாழ்வு எல்லாம் வாளா மண்மேல்
பிறந்த நாள் நாள் அல்ல வாளா ஈசன்
பேர் பிதற்றிச் சீர் அடிமைத்திறத்து உள் அன்பு
செறிந்து எறும்பியூர்மலைமேல் மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்று அடையப்பெற்றேன் நானே. 8

அறிவு இலங்கு மனத்தானை அறிவார்க்கு அன்றி
அறியார்தாம் திறத்து ஒன்று அறியாதானைப்
பொறி இலங்கு வாள்அரவம் புனைந்து பூண்ட
புண்ணியனைப் பொருதிரைவாய் நஞ்சம் உண்ட
குறி இலங்கு மிடற்றானை மடல் தேன் கொன்றைச்
சடையானை மடைதோறும் கமலம்மென்பூச்
செறி எறும்பியூர்மலைமேல் மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்று அடையப்பெற்றேன் நானே. 9

அருந்தவத்தின் பெரு வலியால் அறிவது அன்றி
அடல் அரக்கன் தடவரையை எடுத்தான் திண்தோள்
முரிந்து நெரிந்து அழிந்து பாதாளம் உற்று
முன்கைநரம்பினை எடுத்து கீதம் பாட

இருந்தவனை ஏழ்உலகும் ஆக்கினானை
எம்மானைக் கைம்மாவின் உரிவை போர்த்த
திருந்து எறும்பியூர்மலைமேல் மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்று அடையப்பெற்றேன் நானே. 10

*திருச்சிற்றம்பலம்*

# திருமாற்பேறு

இறைவன் : மால்வணங்கு ஈசர் இறைவி : கருணை நாயகி

காஞ்சியிலுள்ள பல தலங்களை வணங்கி மகிழ்ந்த நாவுக்கரசர் திருமாற்பேற்றிற்குச் சென்று உளம் பூரித்து அருளிய திருப்பதிகங்களில் ஒன்று இதுவாகும். பாடல் தோறும் அரிய கருத்துக்களை உள்ளடக்கிய இத்திருப்பதிகம் அனைத்துலக மக்களுக்கும் அப்பர் சுவாமிகள் விட்டுச் சென்ற கருவூலம் ஆகும்.

திருமுறை (5) திருக்குறுந்தொகை

*திருச்சிற்றம்பலம்*

ஏதும் ஒன்றும் அறிவுஇலர் ஆயினும்
ஓதி அஞ்சுஎழுத்தும் உணர்வார்கட்குப்
பேதம் இன்றி அவர்அவர் உள்ளத்தே
மாதும் தாமும் மகிழ்வர் மாற்பேறரே. 1

அச்சம் இல்லை நெஞ்சே அரன்நாமங்கள்
நிச்சலும் நினையாய் வினை போய் அறக்
கச்ச மா விடம் உண்ட கண்டா என
வைச்ச மா நிதி ஆவர் மாற்பேறரே. 2

சாத்திரம்பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்
பாத்திரம் சிவன் என்று பணிதிரேல்
மாத்திரைக்குள் அருளும் மாற்பேறரே. 3

இருந்து சொல்லுவன் கேண்மின்கள் ஏழைகாள்
அருந்தவம் தரும் அஞ்சு எழுத்து ஓதினால்
பொருந்து நோய் பிணி போகத் துரப்பது ஓர்
மருந்தும் ஆகுவர் மன்னும் மாற்பேறரே. 4

சாற்றிச் சொல்லுவன் கேண்மின் தரணியீர்
ஏற்றின்மேல் வருவான் கழல் ஏத்தினால்
கூற்றை நீக்கிக் குறைவு அறுத்து ஆள்வது ஓர்
மாற்று இலாச் செம்பொன் ஆவர் மாற்பேறரே. 5

ஈட்டும் மா நிதி சால இழக்கினும்
வீட்டும் காலன் விரைய அழைக்கினும்
காட்டில் மாநடம் ஆடுவாய் கா எனில்
வாட்டம் தீர்க்கவும் வல்லர் மாற்பேறரே. 6

ஐயனே அரனே என்று அரற்றினால்
உய்யல் ஆம் உலகத்தவர் பேணுவர்
செய்யபாதம் இரண்டு நினையவே
வையம் ஆளவும் வைப்பர் மாற்பேறரே. 7 8 9

உந்திச் சென்று மலையை எடுத்தவன்
சந்து தோளொடு தாள் இற ஊன்றினான்
மந்தி பாய் பொழில் சூழும் மாற்பேறு என
அந்தம் இல்லது ஓர் இன்பம் அணுகுமே. 10

*திருச்சிற்றம்பலம்.*

# திருவொற்றியூர்

இறைவன் : படம்பக்க நாதர் இறைவி : வடிவுடை அம்மை

கண்டார் காதலிக்கும் காளத்தியை வணங்கிய நம்பிகள் அங்கிருந்த வண்ணமே திருப்பருப்பதம், திருகேதாரம் ஆகிய தலங்களை இறைஞ்சிப் பாடி சில நாட்கள் மகிழ்ந்து தங்கி, புவியுட் சிவலோகம்போலத் திங்கள் முடியார் அமர்ந்த திருவொற்றியூரைச் சென்றடைந்தார். அப்போது, ஏட்டு வரியில் **ஒற்றியூர் நீங்கல்** என்ன எழுத்தறியும் இறைவனை போற்றி, ஊனும் உயிரும் கரைந்துருக உச்சிக் குவித்த கையினுடன் அருளிய திருப்பதிகம் இது.

*திருச்சிற்றம்பலம்.*

திருமுறை : (7) பண் : குறிஞ்சி

பாட்டும் பாடிப் பரீவித் திரிவார்
ஈட்டும் வினைகள் தீர்ப்பார் கோயில்
காட்டுங் கலமுந் திமிலுங் கரைக்கே
ஓட்டுந் திரைவாய் ஒற்றியூரே. 1

பந்துங் கிளியும் பயிலும் பாவை
சிந்தை கவர்வார் செந்தீ வண்ணார்
எந்தம் அடிகள் இறைவர்க் கிடம்போல்
உந்துந் திரைவாய் ஒற்றியூரே. 2

பவளக் கனிவாய்ப் பாவை பங்கன்
கவளக் களிற்றின் உரிவை போர்த்தான்
தவழும் மதிசேர் சடையாற் கிடம்போல்
உகளுந் திரைவாய் ஒற்றியூரே. 3

என்ன தெழிலும் நிறையும் கவர்வான்
புன்னை மலரும் புறவில் திகழும்
தன்னை முன்னம் நினைக்கத் தருவான்
உன்னப் படுவான் ஒற்றியூரே. 4

பணங்கொள் அரவம் பற்றிப் பரமன்
கணங்கள் சூழக் கபாலம் ஏந்தி
வணங்கும் இடைமென் மடவார் இட்ட
உணங்கல் கவர்வான் ஒற்றியூரே. 5

படையார் மழுவன் பால்வெண் ணீற்றன்
விடையார் கொடியன் வேத நாவன்
அடைவார் வினைகள் அறுப்பான் என்னை
உடையான் உறையும் ஒற்றியூரே. 6

சென்ற புரங்கள் தீயில் வேவ
வென்ற விகிர்தன் வினையை வீட்ட
நன்று நல்ல நாதன் நரையே
றொன்றை உடையான் ஒற்றியூரே. 7

கலவ மயில்போல் வளைக்கை நல்லார்
பலரும் பரவும் பவளப் படியான்
உலகின் உள்ளார் வினைகள் தீர்ப்பான்
உலவுந் திரைவாய் ஒற்றியூரே. 8

பற்றி வரையை எடுத்த அரக்கன்
இற்று முரிய விரலால் அடர்த்தார்
எற்றும் வினைகள் தீர்ப்பார் ஓதம்
ஒற்றுந் திரைவாய் ஒற்றியூரே. 9

ஒற்றி யூரும் அரவும் பிறையும்
பற்றி யூரும் பவளச் சடையான்
ஒற்றி யூர்மேல் ஊரன் உரைத்த
கற்றுப் பாடக் கழியும் வினையே. 10

*திருச்சிற்றம்பலம்*

# திருவாரூர்

இறைவன் : புற்றிடங்கொண்ட பெருமான்
இறைவி : அல்லியங்கோதை

## திருத்தொண்டத்தொகை

திருவாரூரில் பரவையாரை மணம் புணர்ந்து மகிழ்வுடன் இறைவனுக்கு பாமாலைகளைச் சாற்றி வாழ்ந்துவரும் நாட்களில் ஒருநாள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் பூங்கோயிலை அடைந்து, தேவாசிரிய மண்டபத்தில் எண்ணிலாத சிவனடியார்கள் இருக்கக் கண்டு இவர்களுக்கு நான் அடியன் ஆகும் நாள் எந்நாள் என்ற ஏக்கத்துடன் திருக்கோயிலின் வாயிலின் முன்பணிந்து உள்ளே புகுந்தார். அவரது எண்ணத்தை நிறைவேற்றும் வண்ணம் இறைவனும் எதிரிலே காட்சி கொடுத்து அடியார்களின் தொண்டின் பெருமையை சுந்தரருக்கு எடுத்துக் கூறி அவர்களைப் போற்றிப் பாடும்படி சுந்தரருக்கு ஆணையிட்டார். அடியார்களை நான் எவ்வாறு பாடுவேன் என்று சுந்தரர் வேண்ட இறைவனே தன் திருவாக்கால் **தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்** என்று அடியெடுத்துக் கொடுத்து **இசைப்பா மொழி** என்று கூறி மறைந்தார்

அந்த அடியே முதலாகக் கொண்டு, வன்தொண்டராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியதே திருத்தொண்டத் தொகையாகும்.

ஒவ்வொரு அடியாரையும் தனித்தே வணங்கி, புகழ்ந்தும், அடியார்களின் தன்மைகளை தொகையாகவும் தொகுத்தும் புகழ்ந்து, அவருக்கு பிற்காலத்திலும் வரும் அடியார்களையும் மனத்தில் கொண்டு நம்பி ஆரூரர் இப்பதிகத்தை அருமையாக அருளியுள்ளார்

இதுவே பெரிய புராணத்திற்கு மூலமாக அமைந்தது.

அடியார் வழிபாடு இல்லாத அரன் வழிபாடு முழுமை அடையாது என்பதையும், அடியார் புகழ் அரன் புகழைவிட மிகவும் பெரியது என்பதையும் தன்னைப் புகழ்வதற்கு பித்தா என்ற ஒரு சொல்லை எடுத்துக் கொடுத்த சிவபெருமான் அடியாரைப் புகழ சுந்தரருக்கு ஒரு முழு அடியை எடுத்துக் கொடுத்ததன் மூலம் நாம் உணர வேண்டும்.

*திருச்சிற்றம்பலம்*

திருமுறை : (7) பண் : கொல்லிக் கௌவாணம்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப் பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 1

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தர்க் கடியேன்
ஏனாதி நாதன்றன் அடியார்க்கும் அடியேன்

கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்
கடவூரிற் கலயன்றன் அடியார்க்கும் அடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயற் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 2

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கு மடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 3

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கு மடியேன்
பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன்
ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கர்க் கடியேன்
அருநம்பி நமிநந்தி யடியார்க்கு மடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 4

வம்பறா வரிவண்டு மணநாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்

நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கர்க்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 5

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கும் அடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத் தொண்டர்க் கடியேன்
கார்கொண்ட கொடைகழறிற் றறிவார்க்கும் அடியேன்
கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 6

பொய்யடிமை யில்லாத புலவர்க்கும் அடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச் சோழர்க் கடியேன்
மெய்யடியான் நரசிங்க முனையரையர்க் கடியேன்
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தர்க் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 7

கறைக்கண்டன் கழலடியே காப்புக் கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்
நிறைகொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்

அறைக் கொண்ட வேல்நம்பி முனையடுவாற் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 8

கடல்சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும் தஞ்சை
மன்னவனாஞ்செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்
புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 9

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 10

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய்உலகாண்ட செங்கணார்க் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்
ஆரூரில் அம்மானுக் கன்பரா வாரே. 11

*திருச்சிற்றம்பலம்*

# எட்டாம் திருமுறை

## சிவபுராணம்

### சிவனது அநாதி முறைமையான பழமை

(அருவ நிலை இறைவன் ஆன்மாக்களைப் பல்பிறவிச் சுழலுள் ஆட்படுத்தி, திருவருளுக்கு உரியனவாகச் செய்யும் படிநிலை சிவனுடைய அருள்நிலைமை)

திருப்பெருந்துறையில் அருளியது.

(கலி வெண்பா)

*திருச்சிற்றம்பலம்*

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க.

வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க

ஈச னடிபோற்றி எந்தையடி போற்றி !
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி !
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி !
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி !
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி !

ஆராத இன்பம் அருளு மலை போற்றி !
சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்

அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் மோய வுரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டுஇன்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவு இறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்

சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து. 95

*திருச்சிற்றம்பலம்.*

# அருள் பத்து

## மகாமாயாசுத்தி.

(மாயையினின்றும் நீங்குதல் – அதெந்து வெனக் கேள்! எனல் – உளம் கனிந்து அழைக்க, தன்னை ஏன்றுகொள் என வேண்டுதல்).

திருப்பெருந்துறையில் அருளியது.

(எழுசீர் விருத்தம்)

*திருச்சிற்றம்பலம்*

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழல் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத்(து) அயனும்மா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித்(து) அழைத்தால்
அதெந்துவே என்(று) அருளாயே. 1

நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலமிட்டலறி
உலகெலாம் தேடியும் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்

அருத்தனே அடியேன் ஆதரித்(து) அழைத்தால்
அதெந்துவே என்(று) அருளாயே. 2

எங்கள்நா யகனே என்னுயிர்த் தலைவா
ஏலவார் குழலிமார் இருவர்
தங்கள்நா யகனே தக்கநற் காமன்
தனதுடல் தழலெல விழித்த
செங்கண்நா யகனே திருப்பருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அங்கணா அடியேன் ஆதரித்(து) அழைத்தால்
அதெந்துவே என்(று) அருளாயே. 3

கமலநான் முகனும் கார்முகில் நிறத்துக்
கண்ணனும் நண்ணுதற்(கு) அரிய
விமலனே எமக்கு வெளிப்படாய் என்ன
வியன்தழல் வெளிப்பட்ட எந்தாய்
திமிலநான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அமலனே அடியேன் ஆதரித்(து) அழைத்தால்
அதெந்துவே என்(று) அருளாயே. 4

துடிகொள்நே ரிடையாள் சுரிகுழல் மடந்தை
துணைமுலைக் கண்கள்தோய் சுவடு
பொடிகொள்வான் தழலில் புள்ளிபோ லிரண்டு
பொங்கொளி தங்குமார் பின்னே
செடிகொள்வான் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அடிகளே அடியேன் ஆதரித்(து) அழைத்தால்
அதெந்துவே என்(று) அருளாயே. 5

துப்பனே தூயாய் தூயவெண் ணீறு
துதைந்தெழு துளங்கொளி வயிரத்(து)
ஒப்பனே உன்னை உள்குவார் மனத்தில்
உறுசுவை அளிக்கும் ஆரமுதே
செப்பமா மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அப்பனே அடியேன் ஆதரித்(து) அழைத்தால்
அதெந்துவே என்(று) அருளாயே. 6

மெய்யனே விகிர்தா மேருவே வில்லா
மேவலர் புரங்கள்மூன்று எரித்த
கையனே காலால் காலனைக் காய்ந்த
கடுந்தழற் பிழம்பன்ன மேனிச்
செய்யனே செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
ஐயனே அடியேன் ஆதரித்(து) அழைத்தால்
அதெந்துவே என்(று) அருளாயே. 7

முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டறா மலர்பறித் திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யும்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அத்தனே அடியேன் ஆதரித்(து) அழைத்தால்
அதெந்துவே என்(று) அருளாயே. 8

மருளனேன் மனத்தை மயக்கற நோக்கி
மறுமையோ(டு) இம்மையும் கெடுத்த

பொருளனே புனிதா பொங்குவாள் அரவம்
கங்கைநீர் தங்குசெஞ் சடையாய்
தெருளுநான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருளனே அடியேன் ஆதரித்(து) அழைத்தால்
அதெந்துவே என்(று) அருளாயே. 9

திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்த மேவியசீர்
இருந்தவா(று) எண்ணி ஏசறா நினைந்திட்(டு)
என்னுடை எம்பிரான் என்(று) என்(று)
அருந்தவா நினைந்தே ஆதரித்(து) அழைத்தால்
அலைகடல் அதனுளே நின்று
பொருந்தவா கயிலை புகுநெறி இதுகாண்
போதராய் என்(று) அருளாயே. 10

*திருச்சிற்றம்பலம்.*

## திருக்கோவையார்

*திருச்சிற்றம்பலம்*

சிறைவான் புனல் தில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலின் ஆய்ந்தவொண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ அன்றி ஏழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென்கொ லாம்புகுந் தெய்தியதே.

பொன்னும் மணியும் பவளமும் போன்று பொலிந்திலங்கி
மின்னுஞ் சடையோன் புலியூர் விரவாதவரினுள் நோய்
இன்னு மறிகில வாலென்னை பாவம் இருங்கழிவாய்
மன்னும் பகலே மகிழ்ந்திரை தேரும்வண் டானங்களே.

காரணி கற்பகங் கற்றவர் நற்றுணை பாணரொக்கல்
சீரணிசிந்தா மணியணி தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் தக்கோர் தஞ்சங்க நிதிவிதிசேர்
ஊருணி உற்றவர்க் கூரன்மற்று யாவர்க்கும் ஊதியமே.

*திருச்சிற்றம்பலம்*

# ஒன்பதாம் திருமுறை

## திருவிசைப்பா

### சேந்தனார் அருளியது.

பாடலங் காரப் பரிசில்கா(சு) அருளிப்
பழுத்தசெந் தமிழ்மலர் சூடி
நீடலங் காரத்(து) எம்பெரு மக்கள்
நெஞ்சினுள் நிறைந்துநின் றானை
வேடலங் காரக் கோலத்தின் அமுதைத்
திருவீழி மிழலையூ ராளும்
கேடிலங் கீர்த்திக் கனககற் பகத்தைக்
கெழுமுதற்(கு) எவ்விடத் தேனே.

### கருவூர்த் தேவர் அருளியது.

மங்கையோ டிருந்தே யோகுசெய் வானை
வளர்இளந் திங்களை முடிமேல்
கங்கையோ(டு) அணியும் கடவுளைக் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானை

அங்கையோ டேந்திப் பலிதிரி கருவூர்
அறைந்தசொல் மாலையால் ஆழிச்
செங்கையோடு உலகில் அரசுவீற் றிருந்து
திளைப்பதுஞ் சிவனருட் கடலே.

## திருப்பல்லாண்டு

**சேந்தனார் அருளியது.**

*திருச்சிற்றம்பலம்*

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு
பெற்றேன், பெற்றதார் பெறுவாருலகில்?
ஊரும் உலகுங் கழற
உழறி **உமைமண வாளனுக்காட்**
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

சேவிக்க வந்தயன் இந்திரன்
செங்கண்மால் எங்குந்திசை திசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக்
குழாங்குழா மாய்நின்று கூத்தாடும்
ஆவிக்(கு) அமுதைஎன் ஆர்வத்
தன்த்தினை அப்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத்(து) அப்புறத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

*திருச்சிற்றம்பலம்*

# பத்தாம் திருமுறை

**திருமூல நாயனார் அருளியது.**

*திருச்சிற்றம்பலம்*

பின்னைநின்றென்னே பிறவி பெறுவது
முன்னைநன்றாக முயல்தவஞ் செய்கிலர்
என்னைநன்றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன்றாக தமிழ் செய்யு மாறே

யான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரந்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே.

ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கையுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந் துண்ணுங் காலம் அறிமினே.

பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிடுஞ்
சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே.

ஈச னடியார் இதயங் கலங்கிடத்
தேசமும் நாடுஞ் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசம தாகுமே நந்நந்தி ஆணையே.

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே.

அச்சிவன் உள்நின்ற அருளை அறிந்தவர்
உச்சியம் போதாக வுள்ளமர் கோவிற்குப்
பிச்சை பிடித்துண்டு பேத மறநினைந்து
இச்சைவிட்டு ஏகாந்தத் தேறி யிருப்பாரே.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி யில்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே.

ஆசூச மில்லை அருநிய மத்தருக்கு
ஆசூச மில்லை அரனைஅர்ச் சிப்பவர்க்கு
ஆசூச மில்லையாம் அங்கி வளர்ப்போர்க்கு
ஆசூச மில்லை அருமறை ஞானிக்கே.

*திருச்சிற்றம்பலம்*

# பதினோராந் திருமுறை

**காரைக்கால் அம்மையார் அருளிய அற்புத திருவந்தாதி.**

*திருச்சிற்றம்பலம்*

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்-நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்ற தீர்ப்பது இடர்.

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும்-சுடர்உருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்கு
அண்பறாது என்னெஞ்சு அவர்க்கு.

இறைவனே எவ்வுயிருந் தோற்றுவிப்பான் தோற்றி
இறைவனே ஈண்டிறக்கஞ் செய்வான்-இறைவனே
எந்தாய் எனஇரங்கும் எங்கள்மேல் வெந்துயரம்
வந்தால் அதுமாற்று வான்.

தகவுடையார் தாமுளரேல் தாரகலஞ் சாரப்
புகவிடுதல் பொல்லாது கண்டீர்-மிகவடர
ஊர்ந்திடுமா நாகம் ஒருநாள் மலைமகளைச்
சார்ந்திடுமே லேபாவந் தான்.

அரவமொன் றாகத்து நீநயந்து பூணேல்
பரவித் தொழுதிரந்தோம் பன்னாள்-முரணழிய
ஒன்னாதார் மூவெயிலும் ஓரம்பால் எய்தானே
பொன்னாரம் மற்றொன்று பூண்.

திருமார்பில் ஏனச் செழுமருப்பைப் பார்க்கும்
பெருமான் பிறைக்கொழுந்தை நோக்கும்-ஒருநாள்
இதுமதியென் றென்றாக இன்றளவுந் தேராது
அதுமதியொன் றில்லா அரா.

சடைமேல்அக் கொன்றை தருகனிகள் போந்து
புடைமேவித் தாழ்ந்தனவே போலும்-முடிமேல்
வலப்பாலக் கோலமதி வைத்தான்தன் பங்கின்
குலப்பாவை நீலக் குழல்.

கண்டெந்தை என்றிறைஞ்சிக் கைப்பணியான் செய்யேனே
அண்டம் பெறினும் அதுவேண்டேன்-துண்டஞ்சேர்
விண்ணாளுந் திங்களாய் மிக்குலகம் ஏழினுக்குங்
கண்ணாளா ஈதென் கருத்து.

காலனையும் வென்றோம் கடுநரகம் கைகழன்றோம்
மேலை இருவினையும் வேரறுத்தோம்-கோல
அரணார் அவிந்தழிய வெந்தீயம் பெய்தான்
சரணார விந்தங்கள் சார்ந்து.

கண்ணாரக் கண்டும்என் கையாரக் கூப்பியும்
எண்ணார எண்ணத்தால் எண்ணியும்-விண்ணோன்
எரியாடி என்றென்றும் இன்புறுவன் கொல்லோ
பெரியானைக் காணப் பெறின்.

உரையினால் இம்மாலை அந்தாதி வெண்பாக்.
கரைவினாற் காரைக்காற் பேய்சொல்-பரவுவார்
ஆராத அன்பினோடு அண்ணலைச்சென் றேத்துவார்
பேராத காதல் பிறந்து.

*திருச்சிற்றம்பலம்.*

## காரைக்கால் அம்மையார் துதி

ஆலங்காடதனில் அண்டமுற நிமிர்ந்து ஆடுகின்ற
கோலங்காண் பொழுது **கொங்கை திரங்கி** என்றெடுத்து பாடிய
**பேயார்** திருவடிகள் போற்றி! போற்றி!!

மடுத்த புனல் வேணியினார் **அம்மை** என மதுரமொழி கொடுத்தருளப்
பெற்ற, குலவிய தாண்டவத்தில் அவர் எடுத்தருளுஞ் சேவடிக்கீழ்
என்றும் இருக்கின்ற அம்மையார் திருவடிகள் போற்றி! போற்றி!!

ஆதியோடு அந்தமில்லான் அருள்நடம் செய்யும்போது
கீதமுன் பாடும் காரைக்கால் **அம்மையார்** கிளரொளி
மலர்த்தாள் போற்றி! போற்றி!!

தெய்வச்சேக்கிழார் அருளிய

# பன்னிரண்டாம் திருமுறை

**திருத்தொண்டர் புராணம்**

*திருச்சிற்றம்பலம்*

எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும்
உண்மையாவது பூசனை என உரைத்தருள
அண்ணலார் தமை அர்ச்சனை புரிய ஆதரித்தாள்
பெண்ணில் நல்லவளாயின பெருந்தவக் கொழுந்து.

படியில் நீடும் பத்திமுதல் அன்பு நீரில் பணைத்தோங்கி
வடிவு நம்பி ஆரூரர் செம்பொன் மேனி வனப்பாக
கடிய வெய்ய இருவினையின் களைகட்டெழுந்து கதிர் பரப்பி
முடிவிலாத சிவபோகம் முதிர்ந்து முறுகி விளைந்ததால்

தொண்டனார் தமக்கருளிச் சூழ்ந்து இமையோர் துதிசெய்ய
இண்டைவார் சடைமுடியார் எழுந்தருளிப் போயினார்
வண்டுவார் குழற்கொடியைக் கைப்பிடிக்க மணக்கோலம்
கண்டவர்கள் கண்களிப்பக் கலிக்காமனார் புகுந்தார்.

மண்ணிறைந்த பெருஞ்செல்வத் திருவொற்றி யூர்மன்னும்,
எண்ணிறைந்த திருத் தொண்டர் எழிற்பதியோ ருடன் ஈண்டி
உண்ணிறைந்த மகிழ்ச்சியுடன் உம்பர்பூ மழை பொழியக்
கண்ணிறைந்த பெருஞ்சிறப்பிற் கலியாணஞ் செய்தளித்தார்.

சடைமருங்கில் இளம்பிறையும் தனிவிழிக்கும் திருநுதலும்
இடமருங்கில் உமையாளும் எம்மருங்கும் பூதகணம்
புடைநெருங்கும் பெருமையும்முன் கண்டுஅரசன் போற்றிஇசைப்ப
விடைமருவும் பெருமானும் விறல்வேந்தற்கு அருள் கொடுத்தான்

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியாரவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்

*திருச்சிற்றம்பலம்*

## திருச்சுற்றில் உள்ள தெய்வங்களுக்கான துதி

### மூத்த பிள்ளையார் துதி

பொருந்தாத செய்கை பொலியக் கண்டேன்
போற்று இசைத்து விண்ணோர் புகழக் கண்டேன்
பரிந்தார்க்கு அருளும் பரிசும் கண்டேன்
பாராகிப் புனல்ஆகி நிற்கை கண்டேன்
விருந்தாய்ப் பரந்த தொகுதி கண்டேன்
மெல்லியலும் **விநாயகனும்** தோன்றக் கண்டேன்
மருந்தாய்ப் பிணி தீர்க்குமாறு கண்டேன்
வாய்மூர் அடிகளை நான் கண்டவாறே.

### முருகப் பெருமான் துதி

முன்னையார் மயில்ஊர்தி **முருகவேள்**
தன் ஐயார் எனில் தான் ஓர் தலைமகன்
என்னை ஆளும் இறையவன் எம்பிரான்
பின்னையார் அவர் பேரெயிலாளரே.

### தென்முகக் கடவுள் துதி

உரித்தானை மதவேழம்தன்னை மின்னார்
ஒளி முடி எம்பெருமானை உமை ஓர்பாகம்
தரித்தானைத் தரியலர் தம் புரம் எய்தானை
தன் அடைந்தார் தம் வினைநோய் பாவம் எல்லாம்
அரித்தானை ஆல்அதன்கீழ் இருந்து நால்வர்க்கு
அறம் பொருள் வீடு இன்பம் ஆறு அங்கம் வேதம்
தெரித்தானைத் திரு நாகேச்சரத்து உளானைச்
சேராதார் நன்நெறிக்கண் சேராதாரே.

### பன்னிரு திருமுறைகளிலும் போற்றப்பெறும் தனி நாயகரான சிறிய பெருந்தகையார் சண்டேசுர நாயனார் துதி

அண்டர் பிரானுந் தொண்டர்தமக் கதிப னாக்கி அனைத்துநாம்
உண்ட கலமும் உடுப்பனவும் சூடுவனவும் உனக்காகச்
சண்டீ சனுமாம் பதந்தந்தோம் என்றங் கவர்பொற்றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக் கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார்.

*திருச்சிற்றம்பலம்*

திருச்சிற்றம்பலம்

# கற்பகமே யான் உன்னை விடுவேன் அல்லேன் கனகம் மாமணி நிறத்து எம் கடவுளானே.




**மண்** அதனில் ஐந்தை மா **நீ**ரில் நான்கை
வயங்கு **எரி**யில் மூன்றை **மாருத**த்து இரண்டை
**விண்** அதனில் ஒன்றை விரிகதிரைத்
தண் மதியைத் தாரகைகள்தம்மில் மிக்க
எண் அதனில் எழுத்தை ஏழ்இசையைக் காமன்
எழில் அழிய எரி உமிழ்ந்த இமையா நெற்றிக்
கண்ணவனைக் கற்குடியில் விழுமியானைக்
**கற்பகத்தைக்** கண் ஆரக் கண்டேன் நானே.

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

**எத்தானத்தும்...**

**கயிலாய நாதனையே காணலாமே**



**தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!**

**காவாய் கனகத் திரளே போற்றி! கயிலை மலையானே போற்றி! போற்றி!!**